


ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்



ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
16, ஸ்ரீராமகிருஷ்ண மடம் ரோடு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

வெளியிடுபவர் :
© தலைவர்,
ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.

ஆறாம் பதிப்பு
VI-5M 3C-1-92
ISBN 81-7120-177-6

அச்சிட்டவர் :
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.

முன்னுரை

ஸ்ரீராமகிருஷ்ணர் நுட்பமான வேதாந்த உண்மைகளைக் கதைகளின் வாயிலாக மிகமிக எளிய முறையிலே விளக்கியிருக்கிறார். அப்படி அவரால் அருளப் பெற்ற கதைகள் சிலவற்றை இந்த நூலில் தொகுத்துக் கொடுத்திருக்கிறோம்.

மக்களுக்கு எதைச் சொன்னால் இரசிப்பார்களோ, சுவையாக இருக்குமோ—அவற்றை ஸ்ரீராமகிருஷ்ணர் தமது கதைகளில் சொல்லவில்லை. மக்களுக்கு எது தேவையோ, எது உண்மையான நலனை அவர்களுக்குத் தருமோ—அவற்றையே ஸ்ரீராமகிருஷ்ணதேவர் தமது கதைகளில் சொல்லியிருக்கிறார்.

கேட்பவர்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காகவோ, எதையாவது பேசிப் பொழுதைப் போக்க வேண்டும் என்பதற்காகவோ ஸ்ரீராமகிருஷ்ணர் இந்தக் கதைகளைச் சொல்லவில்லை. உலக மக்களின் உள்ளம் உயர வேண்டும் என்பதற்காகவே, உயர்ந்த ஓர் உண்மையை விளங்க வைப்பதற்காக, ஸ்ரீராமகிருஷ்ணரிடமிருந்து எழுந்த எழில்மிக்க கதைகளே இவை. இந்தக் கதைகளில் ஒவ்வொன்றுமே வெறும் பொழுது போக்குக் கதையாக இல்லாமல், மிகுந்த பொருட்செறிவுடன் அடிப்படையாக ஓர் உண்மையை விளக்குவதைப் பார்க்கலாம்.

குருடனுக்கு ஊன்றுகோல் தேவைப்படுவதைப் போல, விழிகள் இருந்தும் ஞானம் இல்லாததால் குருடர்களாக உள்ள உலக மக்களுக்கு ஊன்றுகோலாக விளங்கி வழிகாட்ட வல்லவை இந்தக் கதைகள். இவற்றைச் சரியாகப் புரிந்து கொண்டு வாழ்க்கையில் அனுஷ்டிப்பவர்கள் பாக்கியவான்கள். அவர்களுக்கு இந்தக் கதை

கள் மந்திரக்கோலாக அமைந்து ஞானவிழிகளையும் பெற்றுத் தந்துவிடும்.

முன்பு எங்களால் வெளியிடப்பட்ட 'உபகதைகள்' 'ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள்' ஆகிய இரண்டு நூல்களும் இப்போது வெளிவரும் இந்த நூலைத் தயாரிப்பதற்குப் பெரிதும் துணைபுரிந்தன. இந்தப் புதிய நூலில் தமிழ்நடை எளிமையாக்கப்பட்டிருப்பதோடு, கதைகள் தெரிவிக்கும் உட்பொருளை விளக்கும் கருத்துக்களையும் ஆங்காங்கே இணைத்துத் தந்திருக்கிறோம்.

பரமஹம்சர் புகட்டிய பாரமார்த்திக உண்மைகளைத் தாங்கிய இந்நூலைக் குழந்தைகளும் படிக்கலாம். குழந்தைப் பருவத்தைக் கடந்துவிட்டவர்களும் சிந்தித்துப் பயன் பெறலாம். தமிழ்கூறும் நல்லுலகம் இந்த நூலை வரவேற்று மிகுந்த பயனைப் பெற வேண்டும் என்ற பிரார்த்தனையுடன், பொதுமக்கள் முன்பு பணிவன்புடன் சமர்ப்பிக்கிறோம்.

—பதிப்பாளர்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4
ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி
பிப்ரவரி 20, 1977

பொருளடக்கம்

—0—

ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்

ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்

I. உலக ஆசைகள் துன்பத்தைத் தரும்

1. கடவுள் கற்பகமரம் போன்றவர்

ஒரு நாடோடி இருந்தான். அவன் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்துகொண்டிருந்தான். ஒரு நாள் அவன் ஒரு பெரிய மைதானத்தை அடைந்தான். அன்றைய தினம் கடுமையான வெயிலில் நீண்ட தூரம் அவன் அலைந்திருந்தான். எனவே உடம்பெல்லாம் அவனுக்கு வேர்த்துக்கொட்டியது. அதோடு களைப்படைந்து சோர்ந்தும் போயிருந்தான். தூரத்தில் ஒரு மரம் இருந்தது. அதைப் பார்த்ததும் களைப்பை நீக்கிக்கொள்வதற்காக மரத்தின் நிழலை அடைந்து உட்கார்ந்தான். காற்று இதமாக வீசியது. அந்தக் காற்று அவனுக்கு இன்பமாக இருந்தது.

'ஆகா! இப்போது நல்ல படுக்கை ஒன்று இருந்தால் எவ்வளவு சுகமாகத் தூங்குவேன்!' என்று தனக்குத் தானே அவன் சொல்லிக்கொண்டான். இந்த எண்ணம் உதித்து மறைவதற்குள்ளாகவே,

தனக்குப் பக்கத்தில் மெல்லிய பஞ்சணை ஒன்று இருப்பதைப் பார்த்தான். அது எப்படி அங்கு வந்தது என்பது அவனுக்கே தெரியவில்லை. யோசித்துப் பார்த்தான்; திகைத்தான். உண்மையில் அவன் கேட்டதை எல்லாம் கொடுக்கும் கற்பக மரத்தின் அடியில் உட்கார்ந்திருந்தான். ஆனால் அது அவனுக்குத் தெரியவில்லை.

மேற்கொண்டு யோசித்துப் பார்க்காமல், களைப்பு மேலிட்டுப் போயிருந்த அவன், அந்தப் பஞ்சணைமீது சுகமாகப் படுத்துக்கொண்டான். சற்று நேரம் கழிந்தது. பிறகு அவன், 'உடம்பெல்லாம் ஒரே வலியாய் இருக்கிறதே! கைகால்களைப் பிடித்து விட இரண்டு இளம் பெண்கள் இப்போது இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று நினைத்தான். அவன் அப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போதே, இரண்டு இளம் பெண்கள் தோன்றித் தன் கால்களைப் பிடித்து விடுவதைப் பார்த்தான்.

அவன் உள்ளத்தில் உவகை பெருக்கெடுத்து ஓடியது. ஆனந்தத்தில் இருப்பவனுக்கு அவர்கள் வந்த அதிசயம் தோன்றுமா? வலி சற்றுக் குறையவும் பசி உண்டாவதைக் கண்டான். 'ஆகா! என்ன ஆச்சரியம்! நினைத்ததெல்லாம் இந்த இடத்தில் கிடைக்கிறதே! படுக்கை வேண்டும் என்று நினைத்தேன். படுக்கை வந்தது. கைகால்களைப் பிடித்து வலி நீக்க இளம்பெண்களை விரும்பினேன். இதோ, அவர்களும் வந்து கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவை எல்லாம் கிடைத்த போது பசியார உணவு வராதா? இப்போது அறு

சுவை உண்டி கிடைத்தால், எவ்வளவு பிரமாத மாய் இருக்கும்!' என்று நினைத்தான்.

இப்படி அவன் நினைத்தானே இல்லையோ, உடனே தன் முன்னால் அறுசுவையோடு கூடிய உணவு வகைகள் இருப்பதைப் பார்த்தான். எப்படி அவை மாயமாய் வந்தன என்பதைப் பற்றி சிந்திக்கவில்லை. தன் பசியார அவற்றை அவன் திருப்தியுடன் சாப் பிட்டு முடித்தான். பிறகும் அவன் அந்தப் பஞ்சணை யின் மீது நன்றாகச் சாய்ந்து படுத்துக்கொண்டான்.

நினைப்பவை எல்லாம் கிடைப்பது பற்றி அந்த நாடோடி மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். இனி அவ னுக்கு வேண்டியது ஒன்றும் இல்லை போலும்! அன் றைய தினம் தனக்கு ஏற்பட்ட அதிசயச் செயல் களைப் பற்றிச் சிந்தித்தான். அப்படிச் சிந்தித்து மகிழ்ந்து கொண்டிருக்கும்போதே, அவனது உள் ளத்தில் ஒருவிதப் பயம் உண்டாயிற்று; இப்போது ஒரு புலி இங்கே தோன்றினால் என்ன ஆகும்?' என்று நினைத்தான். அந்த எண்ணம் வந்த உடனேயே ஒரு பெரிய காட்டுப் புலி அங்குத் தோன்றியது. அது அவன் மீது பாய்ந்து அவனை அடித்துக் கொன்று விட்டது.

இம்மாதிரிதான் உலகத்தவர் அனைவரும் ஆசா பாசத்தினால் கெடுகிறார்கள். அவர்களிடம் புத்தி ஒரு நிலையாக இருக்காது. நீயும் உன் தியான காலத் தில் பொருளையும் புகழையும் மற்றவற்றையும் விரும்பினால், அவற்றைப் பெற முடியும். ஏனென் றால், விரும்பியதை எல்லாம் தரும் கற்பக மரம்

போன்றவர் கடவுள். எதை ஒருவன் விரும்பினாலும் அதை அந்த மரம் கொடுத்துவிடும். ஆனால், அப்படி நீ விரும்பியதைப் பெற்று மகிழ்ந்து கொண்டிருக்கும் போது, 'புலி வந்துவிட்டால்?' என்பதைப் போன்ற ஒரு பயம் உன்னை அறியாமலே உன் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும். அந்தப் புலி—நோய், பிணி, மரணம், செல்வம், புகழ் ஆகியவையாக இருக்கும். இவை புலியினால் வரும் துன்பங்களைக் காட்டிலும் பல ஆயிரம் மடங்கு பயங்கரமானவையாக இருந்து உன்னை வீழ்த்திவிடும்.

எனவே, தியானம், பக்தி, ஜபம் முதலிய நல்ல ஒழுக்கங்களைக் கொண்டு ஒருவன் தன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்து வரும்போது சிறிது சிறிதாக உலக ஆசைகளை எல்லாம் விட்டுவிட வேண்டும்.

2. மீனவப் பெண்கள்

ஒரு நாள் ஓர் ஊரிலே மாலை சந்தை கூடியது. சில செம்படவப் பெண்கள் அங்கு மீனைக் கொண்டு வந்து விற்றார்கள். விற்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தார்கள். அப்போது மாலை சாய்ந்து இருள் சூழ்ந்தது. எதிர்பாராத விதமாகக் கடுமையான மழை பிடித்துப் பாட்டம் பாட்டமாகப் பெய்யத் தொடங்கியது. பாவம்! அவர்கள் அந்த நிலையில் என்ன செய்ய முடியும்? அருகில் ஒரு பூக்காரனின் குடிசை இருப்பதைப் பார்த்தார்கள்.

மழையில் ஒதுங்கிக் கொள்வதற்காக அதை நோக்கி ஓடினார்கள்.

அந்தப் பூக்காரன் மிகவும் நல்லவன். மீனவப் பெண்களின் துன்பம் அவனுக்குப் புரிந்தது. எனவே அவன் தன் வீட்டில் ஓர் அறையில் மீனவப் பெண்களை அன்றிரவு தங்க அனுமதித்தான். எதிர்பாராத விதத்தில் கிடைத்த உதவி இது. அதை மகிழ்ச்சியுடன் செம்படவப் பெண்கள் ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் அனைவரும் பூக்காரன் காட்டிய அறையில் சென்று தங்கினார்கள். அந்த அறையில் கமகம வென்று நறுமணம் சூழ்ந்திருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தார்கள். ஒரு மூலையிலே சில பூக்கூடைகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை வாடிக்கையாகக் கொடுக்கும் சிலருக்கு மறுநாள் காலையில் கொடுப்பதற்காகப் பூக்காரன் அங்கே வைத்திருந்தான்.

ஆனால், பூக்களின் நறுமணம் காரணமாக, இரவு நெடுநேரம் வரையிலும் மீனவப் பெண்களுக்குத் தூக்கம் வரவில்லை. அவர்களுடைய நிலைமையைக் கண்ட பூக்காரனின் மனைவி, ''ஏனம்மா! நீங்கள் அனைவரும் தூக்கம் இல்லாமல் இங்கும் அங்கும் புரண்டு கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள். அவளுக்கு ஒரு செம்படவப் பெண் பதில் சொன்னாள்: ''தோழி, எங்களுக்குக் காரணம் தெரியவில்லை. ஒரு வேளை இந்தப் பூக்களின் மணம் எங்கள் தூக்கத்தைக் கெடுக்கிறது போலும்! எங்களுடைய மீன் கூடையைத் தருகிறாயா? ஒருவேளை அது எங்களைத் தூங்கச் செய்யும்.'' பிறகு மீனவப் பெண்கள் தங்களுடைய மீன் கூடைகளின் மேல் சிறிது நீரைத்

தெளித்து, மூக்குக்குப் பக்கத்தில் வைத்துக்கொண்டார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் அயர்ந்து தூங்க ஆரம்பித்துவிட்டனர். இரவெல்லாம் அவர்கள் குறட்டை விட்டு நன்ருகத் தூங்கிஞர்கள்.

நீண்டகாலப் பழக்க வழக்கங்களின் சக்தி இப்படிப்பட்டது! உலக ஆசைகளுக்கு உட்பட்டு இலௌகிக வாழ்க்கை வாழ்பவர்கள் பரிசுத்த, பற்றற்ற தன்மைகளேயோ இடங்களேயோ நாடிஞல், பழக்க வாசனை காரணமாக அமைதியிழந்து தவிப்பார்கள்.

3. திருடனுக்குத் திருட்டுப் புத்தி

ஒரு முறை சாது ஒருவர் வழியோரத்தில் சமாதியில் ஆழ்ந்திருந்தார். அந்த வழியாக ஒரு திருடன் போஞன். அவன் அந்தச் சாதுவைப் பார்த்தான். அவரைப் பார்த்ததும் அவன், 'ஓகோ! இங்கே படுத்திருக்கும் இந்தப் பேர்வழியும் திருடன்தான் போலிருக்கிறது. இன்றிரவு சில வீடுகளில் திருடிவிட்டு வந்திருக்கிருன். களேப்பிஞல் இப்போது இங்கு படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிருன். சிறிது நேரத்தில் இவனேப் போலீஸ்காரர்கள் வந்து பிடித்துக் கொள்ளப்போகிருர்கள். நான் அதற்குள்ளாக வேறு எங்காவது ஓடிப்போய் ஒளிந்து கொள்வேன்' என்று நினைத்துக்கொண்டு அவசர அவசரமாக ஓடிப்போஞன்.

சிறிது நேரம் ஆயிற்று. அதே இடத்திற்கு ஒரு குடிகாரன் வந்து சேர்ந்தான். அவனும் சாதுவைப் பார்த்தான். 'ஓகோ! இப்படிப்பட்ட குடிகாரனுக இருக்கிருயே! மூக்கு முட்டக் குடித்துவிட்டு இப்போது இந்தப் பள்ளத்திலே விழுந்து கிடக்கிருயா! நானும் தான் குடித்திருக்கிறேன். ஆனுல், என் சுயபுத்தியை நான் நிதானமாக வைத்துக்கொண்டிருக்கிறேன் உன்னைப் போல நான் தள்ளாடி விழ மாட்டேன்' என்று அவன் பிதற்றிக்கொண்டே போய்விட்டான்.

கடைசியாக ஒரு சன்னியாசி அங்கே வந்தார். அவரும் சாதுவைப் பார்த்தார். பார்த்தவுடனே அவருக்கு, யாரோ ஒரு மகான் சமாதியில் ஆழ்ந்திருக்கிறுர் என்ற உண்மை புரிந்துவிட்டது. அவர் அந்தச் சாதுவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார். சமாதியில் ஆழ்ந்திருந்த சாதுவின் திருவடிகளைப் பற்றி இதமாக வருடத் தொடங்கினுர்.

இவ்விதம்தான் நமது உலக ஆசைகள், உண்மையான பக்தியையும் தூய்மைகளையும் நமக்குத் தெரியவிடாமல் மூடிவிடுகின்றன.

''மரத்தை மறைத்தது மாமதயானை.''

4. செம்படவர் சமாதி நீங்கிய கதை

ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் ஒரு முறை சமாதியில் இருந்தார். அப்போது அந்த நிலையிலேயே அவர் சமுத்திரத்தில் விழுந்துவிட்டார். சில மீனவர்கள் அவரை வலைவீசி இழுத்துக் கரையேற்றினுர்கள்.

வலையின் மூலமாக ஸ்ரீகிருஷ்ண சைதன்யரின் திருமேனியின் தொடர்பு அவர்களுக்கு ஏற்பட்டதனால், அவர்களுக்கும் ஒருவிதத் தெய்விகப் பரவச நிலை உண்டாயிற்று.

எனவே, அவர்கள் வலைகளைத் தூர வீசியெறிந்து விட்டு, பகவானுடைய புகழைப் பாடி ஆடஆரம்பித்தனர். அந்த நிலையில் பைத்தியக்காரர்களைப் போல நடந்து கொண்டார்கள். ஒருநிலையில் இல்லாமல் அங்கும் இங்கும் ஓடினார்கள். உறவினர் அனைவரும் சேர்ந்து அவர்களை மீண்டும் பழைய நிலைக்குத் திருப்ப முயற்சிசெய்தனர். ஆனால் அந்த முயற்சி பலிக்கவில்லை. செம்படவர்கள் குணமடைந்து மீண்டும் தங்களுடைய சுயநிலையைப் பெறவில்லை. இறுதியில் உறவினர் வருத்தத்துடன் ஸ்ரீகிருஷ்ண சைதன்யரை அணுகி விஷயத்தைச் சொன்னார்கள்.

ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் மீனவர்களின் துன்பங்களைக் கேட்டார். ''ஒரு புரோகிதர் வீட்டிலிருந்து கொஞ்சம் சோறு கொண்டுவாருங்கள். அதை இவர்களுடைய வாயில் போட்டால், பரவசநிலை நீங்கிப் பழைய நிலையை அடைந்துவிடுவார்கள்'' என்று ஒரு வழியை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். உறவினர் அப்படியே செய்தார்கள். மீனவர்களுக்கு இருந்த பரவசநிலை ஓடியே போய்விட்டது!

ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ள இந்தக் கதையிலிருந்து சில உண்மைகளை நாம் தெரிந்துகொள்கிறோம். மகான்களின் தொடர்பினால் நமது உள்ளமும் மேலான நிலையை அடையும்.

அப்படி மேலான நிலையை அடைந்தாலும், அதனுடைய பெருமையைத் தாழ்ந்த நிலையில் உள்ள நம் உறவினர் புரிந்துகொள்ள மாட்டார்கள். அவர்கள் பொறுக்க முடியாமல் நமது மனநிலைக்கு ஏதாவது இடையூறு செய்து கீழே இழுத்துவிட்டு விடுவார்கள்.

பக்திவாழ்வில் முன்னேற விரும்புகிறவன் யார் எதைக் கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிட்டு விடக் கூடாது. ஏனென்றால், அவர்களில் தீயவர்களும் ஒழுக்கம் இல்லாதவர்களுங்கூட இருப்பார்கள். குறிப்பாக புரோகிதத் தொழில் செய்பவர்களிடமிருந்து உணவு ஏற்கக் கூடாது. அப்படிச் செய்தால் பக்தியும் வளராது. ஏற்கனவே அரும்பாடு பட்டு வளர்த்துள்ள பக்தியையும் ஒருவன் இழந்து விடுவான்.

5. ஆணவம் அழிவைத் தரும்

ஒரு பணக்காரன் இருந்தான். அவன் தன் சொத்துக்களை மேற்பார்வையிட்டு நிர்வகிப்பதற்காக ஒரு காரியஸ்தனை நியமித்தான். அந்த காரியஸ்தனின் பொறுப்பில் ஏராளமான சொத்துக்கள் இருந்தன. இந்தச் சொத்துக்கள் யாருடையவை என்று யாராவது கேட்டால், அதற்கு அந்தக் காரியஸ்தன், ''இவை எல்லாம் என்னுடையவை. இந்த வீடு, இந்தத் தோட்டம் இவை எல்லாம் என்னைச் சேர்ந்தவை'' என்று கர்வத்துடன் பதில் சொல்லு

வான். இப்படி வீண் கர்வம் பேசித் திரிவதே அவனது வழக்கமாகிவிட்டது.

அந்தப் பணக்காரனுக்குச் சொந்தமாக ஒரு குளம் இருந்தது. அதில் அவன், 'யாரும் மீன் பிடிக்க கூடாது' என்ற கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்திருந்தான். ஒரு நாள் இந்த உத்தரவை மீறிக் காரியஸ்தன் மீன் பிடித்தான். அப்போது அந்தப் பணக்காரனே நேரில் அங்கு வந்து அதைப் பார்த்துவிட்டான். தன் காரியஸ்தன் செய்த அயோக்கியத்தனத்தைக் கண்ட அவன், காரியஸ்தனை வீட்டை விட்டே துரத்தினன். அதுமட்டுமில்லாமல் காரியஸ்தனை அவமானப்படுத்தி, அவன் சேர்த்து வைத்திருந்த பணத்தையும் எடுத்துக் கொண்டான்.

முன்பு, எல்லாச் சொத்துக்களும் 'என்னுடையவை' என்னுடையவை' என்று பெருமை அடித்துக் கொண்டவன் இந்த காரியஸ்தன். இப்போதோ, நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அவன் தனக்குச் சொந்தமான செம்பு தவலைகளை ஓர் ஓட்டைப் பெட்டியில் போட்டு வைத்திருந்தான். இப்போது அந்த அற்பமான ஓட்டைப் பெட்டியைக்கூட அவன் எடுத்துக் கொண்டு போக வழியில்லாமல் போய் விட்டது.

வீண் கர்வத்தினுல் வருகிற விளைவு இதுதான். நம்மிடம் இருப்பவை எல்லாம் கடவுளுக்குச் சொந்தமானவை. ஆனுல் நர்மோ, இந்த உண்மையை மறந்து விடுகிறோம். 'நம்முடையது, நம்முடையது'

என்று வீணுகக் கர்வப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதனுல் பல சமயங்களில் பகவான் நமது கர்வத்தை அடக்கக் கஷ்டம் கொடுத்துப் பார்க்கிறுர்.

6. பூதம் காத்த பணம்

ஓர் ஊரிலே ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தில் ஒரு யக்ஷன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அந்த மரம் இருந்த வழியாக ஒரு நாவிதன் போய்க் கொண்டிருந்தான். அப்போது, 'உனக்கு ஏழு ஜாடி தங்கம் வேண்டுமா?' என்ற குரல் கேட்டது. நாவிதன் சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தான். யாரும் அவன் கண்ணில் தென்படவில்லை. என்ருலும் 'ஏழு ஜாடி தங்கம்' என்று காதில் பட்டதால், பேராசை அவன் உள்ளத்தில் முளைத்தது. ''ஆம், எனக்கு வேண்டும்'' என்று பதில் சொன்னுன். உடனே, ''நீ வீட்டுக்குப் போகலாம். உன் வீட்டில் ஜாடிகளைக் கொண்டு போய் வைத்துவிட்டேன்'' என்று பதில் குரல் ஒலித்தது.

இதைக் கேட்டதுதான் தாமதம், உடனே நாவிதன் அது உண்மைதாஞ என்று பரிசோதித்துப் பார்க்க விரும்பினுன். எனவே அவன் தன் வீட்டை நோக்கிக் குடல்தெறிக்க ஓட்டமாய் ஓடினுன். உள்ளே நுழைந்ததும், அவன் தன் முன்னுல் ஏழு ஜாடிகள் இருந்ததைக் கண்டான். அவசர அவசரமாகஅவற்றை ஒவ்வொன்ருகத் திறந்து பார்த்தான். ஆறு ஜாடிகளில் தங்கம் வழிய வழிய நிறைந்திருந்

தது. ஏழாவது ஜாடியில் மட்டும் தங்கம் பாதி அளவுக்குத்தான் இருந்தது. குறைவாக இருந்த ஏழாவது ஜாடியையும் நிரப்பிவிட வேண்டும் என்ற தணியாத ஆவல் அவனுக்கு உண்டாயிற்று.

திருப்தி ஏற்படும் வகையில் குறைவான ஜாடியையும் நிரப்ப வேண்டும். இல்லாவிட்டால், தான் அனுபவிக்கும் இன்பம் முழுமையான இன்பமாக இருக்காது என்று அவன் நினைத்தான்.

எனவே தன்னிடம் இருந்த பொன், வெள்ளி நகைகளை எல்லாம் விற்று அவற்றை பவுன் ஆக்கிக் கொண்டான். அதை அந்த ஏழாவது ஜாடியிலே போட்டான். என்றாலும் அந்த மாயஜாடி முன்பு போலவே அரைகுறையாக இருந்தது. இப்போது மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசித்தான்.

பிறகு அவன் தன்னையும் தன் குடும்பத்தார்களையும் பட்டினி கிடக்க செய்தான். சம்பாதிக்கும் பணத்தை எல்லாம் அந்த ஜாடியிலேயே கொண்டு போய்ப் போட்டுப் பார்த்தான். என்றாலும் அந்த ஜாடி நிரம்பியபாடில்லை.

நாவிதன் அரசனிடம் வேலை பார்த்து வந்தான். அரசனுக்கு இவன்மேல் அன்பு இருந்தது. ஒரு நாள் நாவிதன் அரசனிடம் சென்று, ''குடும்பத்தை நடத்தப் பணம் போதவில்லை. ஆகையால் சம்பளத்தை இரண்டு மடங்காக்கிப் போட்டுக் கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான். அந்த அரசன் மிகவும் நல்லவன். எனவே அவன் கோரியபடியே

சம்பளத்தை இரண்டு மடங்கு ஆக்கினுன். இப்போது நாவிதனின் வருமானம் இரண்டு மடங்கு ஆகிவிட்டது. அப்படி அதிகமாக வந்த சம்பளத்தையும் நாவிதன் குடும்பத்திற்குச் செலவு செய்ய வில்லே. அதையும் அந்த ஜாடியிலேயே போட்டு வந்தான். ஆனுல் அப்போதும் அந்த ஜாடி நிரம்ப வில்லே!

பிறகு, வேலேயில்லாத காலங்களில் அவன் பிச்சை எடுக்க ஆரம்பித்தான். அப்படிப் பிச்சை எடுத்து வந்த பொருளேயும், வேலேயில் கிடைத்த சம்பளத்தையும் சேர்த்து பொன்னுக்கி ஜாடியில் போட்டான். என்ன மாயமோ, அந்த ஜாடி நிரம்பவில்லே!

இப்படியே பல மாதங்கள் உருண்டு ஓடின. நாவிதனுடைய நிலேமை வரவர மோசமாகிப் பரிதாபகரமான நிலேயை அடைந்தது.

ஒரு நாள் அரசன் நாவிதனுடைய நிலேமையைப் பார்த்தான். ''அடே, உனக்கு என்ன வந்தது? இப்போது உனக்குக் கிடைக்கிற சம்பளத்தில் பாதிச் சம்பளம் கிடைத்தபோது நீ மகிழ்ச்சியாயும் திருப்தியாயும் இருந்தாய். இப்போதோ அதைவிட இரண்டு மடங்கு அதிகமாகச் சம்பளம் வாங்குகிருய். அப்படி இருக்கும் போது நீ ஏன் வாடிய முகத்துடன் துன்பமும் கவலேயும் கொண்டவனுக இருக்கிருய்? ஏழு ஜாடி தங்கத்தை வாங்கிக் கொண்டாயா என்ன?'' என்று கேட்டான்.

நாவிதன் வியப்படைந்து போனுன். ''மகா

ராஜாவே! தங்களுக்கு இந்தச் செய்தியைச் சொன்னவர் யார்?'' என்று கேட்டான். அரசனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவன் நாவிதனிடம், ''யாரிடம் யக்ஷனுடைய செல்வம் வந்திருக்கிறதோ, அவன் இப்படிப்பட்ட நிலைக்கு வந்துவிடுவான் என்பது தெரியாதா? யக்ஷன் ஒருமுறை இதே ஏழு ஜாடிகளை எனக்குத் தருவதாகச் சொன்னான். அது 'வரவுப் பணமா, செலவுப் பணமா? அதாவது அந்தப் பணத்தைச் செலவு செய்ய வேண்டியதா? அல்லது புதைத்து வைக்க வேண்டியதா?'' என்று அவனைக் கேட்டேன். உடனே அந்த யக்ஷன் ஒரு பதிலும் சொல்லாமல் ஓடியே போய்விட்டான். அந்தப் பணத்தை ஒருவராலும் செலவழிக்க முடியாது என்பது உனக்குத் தெரியாதா? அது மேலும் மேலும் சேர்க்க வேண்டும் என்ற ஆசையைத் தான் தரும். உடனே போய் அந்தப் பணத்தை திருப்பிக் கொடுத்துவிடு', என்று பதில் சொன்னான்.

நாவிதனுக்குப் புத்தி வந்தது. அவன் யக்ஷன் வாழும் மரத்தடிக்குச் சென்று, ''உன் பணத்தை நீயே வாங்கிக்கொள்'' என்றான். ''நல்லது'' என்று யக்ஷனிடமிருந்து பதில் வந்தது. நாவிதன் வீட்டிற்கு வந்து பார்த்தான். மாயமாய் வந்த ஜாடிகள் ஏழும் மாயமாகவே போய்விட்டிருந்தன. அதோடு மட்டும் இல்லாமல், வாழ்நாள் முழுவதும் அவன் அரும்பாடுபட்டுத் தேடிய செல்வம் முழுவதும் போய்விட்டதையும் கண்டான்.

பேராசை பெருநஷ்டம். நீயாக உழைத்துப் பெற்றால் அன்றி எதுவும் உனக்குச் சொந்தமாகாது.

கடவுளின் ராஜ்யத்திலும் சிலருடைய நிலைமை, கதையில் சொல்லப்பட்ட நாவிதனின் நிலையில் இருக்கிறது. உண்மையான வரவிற்கும் உண்மையான செலவிற்கும் வேறுபாடு தெரிந்துகொள்ளாதவர்கள், தாங்கள் பெற்றுள்ள அனைத்தையும் இழந்து விடுகிறுர்கள்.

7. நித்திய கண்டம் பூர்ணுயுசு

ஆனி மாதத்தில் ஒரு வெள்ளாடு தன் தாயுடன் வெகு உல்லாசமாகத் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தது. அப்போது வெள்ளாட்டுக் குட்டி, தாயைப் பார்த்து, ''ராஸலீலை என்னும் பண்டிகைக் காலத்தில் விசேஷமாகப் புஷ்பிக்கும் ராஸ புஷ்பத்தை ஏராளமாகத்தின்று பண்டிகை கொண்டாடப் போகிறேன்'' என்று சொன்னது.

தாய் ஆடு அதற்குப் பதிலாக, ''குழந்தாய், நீ இப்போது நினைப்பது சரிதான். ஆனுல் நடைமுறையில் நீ நினைப்பது போல அது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ராஸ புஷ்பங்களை ஏராளமாகத் தின்று நீ பண்டிகை கொண்டாடுவதற்கு முன்னுல், பல ஆபத்துகளிலிருந்தும் நீ தப்பிப் பிழைக்க வேண்டியிருக்கிறது. வருகிற புரட்டாசி ஐப்பசி மாதங்கள் உனக்குப் பொல்லாத காலம். ஏனென்ருல், துர்க்கா பூஜைக்கு உன்னை யாராவது பலி கொடுத்துவிடுவார்கள். அந்தக் கண்டத்திலிருந்து நீ தப்பினுல் அதற்கடுத்துக் காளிபூஜை வருகிறது.

அதையும் தப்பினால் அதைவிடவும் பெரிய ஆபத்தாகிய ஜகத்தாத்ரி பூஜை வரும். அப்போது கிட்டத்தட்ட உயிர் தப்பிப் பிழைத்திருக்கிற எல்லா ஆடுகளையுமே பலியிட்டுவிடுவார்கள். அதிர்ஷ்டவசமாக இப்படிப்பட்ட எல்லாக் கண்டங்களிலிருந்தும் நீ தப்பிப் பிழைத்தால், கார்த்திகை மாதத்தில் வரும் ராஸ புஷ்பப் பண்டிகையை உன் விருப்பப்படி நீ கொண்டாடி மகிழலாம்'' என்று சொல்லிற்று.

தாய் ஆடு சொன்னதைப் போல, நமது வாழ்நாளில் நேரிடக் கூடிய கண்டங்களை உணர வேண்டும். இளமையில் ஒருவன் எவ்வளவோ நினைக்கலாம்; மனக்கோட்டைகள் கட்டலாம். அவ்விதம் இளமையில் மனதில் தோன்றும் எல்லா விருப்பங்களும் நிறைவேறிவிடும் என்று நினைக்கக் கூடாது.

II. காமமே எல்லாப் பந்தங்களுக்கும் காரணம்

8. கேவலம் பெண்டாட்டி தாசர்கள்!

தாம் சொல்ல வந்த கருத்துக்களை எளிய கதைகளின் மூலம் மக்கள் முன்பு வைத்த பெருமை ஸ்ரீராமகிருஷ்ணருடையது. அவர் உலக மக்களை எவ்வளவு தூரம் தெளிவாகப் புரிந்து வைத்துக் கொண்டிருந்தார் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சியும் கதையும் தெரிவிக்கின்றன.

ஒரு முறை ஒரு கனவான் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிப்பதற்காக வந்திருந்தார். கனவான் நவீனக்

கல்வி கற்றவர். ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அவர் பேசிக் கொண்டிருந்தபோது, ''இல்லற வாழ்க்கையில் ஒருவன் இருந்தபோதிலும் உலகப் பற்றுக்குள் அகப்பட்டுக்கொள்ளாமல் இருக்க முடியும்'' என்ற ஓர் அற்புதமான கருத்தைச் சொல்லி விவாதித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அதற்குப் பின்வருமாறு பதில் சொன்னார்:—

நீங்கள் குறிப்பிடுகிற நவீன காலத்தைச் சேர்ந்த, 'உலகப் பற்றுக்கு ஆளாகாத **இல்லறத்தவன்**' எப்படிப்பட்டவன் என்பது உங்களுக்குத் தெரியுமா? வீட்டு விவகாரங்களை எல்லாம் அவன் மனைவியே கவனித்துக் கொள்வாள். குடும்ப நிர்வாகம் முழுவதும் அவளிடம் இருக்கும். இல்லறத்தானுக்கோ பண விஷயத்தில் சுதந்திரமே இருக்காது. காரணம் அவன்தான் உலகப்பற்று இல்லாதவன் **ஆயிற்றே!** எல்லா விஷயத்திற்கும் அவன் எஜமானியம்மாளின் கையை எதிர்பார்த்தே ஆக வேண்டி இருக்கும்.

ஓர் ஏழை அந்த **இல்லறத்தவனிடம்** வந்து ஏதாவது கொஞ்சம் பண உதவி கேட்டால் ''அப்பா, நான் பணத்தைக் கையாலும் தொடுவதில்லை. என்னிடம் யாசகம் கேட்டு வீணாக உன் காலத்தைக் கழிக்க வேண்டாம்'' என்று உன்னுடைய 'இல்லறத்தவன்' பதில் சொல்வான். அப்படியும் அந்த ஏழை யாசகம் கேட்டுப் பிடிவாதமாக நின்றால், இல்லறத்தவனுக்கு இரக்கம் வந்து, ஏதாவது கொடுத்து அனுப்பும் எண்ணத்துடன், ''நல்லது, அப்பா! நாளைக்கு வா. ஏதாவது தருகிறோம்'' என்று சொல்கிறான். பிறகு

அவன் உள்ளே சென்று மனைவியிடம் ''அன்பே! ஓர் ஏழை மிகவும் கஷ்டத்தில் இருக்கிறான். நாம் அவனுக்கு ஒரு ரூபாய் கொடுக்கலாம்'' என்கிறான். 'ரூபாய்' என்ற வார்த்தையை கேட்டவுடனே அவனது மனைவி சீறி விழுகிறாள். கோபத்துடன் அவள், ''ஆகா! நீங்கள் பெரிய தர்ம பிரபுதான்! கல்லையும் மண்ணையும் போல யோசனையில்லாமல் எடுத்தெறியக் கூடிய பொருளா ரூபாயும்?'' என்று வெடிக்கிறாள். மீண்டும் இல்லறத்தவன் அவளிடம் மன்னிப்புக்கேட்கும் குரலில் மன்றாடுகிறான். ''அன்பே, அவன் பாவம், பரம ஏழை, ஒரு ரூபாய்க்கும் குறைவாக நாம் அவனுக்குக் கொடுக்கக் கூடாது'' என்று அழமாட்டாத குறையாகச் சொல்லிக் கெஞ்சுகிறான். அவன் மனைவி,''அவ்வளவு தரமாட்டேன். இதோ இரண்டணா இருக்கிறது. வேண்டுமானால் கொண்டுபோய்க் கொடுங்கள்'' என்று நறுக்குத் தெறித்தாற்போலத் திட்டவட்டமாகச் சொல்லிவிடுகிறாள். இல்லறத்தவனுக்கு 'உலகப்பற்றே' இல்லாதபடியால், தன் விருப்பப்படி செய்ய முடியவில்லை! மனைவி சொற்படி நடக்க வேண்டியவனாகிறான்! ஆகவே அடுத்த நாள் யாசகம் கேட்டுவரும் ஏழைக்கு இரண்டணாதான் கிடைக்கிறது.

உலகப்பற்று இல்லாதவர்கள் என்று சொல்லப் படும் இல்லறத்தவர்கள் கேவலம் பெண்டாட்டிகள் சொல்கிறபடி எல்லாம் கூத்தாடுகிறவர்களே ஆவர். அடிமைகளாக வாழும் அவர்களுக்குக் குடும்ப விவகாரங்களில் எந்த ஒரு சுதந்திரமும் கிடையாது.

இருந்தபோதிலும் அவர்கள் தங்களைப் பெரிய மகான்கள் என்றும் நல்லவர்கள் என்றும் நினைத்துக் கொள்கிறார்கள். உண்மையில் இந்த இரண்டு தன்மைகளுமே அவர்களிடம் இருப்பதில்லை.

பொதுவாக உலக மக்களின் குடுமி எங்கே இருக்கிறது என்பதை இந்தச் சிறிய கதையின் மூலம் ஸ்ரீராமகிருஷ்ணர் சுட்டிக் காட்டுகிறார்.

பரமஹம்சதேவர் நம்மைச் சிரிக்க வைப்பதற்காக இந்தக் கதையைச் சொல்லவில்லை: சிந்திக்க வைப்பதற்காகச் சொல்லியிருக்கிறார்.

9. கோயில்காளை போய் வண்டிக்காளை வந்தது!

ஜயப்பூரிலே ஒரு விஷ்ணு கோயில் இருக்கிறது. அதற்கு கோவிந்தஜி கோயில் என்று பெயர். அந்தக் கோயிலைச் சேர்ந்த பூசாரிகள் முதலில் பிரம்மசாரிகளாக இருந்தார்கள். எனவே அப்போது அவர்களிடம் ஆத்மபலம் மிகுதியாக இருந்தது.

ஒரு முறை ஜயப்பூர் அரசன் அவர்களைத் தன்னிடம் வரச்சொல்லிக் கூப்பிட்டு அனுப்பினான். ஆனால் அவர்கள் போகவில்லை. ''அரசனை இங்கே வந்து எங்களைப் பார்க்கச் சொல்'' என்று பதில் அனுப்பினார்கள்.

சிறிது காலத்திற்குப் பிறகு அவர்கள் திருமணம் செய்துகொண்டார்கள். அதன் பிறகு அர்ச்சகர்களை

அழைக்கும் அவசியமே அரசனுக்கு நேரவில்லை. ஏனென்றால், தாங்களாகவே அவர்கள் அரண்மனை யில் போய் நிற்பார்கள். ''மகாராஜாவே, ஆசீர் வாதம் செய்ய வந்திருக்கிறோம். கோவிலில் சுவாமிக்குச் சாத்திய புஷ்பங்களை இதோ கொண்டு வந்திருக்கிறோம். இவற்றைத் தாங்கள் தயைகூர்ந்து ஏற்று அங்கீகரிக்க வேண்டும்'' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். இப்படி அரசனிடம் அடிக்கடி வரவேண்டிய அவல நிலை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. ''இன்று வீடு கட்ட வேண்டும். இன் றைக்குக் குழந்தைக்கு அன்னப் பிராசனம் நடை பெற வேண்டியிருக்கிறது. இன்று குழந்தைக்கு வித்தியாரம்பக் கிரியை. மற்றொரு நாள் பெண்ணுக் குக் கல்யாணம்''—இப்படியாக அடிக்கடி அவர் களுக்குப் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டது. எனவே அவற்றுக்காக அவர்கள் ராஜசபைக்கு அடிக்கடி, நடக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது.

பிறருக்குக் கீழே அடிமைகளாக இருந்து வேலை செய்வதன் பயனை நீங்களே நன்கு உணர்வீர்கள். ஆங்கிலமும் மேனாட்டுப் பயிற்சியையும் பெற்ற இளைஞர்களில் பலர், மற்றவர்களின்கீழ்வேலை செய்து தங்கள் எஜமானர்கள் கொடுக்கும் 'பூட்ஸ்' உதை களை வாய்பேசாமல் பெற்று அனுபவிக்கிறார்கள். இவ்வளவு அவமதிப்புகளுக்கும் அவர்கள் ஏன் உட் படுகிறார்கள் என்பது தெரியுமா? இவைகளுக்கெல் லாம் அடிப்படையாக உள்ள ஒரே காரணம்: பெண் ணாசை ஒன்றுதான். ஆகவே, இவ்வளவு அவமானம்.

*காமமும் காஞ்சனமுமே மனிதனைக் கட்டுப் படுத்துகின்றன. அவை அவனுடைய சுதந்திரத் தையே பறித்துவிடுகின்றன. பெண்ணிற்காகவே ஒருவன் இன்னொருவனுக்கு அடிமையாகித் தன் சுதந்திரத்தை இழக்கிறான். அந்த இழிந்த நிலையில் உள்ள அவனால் தன் விருப்பப்படி நடக்க முடியாது.

---

*பெண், பணம் ஆகியவற்றைக் குறிப்பதற்காக, 'காமினி காஞ்சனம்' என்னும் இரண்டு சொற்களும் அடிக்கடி பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருடைய உபதேசங் களில் வருகின்றன. அவை ஆன்மிக முன்னேற்றத்திற்கு முக்கியத் தடைகளையே குறிப்பிடுகின்றன. 'காமினி காஞ்சனம்' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறும்போது அவர் கொண்டிருந்த கருத்து 'காமம், பண ஆசை' என்பது தான்.

'காமினி' என்னும் பதத்தை ஆண்பக்தர்களுடன் பேசும்போது காம இச்சையைக் குறிக்கும் ஒரு பத மாகவே அதை அவர் உபயோகித்து வந்தார். பெண் பக்தர்களிடம் பேசும்போது 'ஆண்களை'த் தவிர்த்து விடும்படி போதித்து வந்தார். ஆண், பெண் ஆகிய இரு பாலருக்கும் பொதுவாக உள்ள காம இச்சையைப் பக்தி வாழ்க்கையில் முன்னேற்றம் காண விரும்புபவர்கள் யாராக இருப்பினும் தவிர்த்துவிட வேண்டும் என்பதே ஸ்ரீராமகிருஷ்ணரின் கருத்தாகும். 'காஞ்சனம்' என்னும் சொல் ஞானவாழ்க்கைக்கு மற்றொரு தடையாகிய பண ஆசையைக் குறிக்கிறது.

யாராகிலும் பெண்ணையோ அல்லது பொதுவாகப் பெண்பாலரையோ வெறுத்து ஒதுக்கிவிட வேண்டும் என்று எந்தக் காலத்திலும் ஸ்ரீராமகிருஷ்ணர் தம் சீடர் களுக்குப் போதித்ததில்லை. பெண்கள் அனைவரையும் ஜகன்மாதாவாகிய தேவியின் வடிவங்களாகவே அவர் கருதினார் மிக உயர்ந்த தந்திர சாதனங்களைப் பழகி வரும்போது அவர் பைரவிப் பிராம்மணி என்னும் ஒரு பெண்ணையே தமது குருவாக ஏற்றுக் கொண்டார். இதனால் பெண்பாலரிடம் அவருக்கு இருந்த உயர்ந்த மதிப்பு நன்கு வெளியாகிறது. 'தூய அன்னையார்' என்று பலரும் போற்றி வழிபட்டு வரும் ஸ்ரீராமகிருஷ்ணரின்

10. தாசியின் தாசன்

ஓர் ஊரில் ஓர் ஏழைப் பிராம்மணன் இருந்தான். அவனுக்கு வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகவே அவன் வறுமையிலும் துன்பத்திலும் பெரிதும் வாடினான்.

இந்தக் கஷ்டநிலையில் இருந்த அவன் அடிக்கடி ஒரு கம்பெனி மேனேஜரைச் சென்று பார்த்தான். அவரிடம் தனக்கு ஏதாவது வேலை போட்டுத் தர வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தான். ''இன்றைக்கு இல்லை, நாளைக்கு வா'' ''அவ்வப்போது என்னை வந்து பார்'', ''பிறகு பார்க்கலாமே'', இன்னும் ஒரு சமயம் வந்து பார்'' —என்று இப்படிப்பட்ட பதில்களே அவனுக்குக் கிடைத்துக்கொண்டிருந்தன. எத்தனை எத்தனையோ முறை அவன் கம்பெனி மேனேஜரைச் சந்தித்தான். ஆனால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. இப்படியே பல நாட்கள் உருண்டோடின.

ஒரு நாள் அவன் தன் சிரமங்களை எல்லாம் நண்பன் ஒருவனிடம் சொல்லி வருந்தினான். உடனே அந்த நண்பன், ''என்ன நீ இப்படிப்பட்ட முட்டா

மனைவியார் அவருக்கு விட்டுப் பிரியாத தோழியாயும் சிஷ்யையாயும் இருந்தார். தமது ஞானசாதனம் முடிவடையும்போது ஸ்ரீராமகிருஷ்ணர் தம் மனைவியாகிய ஸ்ரீசாரதா தேவியாரைக் காளிதேவியின் உருவமாகவே வைத்து முறைப்படி பூஜித்தார். அவரது மறைவிற்குப் பிறகு தூய அன்னையாரே இல்லறத்தவர்களுக்கும் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சன்னியாசிகளுக்கும் ஞானகுருவாக வாழ்ந்தார்.

ளாக இருக்கிறுயே! நீ செய்தது அசட்டுத்தனமான காரியம். கால்கள் தேய அடிக்கடி ஏன் மேனேஜ ரிடம் சென்று அலேகிருய்? நான் சொல்வதை நம்பு. நேராக இப்போதே ரோஜாமணியிடம் போ. அவளிடம் கெஞ்சி வேலே தரவேண்டும் என்று கேள். நாளேக் காலேயிலே உனக்கு வேலே கிடைத்துவிடும், பார்'' என்று சொன்னுன்.

இதைக் கேட்ட ஏழைப் பிராம்மணன் ஆச்சரி யத்தால் வாயைப் பிளந்தான். ''அப்படியா சமா சாரம்? உண்மையாகவா சொல்கிருய்? நீ சொன்ன படி செய்தால் எனக்கு வேலே கிடைத்துவிடுமா? அப்படியானுல் இப்போதே நான் அவளிடம் போகி றேன்'' என்று சொல்லிவிட்டு, ரோஜாமணியிடம் ஓட்டமாய் ஓடினுன்.

அந்த ரோஜாமணி வேறு யாரும் இல்லே. மேலே குறிப்பிட்ட கம்பெனி மேனேஜரின் ஆசை நாயகிதான் அவள்.

ஏழைப் பிராம்மணன் அவளே அணுகி, ''தாயே! வேலேயில்லாமல் நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். தங்களேத் தவிர வேறு கதி எனக்குக் கிடையாது. நான் பிராம்மணனுகப் பிறந்துவிட்டேன்: சம் பாதிக்க வேறு வழியும் எனக்கு இல்லே. அம்மணி! வேலேயில்லாமல் பலகாலமாகக் கஷ்டப்படுகிறேன். என் மனேவி மக்கள் பட்டினி கிடந்து சாகிருர்கள்; அம்மா என் மீதும் என் குடும்பத்தின் மீதும் கொஞ் சம் கருணே காட்டுங்கள். நீங்கள் ஒரு வார்த்தை சொன்னுல் போதும், எனக்கு வேலே கிடைத்துவிடும்.

தாயே! என்மீது கிருபை வையுங்கள்'' என்று உருக்கத்தோடு சொன்னான்.

பிராம்மணன் கஷ்டப்படுவதைக் கேட்டு ரோஜாமணிக்கு இரக்கம் உண்டாயிற்று. ''என்ன! இப்படிப்பட்ட ஓர் அவலநிலையில் இவன் கஷ்டப்படுகிறானே!'' என்று நினைத்தாள். ஆகவே, அவனுக்கு உதவும் எண்ணத்துடன் அவள், ''அது சரி, நான் யாரிடம் சிபாரிசு செய்தால் உனக்கு வேலை கிடைக்கும் என்று நினைக்கிறாய்?'' என்று கேட்டாள்.

உடனே பிராம்மணன், ''தாயே! கம்பெனி மேனேஜரிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும், எனக்கு உடனே வேலை கிடைத்துவிடும்'' என்று சொன்னான்.

ரோஜாமணி அன்றைய இரவே கம்பெனி மேனேஜரிடம் சொல்லி வேலை வாங்கித் தருவதாக வாக்களித்தாள்.

ஆச்சரியம்! என்ன மாயம் நடந்ததோ தெரியவில்லை!

மறுநாள் காலையில் மேனேஜரின் சேவகன் ஏழைப் பிராம்மணனின் வீடு தேடி ஓடி வந்தான். பிராம்மணனைக் கம்பெனிக்கு அழைத்துப் போனான்.

அன்றைக்கே பிராம்மணனுக்கு வேலை கிடைத்து விட்டது.

''இவன் சிறந்த தகுதிகளைப் பெற்றிருக்கிறான். இவனை வேலைக்கு வைத்துக்கொள்வதால் நமது நிறுவனத்திற்கு ஏராளமான நன்மைகள் ஏற்படும் என்று

நினைக்கிறேன். ஆதலால் இன்று முதல் இவனுக்கு ஓர் உத்தியோகம் கொடுத்திருக்கிறேன்'' என்று மேனேஜர் தன் மேலதிகாரிக்குச் சிபாரிசுக் கடிதம் எழுதினான்.

ஆண்களுக்குப் பெண்களின்மீது ஏற்படும் கவர்ச்சியின் வேகம் இப்படிப்பட்டது. உலகம் முழுவதுமே பெண்ணாசையில் மயங்கி கிடக்கிறது. மாயை என்பது எது? ஆன்மிக முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் காமம்தான் மாயை ஆகும்.

எல்லாவற்றையும் விழுங்கியது மாயையோ? மாதோ?

11. அவன் அவளுக்கு அடக்கம்

ஓர் ஏழைப் பிராம்மணனுக்குப் பணக்காரனாகிய ஒரு ஜவுளி வியாபாரி சீடனாக இருந்தான். ஜவுளி வியாபாரி பரம லோபி; கஞ்ச மகாப்பிரபு என்றுதான் அவனைச் சொல்ல வேண்டும்.

ஒருநாள் ஏழைப் பிராம்மணன் தன் பாகவதப் புத்தகத்திற்கு உறைபோட நினைத்தான். ஆகவே சிஷ்யனிடம் சென்று, ஒரு சிறிய துண்டுத் துணி வேண்டும் என்று கேட்டான். வியாபாரிதான் கர்ணன் ஆயிற்றே! அவன், ''சுவாமி! தங்களுக்கு இல்லை என்று சொல்வதற்கு என் மனம் வருந்துகிறது. சற்று முன்னால் சொல்லியிருந்தால், உடனே தாங்கள் கேட்டதைக் கொடுத்துவிட்டிருப்பேன். துரதிர்ஷ்டவசமாக இப்போது சிறிது துண்டு

ஒன்றுமே என் கைவசம் இல்லையே! என்றாலும் தாங்கள் கேட்டதை நினைவில் வைத்துக்கொள்கிறேன். ஆனால் தாங்கள் மட்டும் அடிக்கடி வந்து எனக்கு ஞாபகப்படுத்துங்கள்'' என்று பதில் சொல்லி அனுப்பி விட்டான். ஏழைப் பிராம்மணன் பாவம், ஏமாற்றத்துடன் வெறுங்கையனாக வீட்டுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

குருவுக்கும் சீடனுக்கும் நடந்த இந்த உரையாடலை அந்த சீடனுடைய மனைவி வீட்டின் பின்னால் இருந்து கேட்டாள். உடனே அவள் ஓர் ஆளை விட்டனுப்பிப் பிராம்மணன் வீட்டின் பின்புறமாக அழைத்து வரசெய்தாள். பிராம்மணன் வீட்டின் உள்ளே வந்ததும், ''சுவாமி! தாங்கள் என் கணவரிடம் கேட்டது என்னவோ?'' என்று கேட்டாள். பிராம்மணன் நடந்ததை விவரமாகச் சொன்னான். ஜவுளி வியாபாரியின் மனைவி, ''சுவாமி! தாங்கள் கவலையில்லாமல் வீட்டுக்குப் போங்கள். நாளைக் காலையில் தேவையான துணி உங்கள் வீட்டுக்கு வந்து சேரும்'' என்று பதில் சொல்லி அனுப்பினாள்.

அன்றிரவு ஜவுளி வியாபாரி வீட்டுக்கு வந்ததும் அவன் மனைவி, ''இன்றைக்குக் கடையை மூடியாகி விட்டதா?'' என்று கேட்டாள். ''ஆமாம், மூடியாகி விட்டது. ஏன் கேட்கிறாய்?'' என்றான் வியாபாரி. அதற்கு அவள், ''உடனே இப்போதே கடைக்குப் போய், அங்கிருக்கும் விலையுயர்ந்த துணிகளில் இரண்டை எடுத்து வாருங்கள்'' என்று சொன்னாள். ''எதற்காக இந்த அவசரம்? நாளைக் காலையில்

கொண்டு வந்து தருகிறேனே!'' என்ருன் ஜவுளி வியாபாரி. ஆனுல் அவன் சொன்னதை அவனுடைய மனைவி காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. ''முடியாது. எனக்கு இப்போதே அந்தத் துணிகள் வேண்டும். இல்லாவிட்டால் வேண்டவே வேண்டாம்'' என்று அவன் முகத்தில் அடித்தாற்போல் சொல்லிவிட்டாள். பாவம்! இப்போது வியாபாரி என்ன சொல்ல முடியும்? செய்ய முடியும்? மனைவி என்பவள் வீண் சாக்குப் போக்குகளைச் சொல்லித் தட்டிக் கழிக்கக்கூடிய ஆன்மிகக் குரு இல்லையே! மறுபேச்சில்லாமல் உடனே கட்டளைக்கு கீழ்ப் படிந்தே ஆகவேண்டிய அபாரமான ஆற்றல் வாய்ந்த 'தலையணை மந்திர குரு' ஆயிற்றே அவள்! அவனுடைய 'வித்தைகள்' பலிக்கக்கூடிய இடமா இது? தப்பித் தவறி அவள் சொன்னதைக் கேட்காமல் போனுல் வீட்டிலே அவனுடைய நிலைமை என்ன ஆவது? அவனுடைய மன அமைதியை இல்லாள் இல்லாததாக்கி விடுவாளே! மனைவி சமாதானம் அடையாமல் போனுல் தன் மன அமைதி பஞ்சாய்ப் பறந்து போய்விடும்: அன்றைய இரவுப் பொழுது பெரும்பாடாக முடியும்—என்பதை உணர்ந்த ஜவுளி வியாபாரி, அந்தப் பாதிராத் திரியில் வேலையில்லாத வேளையில் மீண்டும் கடையைப் போய்த் திறந்தான். மனைவி கேட்டபடியே துணிகளை எடுத்து வந்து அவளிடம் சமர்ப்பித்தான்.

மறுநாள் காலையில் அந்த நல்ல பெண்மணி துணிகளைக் குருவுக்கு அனுப்பி வைத்தாள். அப்

போது அவள், ''இனிமேல் தங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டால் எனக்குத் தெரிவியுங்கள். நான் கொடுத்தனுப்புகிறேன்'' என்று சொல்லி அனுப்பினுள்.

III. உள்ளம் உயர ஞானம் உயரும்

12. சர்வம் சக்திமயம்

உலக வழக்குப்படி சொல்வதானுல் ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் திருமணம் ஆகியிருந்தது. ஆனுல் அவரோ, சாதாரணமாகத் திருமணம் செய்து கொண்டிருப்பவர்களைப் போலத் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவில்லை.

ஆகவே திருமணமான அவர், மற்றவர்களைப் போல ஏன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுத் தமது மனைவியுடன் வாழவில்லை என்ற கேள்வியை ஓர் அன்பர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் கேட்டார். அதற்குப் பரமஹம்சதேவர் பின்வருமாறு பதிலைச் சொன்னுர்:—

ஒரு நாள் விநாயகப்பெருமான் ஒரு பூனையோடு விளையாடிக்கொண்டிருந்தார். அப்போது அவருடைய கைநகம் பூனையின் முகத்தில் பட்டு ஒரு சிறிய கீறலை உண்டாக்கியது.

சிறிது நேரத்திற்குப் பிறகு விநாயகர் வீட்டுக்கு வந்தார். அப்போது தமது தாயாகிய பார்வதிதேவியின் கன்னத்தில் விரலால் கீறிய அடையாளம்

ஒன்று இருப்பதைப் பார்த்தார். அதைப் பார்த்ததும் 'உலகின் தாயாகிய அம்பிகைக்கு முகத்தில் கீறல் உண்டாக்கி ஊறு விளைவிக்கக் கூடியவர் யாராக இருக்கக்கூடும்? என்ற வியப்பு அவருக்கு ஏற்பட்டது. ஆகவே அவர், ''தாயே! உன் கன்னத்தில் இந்த வடு எப்படி ஏற்பட்டது?'' என்று கேட்டார்.

ஜகன்மாதா பதில் சொன்னுள்: ''குழந்தாய்! இது நீ செய்த காரியம்தான். உன் கைநகத்தின் கீறலால் ஏற்பட்ட வடுதான் இது.''

தேவியின் பதிலைக் கேட்ட விநாயகப்பெருமான் திடுக்கிட்டுப் போனார். வியப்பு மேலிட அவர், ''எப்படியம்மா! உன்னை நான் ஒருபோதும் கீறியதாக எனக்கு நினைவு இல்லையே?'' என்று கேட்டார்.

''குழந்தாய்! இன்று காலையில் நீ ஒரு பூனையைக் கீறியதை மறந்துவிட்டாயா?''

''ஆமாம், கீறினேன். ஆனால் உன் கன்னத்தில் வடு எப்படி ஏற்பட்டது?''

''குழந்தாய்! இந்த உலகில் என்னைத் தவிர ஒன்றுமே கிடையாது. உலகில் உள்ள எல்லா உயிர்களிலும் நான் இருக்கிறேன். நானே உலகமாக ஆகியிருக்கிறேன். எல்லா உயிர்களாகவும் பொருள்களாகவும் சகல சிருஷ்டியாகவும் நானே விளங்குகிறேன். ஆகவே நீ யாரை துன்புறுத்தினாலும் உண்மையில் அது என்னைத் துன்புறுத்துவதாகவே அமையும்.''

பார்வதிதேவியின் பதிலைக் கேட்டதும் விநாயகப் பெருமானுக்குச் சொல்ல முடியாத ஆச்சரியம் ஏற்

பட்டது. அதோடு தாம் ஒருவரையும் திருமணம் செய்து கொள்ளப்போவதில்லை என்று உறுதியாக முடிவு செய்தார். ஏனென்றால், அவர் யாரைத் திருமணம் செய்துகொள்ள முடியும்? ஒவ்வொரு பெண்ணும் அவருடைய தாயே அல்லவா? இந்தப் பெரிய உண்மையை மனதில் கொண்ட விநாயகப் பெருமான் யாரையுமே திருமணம் செய்து கொள்ள வில்லை.

இந்தக் கதையைச் சொல்லிவிட்டு ஸ்ரீராம கிருஷ்ணர் சொன்னார்:—''நானும் விநாயகரைப் போலவே இருக்கிறேன்; ஒவ்வொரு பெண்ணும் சாட்சாத் ஜகன்மாதாவாகிய தேவியாக இருப் பதை நான் பார்க்கிறேன்.

13. இறைவன் வழங்கிய தீர்ப்பு!

புறச்செயல்கள் மட்டுமே ஒருவனை நல்ல கதிக் கோ, கெட்ட கதிக்கோ அழைத்துச் செல்வதில்லை. மாறாக, ஒரு மனிதனின் மனநிலைக்கு ஏற்றவகையில், புண்ணிய பாவங்கள் அவனைப் பற்றித் தொடர் கின்றன.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், ''உண்மையாகவே இறைவன் ஒரு மனிதனின் இதயத்தில் இருப்பதை மட்டுமே பார்க்கிறார். அவன் இன்னது செய்கிறான் —செய்யவில்லை, இங்கே வாழ்கிறான்—வாழவில்லை என்பதைக் கொண்டு அவனை மதிப்பிடுவதில்லை என்று கூறுவது வழக்கம். அந்தப் பெரிய உண்

மையைப் பின்வரும் எளிய கதைமூலம் அவர் விளக்குகிருர்.

இரண்டு நபர்கள் ஒரு தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது ஓர் இடத்தில் பாகவதப் படனம் நடந்து கொண்டிருந்தது. ஒருவர் பாகவதம் படித்து விரிவுரை சொல்லிக் கொண் டிருந்தார். அவரைச் சுற்றிலும் மக்கள் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

தெருவில் நடந்து கொண்டிருந்த இரண்டு நண்பர்களும் பாகவதம் நடப்பதைக் கவனித்தனர். அப்போது ஒருவன் மற்ருெருவனைப் பார்த்து, ''நண்பா! வா, நாம் இருவரும் சேர்ந்து அங்கே நடக்கும் பாகவதத்தைக் கேட்கலாம்'' என்று சொன்ஞன். ஆஞல், அப்படிச் சொன்னதை அவ னுடைய நண்பன் கேட்கவில்லை, ''பாகவதத்தைக் கேட்பதால் என்னப்பா லாபம் வரப்போகிறது? நேராக என்னுடன் வா. நாம் இருவரும் சேர்ந்து தாசி வீட்டுக்குப் போகலாம். அங்கே அவள் வீட்டில் நமது பொழுது மிக இன்பமாக கழியும்'' என்று சொல்லி, நண்பனையும் தன்னுடன் வரும்படி அழைத்தான்!

ஆஞல், முதலாமவனுக்குப் பாகவதம் கேட் பதை விட்டுத் தாசி வீடு செல்ல மனம் இல்லை. ஆகையால், தன் நண்பனிடம் வரமுடியாது என்று சொல்லி விட்டான். பிறகு பாகவதம் கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்தில் தானும் ஒருவஞகச் சென்று உட்கார்ந்து கொண்டான். இரண்டாம

வன் பாகவதம் நடப்பதை எட்டிப் பார்த்துவிட்டுத் தாசி வீடு போய்ச் சேர்ந்தான்.

தாசி வீட்டுக்குப் போனுலும், விரைவில் அவனுக்கு அந்த இடத்தின் மீதே அருவருப்பு ஏற்பட்டது. அவனுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. அடடா! எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன். என் நண்பன் அங்கே பகவானின் புகழைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறுன். பகவான் நினைவில் தோய்ந்து போய் இருக்கிறுன். நானே போயும் போயும் இங்கு வந்து சேர்ந்தேனே! என்ன வெட்கக்கேடு! என்று நினைத்து உளமாற வருந்திக் கொண்டிருந்தான். அவனது உடல் தாசி வீட்டில் இருந்தாலும் உள்ளம் பகவானையே வலம் வந்து கொண்டிருந்தது. பாகவதப் படனமே அவனது முழு உள்ளத்தையும் ஆக்கிரமித்திருந்தது.

ஆனுல், அங்கே பாகவதம் கேட்க உட்கார்ந்தவனுக்கும் சிறிது நேரத்திற்குப் பிறகு இருப்புக் கொள்ளவில்லை. பாகவதச் சொற்பொழிவு சிறிது நேரத்திற்குள்ளாக அவனுக்குக் கசந்து அலுத்துப் போய்விட்டது! அவனும் தனக்குள்ளாக, நான் செய்தது முட்டாள்தனம். இங்கே யாரோ ஒருவன் எதையோ கதையளந்து கொண்டிருக்கிறுன்; இவன் ஏதோ சொல்கிறுன் என்று நான் இங்கே வந்து உட்கார்ந்தேனே! ஆகா! என் நண்பன் இப்போது எவ்வளவு மகிழ்ச்சியாகத் தாசிவீட்டில் இருப்பான்! அவன் புத்திசாலி. நானும் அவனேடு தாசிவீட்டுக்குப் போயிருந்தால் இந்நேரம் இன்பமாக இருந்திருப்பேன்' என்று சொல்லிக் கொண்டான். அவன்

உடல் பாகவதம் நடைபெற்ற இடத்தில் இருந்தது; ஆனால் உள்ளமோ தாசி வீட்டையே சுற்றிச் சுற்றி வட்டமடித்தது.

காலகதியில் அவர்கள் இருவரும் மரணம் அடைந்தார்கள்.

பாகவதம் நடந்த இடத்தில் உட்கார்ந்து இருந்தவனின் உயிரைக் கொண்டு போவதற்கு யமதூதர் வந்தனர். அதை நரகத்திற்கு இழுத்துச் சென்றார்கள்.

தாசிவீடு சென்றவனின் உயிரைக் கொண்டு போவதற்குப் பகவானுடைய தூதுவர் வந்தனர். அதை உபசாரங்களுடன் விஷ்ணு லோகத்திற்கு அழைத்துப் போனார்கள்.

புனிதமான இடத்தில் இருக்கும் மிகப் பெரிய வாய்ப்பைப் பெற்றும், அதற்கேற்ற மனநிலையில் தங்களை வைத்துக்கொள்ளாதவர்களுக்கு இந்தக் கதை ஓர் எச்சரிக்கை. அதைப்போலவே புனித மற்ற சூழ்நிலையில் இருக்க நேர்ந்தாலும், உள்ளத்தைப் பகவானுக்கு உரியதாக்கிவிட்டால் இறைவனை அடைந்து நற்கதி பெற முடியும். இரண்டாவது நிலையில் இருப்பவர்களுக்கு இந்தக் கதை ஊக்கத்தையும் நம்பிக்கையையும் தருகிறது. உலகில் இரண்டு சாராருமே வாழ்கிறோம். இரண்டு சாராருமே மிகப் பெரிய ஒரு படிப்பினையை ஸ்ரீராமகிருஷ்ண தேவர் இந்தக் கதையின் மூலம் தந்திருக்கிறார்.

உள்ளம் எந்த நிலையில் இருக்கிறது என்பதில்

சாதகர்கள் மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆன்மிக வாழ்க்கைக்குச் சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொள்வதால் மட்டுமோ, இருக்க நேர்வதால் மட்டுமோ கடவுளை அடைந்து விடமுடியாது. அதைப் போலவே ஞான வாழ்க்கைக்குத்தகாத சூழ்நிலைகள் மட்டுமே பகவானை அடையத் தடையாக அமைவதில்லை.

எங்கிருந்தாலும் கடவுளை நினைத்துப் பழகுவதற்குக் கடுமையாக முயற்சி செய்தாக வேண்டும். அது ஒன்றே உண்மையான நன்மைக்கு அழைத்துச் செல்ல வல்லது.

''பெண், பொன் ஆசைகள் அழியாத வரையில் ஒருவராலும் ஈச்வரனைக் காண முடியாது.

''விஷப்பாம்புகள் நடமாடும் வீட்டில் வசிப்பவர்கள் எப்போதும் வெகு ஜாக்கிரதையாக இருப்பதைப் போலவே, உலகில் வாழும் மக்களும் காம—காஞ்சனம் போன்ற உலக ஆசைகளுக்கு உட்படாமல் எப்போதுமே ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும்.

''பெண், பொன் ஆசைகள் உள்ளத்தை விட்டு அகலும்போது ஆத்மாவிடம் வேறு என்னதான் தங்கியிருக்க முடியும்?

''பிரம்மானந்தமே அந்த இதயக் கோயிலில் குடி கொண்டிருக்கும்.''

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

14. இறைவனின் பார்வையிலே

ஒரு சன்னியாசி ஒரு கோயிலுக்குப் பக்கத்தில் வாழ்ந்து வந்தார். அவருடைய இருப்பிடத்திற்கு எதிரில் ஒரு தாசி வீடு இருந்தது. அந்த வேசியின் வீட்டில் சதாசர்வகாலமும் ஆண்கள் கூடியிருப்பார்கள்; வருவதும் போவதுமாக இருப்பார்கள்.

இதைக் கண்ட அந்தச் சன்னியாசி ஒரு நாள் தாசியைக் கூப்பிட்டு, ''நீ பெரும் பாவியாகி விட்டாய். இரவும் பகலும் நீ பாவம் செய்து கொண்டே இருக்கிருய். உனக்கு என்ன கதி வரப் போகிறதோ?'' என்று சொல்லிக் கடுமையாக கண்டித்தார்.

தாசி தான் செய்த பாவத் தொழில்களுக்கு உளமாரப் பெரிதும் மனம் வருந்தினுள். மிகவும் வருத்தத்துடன் அவள் தன்னே மன்னித்து அருள வேண்டும் என்று இறைவனே நோக்கி உண்மையாகவும் உள்ளன்போடும் பிரார்த்தித்துக் கொண்டாள். ஆனல் அவளது குலத்தொழிலே வேசித்தொழிலாக இருந்ததனுல், வேறு வகையால் அவளால் வாழ்க்கைக் காலட்சேபத்தை நடத்தவும் முடியவில்லே. ஆனுலும் வயிற்றுப் பிழைப்புக்காக உடலே விற்க நேர்ந்தபோதெல்லாம் அவள் உள்ளம் குழைந்து மன்னிப்பு வேண்டிப் பகவானேப் பிரார்த்திப்பது வழக்கம். தவறு செய்வதைத் தவிர்க்க இயலாத நிலேயில், அந்த அபலேப் பெண் மனம் கசிந்து உருகினுள். மன்னித்து அருள்புரியும்படி பகவானே

நினைத்து மேலும் மேலும் உருக்கத்துடன் பிரார்த்தித்துக் கொண்டே இருந்தாள்.

சன்னியாசிக்குத் தாசியின் உள்ளத்தில் ஏற்பட்ட போராட்டமோ மனமாற்றமோ தெரியாது. அவளது மனநிலை அடியோடு முற்றிலும் மாறி அமைந்துவிட்டதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. வெளிப்படையாகத் தாசியின் வாழ்க்கையில் மாற்றம் ஒன்றும் ஏற்படாததனால், தாம் அவ்வளவு சொல்லியும் தாசி கேட்காமல் தன் பழைய வாழ்க்கையையே தொடர்ந்து கொண்டிருக்கிறாள் என்று அவர் நினைத்தார். அந்த எண்ணத்துடன் சன்னியாசி, 'இவளுடைய ஆயுட்காலத்துக்குள் எத்தனை பேர் இவளிடம் வருகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தார். ஆகவே, அன்று முதல் அவளைக் கவனிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்! யாராவது ஒருவர் அந்தத் தாசியின் வீட்டுக்குள் நுழைந்தால், உடனே சன்னியாசி ஒரு கூழாங்கல்லை எடுத்துப்போட்டு எண்ணிக் கொள்வார்! இப்படி அவர் போட்டு வந்த கற்கள் காலக்கிரமத்தில் பெரிய குவியலாக அங்கே குவிந்தன.

ஒருநாள் அந்தச் சன்னியாசி, இந்தக் கற்குவியலைத் தாசிக்குச் சுட்டிக்காட்டி, ''பெண்ணே! இந்தக் குவியலைப் பார்த்தாயா? நான் எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டாம் என்று சொன்னேனோ, அதே காரியத்தை நீ எத்தனை தரம் செய்திருக்கிறாய் என்பதை இந்தக் குவியலில் உள்ள ஒவ்வொரு

கல்லும் உனக்குத் தெரிவிக்கும். இப்போதும் சொல்கிறேன். வீணுகக் கெட்டுப் போகாதே! ஜாக்கிரதையாக இரு'' என்று சொன்ஞர்.

தாசி தன் பாவச் செயல்களைக் குறிக்கும் அவ்வளவு பெரிய கற்குவியலைக் கண்ட மாத்திரத்திலேயே நடுநடுங்கிஞள். துன்பம் அவளது உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்து குடைந்தெடுத்தது. ஆகவே, கண்ணீரும் கம்பலையுமாக அவள் உளமார வருந்தி, ''பகவானே, இப்படிப்பட்ட தீய செயலை இனியும் நான் செய்யாதபடி என் உயிரைக் கொண்டுபோகக் கூடாதா? இப்படிப்பட்ட இழிந்த வாழ்க்கையிலிருந்து என்னை விடுவித்துவிடு'' என்று தன் ஆதரவற்ற நிலையைச் சொல்லிக் கடவுளிடம் பிரார்த்தித்தாள். ஆண்டவன் அவளுடைய உண்மையான பிரார்த்தனைக்குச் செவிசாய்க்கவே செய்தார். அவளுடைய பிரார்த்தனையின்படியே அவள் உயிரை அன்றிரவே எமன் கொண்டு போஞன். இறைவனின் லீலையைத்தான் என்னவென்று சொல்வது? அதே நாளில் அந்தச் சன்னியாசியும் இறந்துபோஞர்.

வைகுண்டத்திலிருந்து விஷ்ணுதூதர்கள் வந்து அந்தத் தாசியின் உயிரைச் சொர்க்கத்திற்கு அழைத்துப் போக ஆரம்பித்தார்கள். அதே சமயத்தில் எமபடர்கள் வந்து அந்தச் சன்னியாசியின் உயிரை நரகத்திற்குக் கொண்டு போவதற்காகக் கட்டிப் பிணைத்தார்கள். தாசிப் பெண்ணுக்குக் கிடைத்த உயர்ந்த நற்கதியைப் பார்த்த சன்னியாசி, ''இது தாஞ ஆண்டவனுடைய நீதி? ஆயுள் முழுவதையும்

எளிய வாழ்க்கையிலும் தவத்திலும் கழித்த என்னை நரகத்திற்கும், தினந்தோறும் பாவம் செய்த தாசியை மோட்சத்திற்கும் அழைத்துப் போவது நியாயமாகுமா?'' என்று கூறி அலறினார்.

இதைக் கேட்ட விஷ்ணுதூதர்கள் சொன்னார்கள்: ''இறைவனின் நீதி எப்போதுமே நியாயமானதாகத்தான் இருக்கும். நீ எதை நினைக்கிறாயோ அதையே பலனாக அனுபவிப்பாய். கௌரவத்தையும் புகழையும் பெறுவதற்காக நீ வீண் படாடோபத்துடன் காலம் கழித்தாய். பகவான் உனக்கு அவற்றைக் கொடுத்தார். உன் மனம் ஒரு போதும் அந்தரங்க சுத்தத்துடன் இறைவனை நாடியதே இல்லை. இந்தத் தாசியோ உடலால் பாவம் செய்தாலும்கூட, உள்ளம் உருகி இரவும் பகலுமாக எப்போதும் இறைவனையே நினைத்துப் பிரார்த்தித்து வந்தாள். பூலோகத்தில் உன் உடலும் அவளது உடலும் அடைகிற மரியாதையை இப்போது பார். உடலால் நீ பாவம் செய்யவில்லை. ஆகவே உன் உடலை மலர்களால் அலங்கரித்து ஆற்றில் இடுவதற்காக மேளதாளங்களுடன் ஊர்வலம் கொண்டு போகிறார்கள். தாசி, உடலால் பாவம் செய்தாள். அவளது உடலை இந்த நேரத்தில் நாயும் நரியும் பிடுங்கித் தின்கின்றன. ஆனால் அவளது மனம் தூய்மையாக இருந்த காரணத்தால், அவள் சொர்க்கம் போய்க்கொண்டிருக்கிறாள். உன் மனம் எப்போதும் அவளுடைய பாவச்செயல்களைப் பற்றியே சிந்தித்ததினால் அசுத்தம் அடைந்தது. ஆகையால் நீ பாவம் செய்த ஆத்மாக்கள் உள்ள

நரகத்திற்குப் போகிருய். உண்மையில் நீயே பாவமும் வேசித்தனமும் செய்தவனே தவிர அவள் அல்ல.''

சாதகர்கள், கடவுள் தரிசனம் பெறும் வரையிலும் மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எதிர்மறையான கருத்துகளுக்கு உள்ளத்தில் இடம் கொடுத்துவிடக் கூடாது. கடவுளை அடையவே எல்லா வகையிலும் உண்மையாக முயலவேண்டும். ஊர் உலகத்தைக் காப்பாற்றப் போவதாக நினைத்துக்கொண்டு தாங்களே படுகுழியில் போய் விழுந்துவிடக் கூடாது. இப்படிச் சொல்வதைவிட, பரமஹம்சதேவர் அருளியுள்ள இந்தக் கதைக்கு வேறு எதை விளக்கமாக எழுத முடியும்? அவர் தாம் பட்டப்பகல் வெளிச்சத்தைப் போல, சொல்ல வந்த கருத்தைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிருரே!

சாதகர்களே! எச்சரிக்கையாக இருங்கள்.

IV. அரைகுறை வேதாந்தம்

15. அரைகுறை வேதாந்தம்

'உலகம் பிரம்மமயம்' என்பது உயர்ந்த ஓர் அத்வைதக் கொள்கையாகும். ஒரு முறை இந்தப் பெரிய உண்மையை அரசன் ஒருவனுக்கு அவனுடைய குரு உபதேசித்தார். அதைக் கேட்ட அரசன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அரண்மனை

திரும்பியதும் தனது பட்டத்தரசியை அழைத்து, ''ராணிக்கும் ராணியின் வேலைக்காரிக்கும் எந்தவித வேற்றுமையும் கிடையாது. ஆகையால் இனி முதற் கொண்டு வேலைக்காரியே ராணியாக இருப்பாள்'' என்று சொன்னான்.

அரசனின் முட்டாள்தனமான இந்தப் பேச்சைக் கேட்டதும், ராணிக்கு இடிவிழுந்தது போல இருந்தது. உடனே அவள் ஆளைவிட்டு அனுப்பிக் குருவை அரண்மனைக்கு வரும்படி கேட்டுக்கொண்டாள்.

குரு வந்தவுடன் அவரிடம் தன் பரிதாபகரமான நிலையை எடுத்துச் சொன்னாள். ''சுவாமி! தங்களுடைய உபதேசத்தால் விளைந்த விபரீதத்தைப் பாருங்கள்'' என்று நடந்த விவரங்களைச் சொல்லி அழுதாள்.

ராணி சொன்னதைக் குரு கேட்டார். அவளுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினார். பிறகு அவளிடம், ''இன்றைய தினம் நீ அரசனுக்குச் சாதம் பரிமாறும் போது, ஒரு சட்டி மலத்தையும் கூடவை வைத்துப் பரிமாற ஏற்பாடு செய்'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

சாப்பாட்டு வேளை வந்ததும், அரசனும் குருவும் சாப்பிட உட்கார்ந்தார்கள். தனக்காகச் சாதமும், அதன் அருகிலேயே மலமும் வைக்கப்பட்டிருந்ததை அரசன் பார்த்தான். கோபம் அவனுக்குப் பொங்கி எழுந்தது. இதைப் பார்த்த குரு வெகு சாந்தமாக,

''உனக்கு அத்வைத ஞானம் வெகுவாக உண்டே! பிறகு ஏன் மலம் வேறு, சாதம் வேறு என்று வேறு படுத்திப் பார்க்கிருய்?'' என்று கேட்டார்.

குரு சொன்னதைக் கேட்டதும் அரசனின் கோபம் அளவுகடந்து போயிற்று. ஆகவே அவன் கோபத்துடன் குருவை நோக்கி, ''பெரிய அத்வைதி என்று பெருமை அடித்துக் கொள்ளும், நீங்கள்தாம் இந்த மலத்தைச் சாப்பிடுங்களேன், பார்க்கலாம்'' என்று சொல்லிப் பொரிந்து கொட்டிஞன்.

''நல்லது'' என்று சொல்லி, குரு உடனே ஒரு பன்றியாக உருவம் எடுத்தார். மிகுந்த விருப்பத் துடன் மலம் முழுவதையும் விழுங்கிவிட்டு, மீண்டும் தமது மனித வடிவத்தை எடுத்துக்கொண்டார்.

இதைப பார்த்த அரசன் வெட்கப்பட்டுப் போஞன். அவனுக்கு புத்தி வந்தது. பிறகு மறு படியும் அவன், அதைப்போன்ற முட்டாள்தனமான பேச்சை ராணியிடம் பேசவே இல்லை.

நடைமுறை வாழ்க்கையில் வேதாந்தத்தை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டு சாதகன் அனுஷ்டிக்க வேண்டும்.

16. பிராம்மணனின் வேதாந்தம்

ஒரு பிராம்மணன் புதிதாகத் தோட்டம் ஒன்று அமைத்தான். இரவு பகலாக அதைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றி வந்தான்.

ஒரு நாள் அந்தத் தோட்டத்தில் பசு ஒன்று புகுந்தது. அந்தப் பிராம்மணன் மிகுந்த கவனத் தோடு அருமையாக வளர்த்த மாஞ்செடி ஒன்றை மேய்ந்துவிட்டது. பிராம்மணன் இதைக்கண்டான். அவனுக்கு அந்தப் பசுவின் மேல் ஏற்பட்ட ஆத்திரத் திற்கு அளவில்லே. கோபத்துடன் அவன் பசுவை அடி அடியென்று பலமாக அடித்தான். அந்த அடி பொறுக்கமாட்டாமல் பசு இறந்தே போய்விட்டது.

பிராம்மணன் பசுவைக் கொன்றுவிட்டான் என்ற செய்தி காட்டுத் தீயைப் போல ஒரு நொடி யில் ஊர் முழுவதும் பரவியது.

மற்றவர் முன்னுல் தன்னே வேதாந்தி என்று காட்டிக் கொண்டவன் இந்தப் பிராம்மணன். ஆகை யால், அவன் எதற்கும் ஒரு காரணத்தைக் கண்டு பிடித்து, 'வேதாந்த முறையில்' பதில் சொல்லி விடுவான். யாராவது அவனிடம், 'பிராம்மணராகிய நீங்கள் பசுவைக் கொன்றது மகாபாவம்' என்று சொன்னுல், அதைத் தான் செய்த குற்றமாகப் பிராம்மணன் ஒப்புக்கொள்ள மாட்டான். அவன் தான் பெரிய 'வேதாந்தி' ஆயிற்றே! ''நான் பசுவைக் கொல்லவில்லே. என் கையே கொன்றது. இந்திரன் தான் கைக்கு அதிதேவதையாக இருப்பவன். ஆகவே பசுவைக் கொன்ற பாவம் இந்திரனேயே சேரும். நான் அதற்குப் பொறுப்பாளி அல்ல. குற்றம் இந்திரனேயே சேர்ந்தது'' என்று சொல்லி வந்தான். தான் ஒன்றும் தெரியாத அப்பாவியைப் போலவும் தர்மவானேப் போலவும் நடித்து இந்திரன்மேல் பழியைச் சுமத்திஞன் பிராம்மணன்.

பிராம்மணன் இப்படிச் சொல்லித் திரிவதைத் தேவலோகத்தில் இருந்த இந்திரன் கேள்விப்பட்டான். அவன் ஒரு கிழப் பிராம்மணன் உருவத்தை எடுத்துக்கொண்டு, தோட்டத்துச் சொந்தக்காரனுகிய பிராம்மணனிடம் சென்றுன். "சுவாமி, இந்தத் தோட்டம் யாருடையது?" என்று கேட்டான்.

பிராம்மணன்:—எனக்குத்தான் சொந்தமானது.

இந்திரன்:—இந்தத் தோட்டம் மிகமிக அழகாக இருக்கிறது. இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது. உங்கள் தோட்டக்காரன் நல்ல திறமைசாலியாக இருக்க வேண்டும். அதனுல்தான் இந்த மரங்களே இவ்வளவு அழகாகவும் வரிசை வரிசையாகவும் சிறப்பாக நாட்டிருக்கிருன்.

பிராம்மணன்:—மகிழ்ச்சி. இது நான் செய்த வேலேயாகும்! மரங்கள் எல்லாவற்றையும் எனது யோசனேப்படி, என் மேற்பார்வையில் என் உத்தரவுப்படியே தோட்டக்காரன் நட்டான்.

இந்திரன்:—அப்படியா? சரிதான். உண்மையிலேயே நீங்கள் வெகு அழகாகத்தான் செய்திருக்கிறீர்கள். இதோ இருக்கிறதே, இந்தப் பாதையை யார் போட்டார்கள்? இதுவும் வெகு நேர்த்தியாகப் போடப்பட்டிருக்கிறது.

பிராம்மணன்:—இதையும் நான்தான் செய்தேன்.

இதை எல்லாம் கேட்ட இந்திரன், கூப்பிய கையோடு, ''பிராம்மணரே! இவை எல்லாமே உங்களுடையவை என்று சொல்கிறீர்கள். இந்தத் தோட்டத்தில் நடைபெற்றிருக்கும் வேலைகள் அனைத்தையும் நீரே செய்ததாகவும், அவற்றுக்கு உரிய பெருமை எல்லாம் உங்களுக்கே சேரவேண்டும் என்று சொல்கிறீர்கள். அப்படி இருக்கும்போது பசுவைக் கொன்ற பாவத்திற்கு மட்டும் இந்திரனை உட்படுத்துவது நியாயமாகுமா?'' என்று கேட்டுவிட்டு மறைந்து போனான்.

கடவுள் ஒருபோதும் தீமைகளால் தீண்டப் படாதவர். எப்போதும் தூய்மையிலேயே இருந்து கொண்டிருப்பவர். நீ செய்யும் தீய செயல்களுக்கு அவரைக் காரணமாக சொல்லாதே. உன் தீய செயல்களுக்கு நீயே பொறுப்பாளி.

அரைகுறையாக வேதாந்தத்தைத் தெரிந்து கொள்வது ஆபத்தானது.

17. உலகில் வாழும் முறை

இடைப்பையன்கள் சிலர் புல்வெளிக்கு மாடுகளை ஓட்டிச் சென்று மேய்ப்பது வழக்கம்.

அந்தப் புல்வெளிப் பகுதியிலே ஒரு பாம்பு வசித்தது. அந்த வழியாக யார் போனாலும் அது அவர்களைக் கடித்து வந்தது. அதனால் பயந்துபோன மக்கள் அந்த வழியாக போகாமல் எச்சரிக்கையாக இருந்தார்கள்.

ஒரு நாள் ஒரு பிரம்மசாரி அதே புல்வெளி வழியாக போய்க்கொண்டிருந்தார். இதைப் பார்த்த இடைப்பையன்கள் அவரை நோக்கி ஓடிச் சென்று ''சுவாமி, அந்தப் பக்கம் போக வேண்டாம். ஒரு கொடிய விஷப்பாம்பு அங்கே வசிக்கிறது'' என்று சொன்னார்கள்.

பையன்கள் சொன்னதைக் கேட்டுப் பிரம்ம சாரிக்கும் பயம் ஏற்படவில்லை. அந்தப் பையன் களிடம், ''குழந்தைகளே, பாம்பு இருந்தால் என்ன? எனக்கு ஒன்றும் பாம்பு பயம் கிடையாது. எனக்குச் சில மந்திரங்கள் தெரியும்'' என்று சொல்லிவிட்டுப் பாம்பு இருந்த வழியாகவே அவர் நடந்து போனார்.

பையன்கள் பயந்தார்கள். 'ஆபத்தை இவராக விலைகொடுத்து வாங்கிக் கொள்கிறாரே' என்று நினைத்து, அவருடன் போகாமல் தூரத்திலேயே நின்று விட்டார்கள்.

பிரம்மசாரி மேலே மேலே தமது வழியே போய்க் கொண்டிருந்தார்.

பாம்பு அவரைப் பார்த்ததும் சீறிக்கொண்டு ஓடி வந்தது. படத்தை உயர்த்திக் கொண்டு வேக வேகமாக ஓடி வரும் பாம்பைப் பிரம்மசாரியும் பார்த்தார். பாம்பைப் பார்த்துக்கொண்டே அவர் ஒரு மந்திரத்தைச் சொன்னார். உடனே அந்த மந் திரத்தின் மகிமை காரணமாகப் பாம்புக்கு இருந்த கொடிய குணம் முழுவதும் போய்விட்டது. பாம்பு ஒரு மண் புழுவைப் போல அவரது காலடியில் படுத்துக் கொண்டது.

அப்போது பிரம்மசாரி அன்பும் கருணையும் பொங்கப் பாம்பைப் பார்த்துச் சொன்னார்: "இதோ நான் சொல்வதைக் கேள். நீ ஏன் அனைவருக்கும் தீமை செய்கிறாய்? நான் உனக்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்கிறேன். அதை நீ ஜபித்து வந்தால் கடவுள் மீது உனக்குப் பக்தி ஏற்படும். அதன் மூலம் உன்னிடம் உள்ள தீய குணங்களும் உன்னை விட்டு விலகிப் போய்விடும். முடிவில் பகவானுடைய தரிசனம் உனக்குக் கிடைக்கும்."

பிரம்மசாரி இப்படிச் சொல்லிவிட்டு, ஞான வாழ்க்கைக்கு உரிய ஒரு மந்திரத்தைப் பாம்புக்கு உபதேசம் செய்தார்.

பாம்பும் குருவைப் பக்தியுடன் பணிந்து, "சுவாமி நான் எப்படி ஞானசாதனம் பழக வேண்டும்?" என்று கேட்டது.

அதற்குக் குரு, "நான் கொடுத்த மந்திரத்தை எப்போதும் ஜபித்துக் கொண்டிரு. இனிமேல் யார் ஒருவருக்கும் நீ தீங்கு செய்யாதே" என்று சொன்னார்.

அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகப் பாம்பு தலையை அசைத்தது.

பிரியும் சமயத்தில் பாம்பிடம், "நான் உன்னை மீண்டும் சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றார் பிரம்மசாரி.

அவர் போனபிறகு பாம்பு தன் புற்றில் நுழைந்தது. அந்த நிமிடம் முதல் யாருக்கும் தீங்கு

செய்யாமலும், செய்ய நினைக்காமலும் அந்தப் பாம்பு வாழ்ந்து வந்தது.

இவ்விதம் சில தினங்கள் கழிந்தன. பாம்பு இப்போதெல்லாம் ஒருவரையும் கடிப்பதில்லை என்பதை இடைப்பையன்கள் கவனித்துவிட்டார்கள். பாம்புக்கு இருந்த விஷம் எல்லாம் போய் விட்டது என்று முடிவு செய்தார்கள்.

பாம்பின் உள்ளத்தில் குருவின் உபதேசம் மிகப் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணி இருந்தது ஆனால் அதை இடைப்பையன்கள் உணரவில்லை. பாம்பிடம் அவர்களுக்கு இருந்து வந்த அச்சம் போய்விட்டது. ஆகையால் பையன்கள் பாம்பைப் பலவிதமான துன்பங்களுக்கு உட்படுத்தினர். அதன் மீது அவர்கள் கற்களை வீசினார்கள். ஆனால் சாதுவாகிவிட்ட அந்தப் பாம்போ அவர்கள் மீது கோபம் கொள்ளவில்லை; அவர்களைக் கடித்துத் துன்புறுத்தவும் இல்லை. பையன்கள் விளைத்த எல்லாத் துன்பங்களையும் பொறுமையாகப் பாம்பு ஏற்றுக்கொண்டது.

ஒரு நாள் இடைப்பையன்களில் ஒருவன் பாம்பின் அருகில் சென்று, அதன் வாலைப் பிடித்து மேலே தூக்கினான்! பிறகு அதைப் பிடித்துக்கொண்டு 'கிடுகிடு' வென்று பலமுறை சுழற்றித் தரை மீது திரும்பத் திரும்ப அறைந்துவிட்டு ஒரு பக்கமாக வீசினான். பாம்பு இரத்தம் கக்கியது; மூர்ச்சை அடைந்துவிட்டது. இதைப் பார்த்த பையன்கள்

பாம்பு இறந்துவிட்டது என்று நினைத்துக்கொண்டு தங்கள் வழியே போய்விட்டார்கள்.

இரவு நெடுநேரம் கழிந்தபிறகு, பாம்புக்கு மெல்ல மெல்ல உணர்ச்சி வந்தது.

பலமான அடி காரணமாகப் பாம்புக்கு உடம்பெல்லாம் வலித்தது. உடல் முழுவதும் அதற்குப் புண். எப்படியோ ஒருவிதமாக மெதுவாகவும் மிக மிகச் சிரமப்பட்டும் ஊர்ந்து ஊர்ந்து அது தன் வளைக்குள் சென்றது. அதன் எலும்புகள் நொறுங்கிப் போயிருந்தன. நகரவும் அதற்கு சக்தி இல்லை. இப்படியே பல காலம் சென்றது. எலும்பும் தோலுமாகப் பாம்பின் உருவமே மாறிவிட்டது! எப்போதாவது இரை தேடுவதற்காக மட்டும் இரவு நேரங்களில் அது பொந்தை விட்டு வெளியே வரும். பையன்களுக்குப் பயந்து கொண்டு பகல்நேரத்தில் பொந்தை விட்டு வெளியே வருவதையே பாம்பு அடியோடு நிறுத்திவிட்டது. குருவின் கிருபையால் மந்திரதீட்சை கிடைத்த நாள்முதல் மற்றவர்களுக்குத் தீங்கு செய்வதை அது விட்டொழித்தது. கிழங்கு, இலை, சருகுகள் மரத்திலிருந்து தானாக விழுந்த பழம் ஆகியவற்றை மட்டும் தின்று எப்படியோ ஒருவிதமாக உயிர் வாழ்ந்து வந்தது.

இவ்விதம் சுமார் ஓராண்டுக் காலம் கடந்தது. பிரம்மசாரி மறுபடியும் அதே வழியாக வந்தார். அப்போது அவர் பையன்களிடம் பாம்பைப்பற்றி விசாரித்தார். பையன்கள், "பாம்பு எப்போதோ இறந்து போய்விட்டதே!" என்று சொன்னார்கள்.

ஆனுல் அவர்கள் அப்படிச் சொன்னதைப் பிரம்ம சாரியால் நம்ப முடியவில்லே. தாம் உபதேசித்த மந்திரத்தின் முழுப் பலனேயும் அடைவதற்கு முன் பாகப் பாம்பு இறந்து போகாது என்பது அவருக் குத் தெரியும். ஆகவே அவர் பையன்களிடம், ''சரி, நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டார். பிறகு முதன் முதலாகப் பாம் பைத் தாம் சந்தித்த அதே இடத்திற்குச் சென் ருர். அங்கும் இங்கும் தேடிப்பார்த்தார். ஆனுல் பாம்பு பிரம்மசாரியின் கண்ணுக்குத் தென்படவே இல்லே.

மந்திர தீட்சை கொடுத்தபோது பாம்புக்கு அவர் புதிய ஒரு பெயரை வைத்திருந்தார். அந்தப் பெயரைச் சொல்லி பாம்பு எங்கேயாவது இருந் தால் வெளியே வரட்டும் என்று அழைத்தார்.

குருவின் குரலேக் கேட்ட பாம்பு, பொந்தை விட்டு வெளியே வந்தது. மிகமிகப் பயபக்தியோடு குருநாதரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கியது. பாம்பு ஒரு குச்சியைப் போல மெலிந்து போயிருப் பதைப் பிரம்மசாரி கவனித்தார். பிரம்மசாரி அதனிடம், ''என்ன சௌக்கியமாக இருக்கிருயா?'' என்று அருள் ததும்பும் குரலில் கேட்டார். அதற்குப் பாம்பு, ''தாங்கள் கிருபையால் நிரம்பச் சௌக்கிய மாக இருக்கிறேன்'' என்று பதில் சொன்னது.

பிறகு பிரம்மசாரி கேட்டார், ''ஆனுல் நீ ஏன் இப்படி ஒரேயடியாக மெலிந்துபோயிருக்கிருய்? உனக்கு என்ன நடந்தது?''

பாம்பு:—சுவாமி, ஒருவரையும் இம்சிக்கக் கூடாது என்று தாங்கள் கட்டளையிட்டிருந்தீர்கள். நான் அதன்படியே இலே, பழம் போன்றவற்றை மட்டும் தின்று உயிர் வாழ்ந்து வருகிறேன். அதனுல் ஒரு வேளே நான் முன்பைவிட மெலிந்து போயிருக்கலாம்.

பாம்பு நற்குணங்களேயே கொண்டதாக மாறியிருந்தது. யாரிடமும் கோபம் கொள்ள முடியாத உயர்ந்த மகானின் நிலேயைப் பெற்றுவிட்டது. இடைப்பையன்கள் சேர்ந்து ஏறக்குறையத் தன்னே ஒரு நாள் கொன்ருர்கள் என்பதை முழுமையாக மறந்துவிட்டது.

பிரம்மசாரி அதைப்பார்த்து,''வெறும் பட்டினி காரணமாக மட்டும் இவ்வளவு மோசமான நிலேயை நீ அடைந்திருக்க வழியில்லே. உனது இந்த நிலேக்கு வேறு ஏதாவது ஒரு காரணம் இருந்தாக வேண்டும். சற்று யோசனே செய்துபார்'' என்று கேட்டார்.

பாம்பு சிறிது நேரம் யோசித்தது. அப்போது தான் அதற்குப் பையன்கள் தன்னே ஒரு நாள் பலமாகத் தரையின்மீது அறைந்தார்கள் என்பது நினேவுக்கு வந்தது.

பாம்பு:—சுவாமி! இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. பையன்கள் என்னேப் பிடித்து முரட்டுத் தனமாகத் தரைமீது அடித்தார்கள். அவர்கள் அறியாத பிள்ளேகள்தாமே; எனது உள்ளம் எவ்வளவோ மாறிவிட்டது என்பதை அவர்கள்

உணரவில்லே. நான் ஒருவரையும் கடிக்கவோ, தீங்கு செய்யவோ விரும்பமாட்டேன். அதை அந்தக் குழந்தைகள் எப்படி அறிய முடியும்?

பையன்கள் இழைத்த துன்பங்களேப் பாம்பு மறந்திருந்தது. நினைவு வந்தபோது அவர்களே மனப்பூர்வமாக மன்னித்ததுடன் அவர்களுக்காகப் பரிந்தும் பேசியது.

பிரம்மசாரி:—''என்ன வெட்கக்கேடு! நீ இப்படிப்பட்ட முட்டாளாக இருக்கிருயே! உன்னேக் காப்பாற்றிக்கொள்ளவும் உனக்குத் தெரியவில்லே. நான் உன்னிடம் யாரையும் கடிக்க வேண்டாம் என்று மட்டும் தான் சொன்னேன். ஒருவரையும் சீறிப் பயமுறுத்தக் கூடாது என்று நான் உனக்குச் சொல்லவில்லேயே. அவர்களேப் பயமுறுத்துவதற்காக நீ ஏன் சீருமல் இருந்தாய்? நீ ஒருவரையும் கடிக்கக் கூடாதுதான். ஆனுல் மற்றவர் உனக்கு தொந்தரவு செய்யாத வகையில், அவர்களேச் சீறி உன்னே நீ பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் இந்தக் கதையைப் பக்தர்களுக்குக் கூறி, ''ஆதலால் கெட்டவர்கள்மீது நீ சீறத்தான் வேண்டும். உனக்கு அவர்கள் தீமை செய்யாமல் இருக்கும்பொருட்டு அவர்களே நீ அவசியம் பயமுறுத்த வேண்டும். ஆனுல் ஒருநாளும் உனது விஷத்தை அவர்கள் மீது செலுத்திவிடாதே. மற்றவர்களுக்கு தீங்கு செய்யக்கூடாது. நீ உலகில் வாழும்போது மற்றவர்களுக்கு அச்சமும் மரியாதையும் ஏற்படும் வகையில் நடந்து வா. ஆனுல் உள்ளத்

தாலும் பிறருக்குத் தீமை வராதபடி உன்னை நீ பாதுகாத்துக் கொள்'' என்று சொல்வதன் மூலம் சாதகர்கள் உலகில் வாழ வேண்டிய முறையை எடுத்துக் காட்டுகிறார்.

18. வேதாந்தத்தை புரிந்துகொள்

ஒரு காட்டிலே ஒரு சாது இருந்தார். அவருக்குப் பல சீடர்கள் இருந்தார்கள். ஒரு நாள் அவர் தமது சீடர்களிடம், ''உலகில் உள்ளவை எல்லாம் கடவுளுடைய வடிவங்கள். இதை அறிந்து நீங்கள் அனைவரையும் வணங்குங்கள்'' என்று உபதேசித்தார்.

ஒரு நாள் ஒரு சீடன், ஹோமம் வளர்ப்பதற்கு வேண்டிய விறகுகளைச் சேகரிக்கக் காட்டிற்குச் சென்றான். அப்போது திடீரென்று பலமான ஒரு குரல் கேட்டது. ''யார் எங்கிருந்தாலும் ஓடிவிடுங்கள்! மதம் பிடித்த ஒரு யானை வருகிறது!''

இந்தக் குரலைக் கேட்டதும் அங்கிருந்தவர்கள் எல்லோரும் ஓட்டம் பிடித்தார்கள். ஆனால், அந்தச் சாதுவின் சீடன் மட்டும் நகரவில்லை. ''நான் எதற்காக ஓடவேண்டும்? நானும் கடவுள்; இந்த யானையும் கடவுள்'' என்று சொல்லிக் கொண்டே அசையாமல் நின்றுவிட்டான்.

விரைவில் யானை சமீபித்துவிட்டது. சீடன் இருந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தான். கைகளைக் கூப்பிக்கொண்டு யானையை நோக்கி நாராயண ஸ்துதியை அவன் பாட ஆரம்பித்தான்.

யானையின் மேலிருந்த மாவுத்தன், 'ஓடிப்போ! ஓடிப்போ!'' என்று கத்தினான். அப்படியும் அந்தச் சீடன் நகரவே இல்லை. சீடனை மதயானை நெருங்கியது. அவனை அது துதிக்கையால் தூக்கி எடுத்து, ஒரு பக்கமாக ஓங்கி வீசிவிட்டுப் போய்விட்டது. அது காரணமாகப் பலமான காயங்களுடன் சீடன் மூர்ச்சித்து விழுந்தான்.

ஆசிரமவாசிகள் நடந்ததைக் கேள்விப்பட்டார்கள். சீடன் இருக்கும் இடத்திற்கு வந்து அவனைத் தூக்கிப் போனார்கள். சீடனுக்கு மெல்ல மெல்ல உணர்வு திரும்பியது. அப்போது மற்றச் சீடர்களில் ஒருவர், ''யானை வந்ததுதான் உனக்குத் தெரியுமே; நீ ஏன் அங்கிருந்து ஓடவில்லை?'' என்று கேட்டார்.

அதற்குச் சீடன் பதில் சொன்னான்: ''உலகில் உள்ளவை எல்லாம் கடவுளுடைய வடிவங்கள். அவரே மனிதன், விலங்கு முதலிய எல்லா வடிவங்களிலும் இருந்துகொண்டிருக்கிறார்—என்று நமது குருதேவர் உபதேசத்திருக்கிறார் அல்லவா? ஆகவேதான் யானையைப் பார்த்தபோது, யானை வடிவில் உள்ள கடவுள்தானே வருகிறார் என்று நினைத்தேன். ஆதலால் அங்கிருந்து ஓடாமல் இருந்தேன்.''

சீடனின் பதிலைக் கேட்ட குருநாதர், ''குழந்தாய்! அதெல்லாம் சரிதான். நீயும் கடவுள்தான். அந்த யானையும் கடவுள்தான். ஆனால், யானை மேலிருந்த பாகனாகிய கடவுள் உன்னை எச்சரித்தபோது, அவனது வார்த்தையில் உனக்கு ஏன் நம்பிக்கை ஏற்படவில்லை? நீ மாவுத்தன் வடிவிலிருந்த கடவு

ளுடைய வார்த்தையையும் மதித்திருக்க வேண்டும். அதன்படி கேட்டு நீ நடந்திருக்க வேண்டும் அல்லவா?'' என்று கேட்டார்.

தூய்மையுள்ளவர்கள்—தூய்மை இல்லாதவர்கள், நேர்மை உள்ளவர்கள்—நேர்மை இல்லாதவர்கள் ஆகிய அனைவருடைய இதயத்திலும் கடவுள் வாழ்கிறார். இதுதான் உண்மை. அதில் ஒன்றும் சந்தேகத்திற்கே இடமில்லை.

ஆனால், பக்தி இல்லாதவர்கள், தூய்மை இல்லாதவர்கள், கொடியவர்கள் ஆகியோருடைய தொடர்பையே ஒருவன் வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களுள் சிலரிடம் அவன் ஒரு சில சொற்களை மட்டுமே பேசி நிறுத்திக்கொள்ள வேண்டும்; மற்றவர்களிடம் அவ்வளவு தூரத்திற்குக் கூடப் போகக்கூடாது. அத்தகையவர்களிடமிருந்து அவன் விலகியே இருக்கவேண்டும்.

V. மதப்பித்து

19. கண்டா கர்ணன்

மத விஷயத்தில் கண்டா கர்ணனைப் போல குறுகிய மனப்பான்மையைக் கொண்டிருக்கக் கூடாது.

ஒருவன் சிவபெருமானை மனப்பூர்வமாக வணங்கி வழிபட்டு வந்தான். ஆனால் அதே சமயத்தில் மற்றத் தெய்வங்களை எல்லாம் தூற்றினான். இந்த நிலையில் ஒரு நாள் சிவபெருமான் அவன் முன்னால் தோன்றி, ''நீ மற்றத் தெய்வங்களைத்

தூற்றிக்கொண்டிருக்கும் வரையிலும் உன்மீது எனக்குப் பிரியம் உண்டாகாது'' என்று சொன்னார். ஆனால் தன் இஷ்டதெய்வம் பிரத்தியட்சமாகி அப்படிச் சொன்னதைக்கூட அவன் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. ஆண்டவன் சொன்னதை அப்போது மௌனமாக இருந்து அவன் கேட்டுக் கொண்டான்.

அவனது மதப்பிடிவாதம் மாறாமலே இருந்தது. மற்றத் தெய்வங்களை இகழ்ந்து பேசுவதை அவன் நிறுத்தவும் இல்லை.

மீண்டும் ஒரு நாள் சிவபெருமான் அவனுக்குப் பிரத்தியட்சமானார். இந்த முறை அவர் ஹரிஹரன் வடிவத்தில் அதாவது ஒரு பாதி விஷ்ணுவாகவும் மறுபாதி சிவபெருமானாகவும் தோன்றினார். இந்த வடிவத்தைக் கண்டதும் அவனுக்குப் பாதி மகிழ்ச்சியும் பாதி வெறுப்பும் ஏற்பட்டன. சிவ வடிவம் உள்ள பாகத்தில் மட்டும் நைவேத்தியங்களைச் சமர்ப்பித்து வந்தனை வழிபாடுகளைச் செய்தான். விஷ்ணுவின் வடிவம் இருந்த பாகத்திற்கு அவன் ஒன்றுமே செய்யவில்லை. சிவ வடிவம் இருந்த பாகத்தின் முன்னால் அவன் நறுமணம் கமழும் ஊதுவத்திகளை ஏற்றி வைத்தான். அப்போது விஷ்ணுவின் மூக்கில் அந்த நறுமணம் நுழைந்து விடக்கூடாது என்பதற்காக, விஷ்ணுவின் மூக்கைக் கைவிரல்களால் மூடிப் பலமாக அழுத்தினான். அவனது மதவெறியைக் கண்ட சிவபெருமான் அவனிடம், ''அடே, என்ன, இப்படிப்பட்ட மத வெறியனாக இருக்கிறாயே! எல்லாத் தேவதேவிகளும்

ஒரே பரம்பொருளின் தோற்றங்கள் என்பதை உனக்கு உணர்த்துவதற்காகவே நான் இந்த இரட்டை வடிவத்தில் தோன்றினேன். அப்படியும் இந்த உண்மையை நீ உணரவில்லை. இந்தக் குற்றத்திற்காகப் பல காலம் நீ துன்பப்படுவாயாக'' என்று சொல்லி மறைந்துவிட்டார்.

பிறகு அந்த மனிதன் ஒரு கிராமத்திற்குச் சென்று வாழ ஆரம்பித்தான். விரைவிலேயே அவனிடம் விஷ்ணுவைப் பழித்துப் பேசும் மனப்பான்மை முன்பு இருந்ததைவிடவும் அதிகமாக வளர்ந்தோங்கிவிட்டது. கிராமத்து மக்களுக்கும் அவன் ஒரு பரம விஷ்ணு துவேஷி என்பது தெரிய வந்தது. அந்தக் கிராமத்துப் பையன்கள் அவன் காதுகளில் விஷ்ணுவின் நாமமே விழும் வகையில் உரத்த குரலில் விஷ்ணுவின் நாமத்தைச் சொல்லி அவனைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தார்கள்.

ஆகவே, அவன் விஷ்ணு நாமங்கள் தன் காதிலேயே விழக்கூடாது என்பதற்காக, இரண்டு காதுகளிலும் இரண்டு மணிகளைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டான். அப்போதிலிருந்து அவன், பையன்கள் விஷ்ணுநாமத்தைச் சொல்லும்போதெல்லாம் அந்தச் சப்தம் கேட்காமல் இருப்பதற்காக அந்த மணிகளை ஆட்டிக்கொண்டான். இதனால் அவனுக்குக் 'கண்டா கர்ணன்' அதாவது மணி தொங்கும் காதுகளை உடையவன் என்ற பெயர் வந்தது.

20. குருடர் கண்ட யானை

நான்கு குருடர்கள் சேர்ந்து ஒரு யானையைப் பார்க்கப் போனார்கள். அவர்களிலே ஒருவன் யானையின் காலைத் தொட்டுப் பார்த்தான். "யானை தூணைப்போல இருக்கிறது" என்று சொன்னான்.

மற்றொருவன் துதிக்கையைத் தொட்டுப் பார்த்தான். "யானை உலக்கையைப் போல இருக்கிறது" என்றான்.

மூன்றாமவன் யானையின் வயிற்றைத் தடவிப் பார்த்தான். "யானை பெரிய ஜாடியைப் போலவே இருக்கிறது!" என்று சொன்னான்.

நான்காமவன் அதன் காதைக் தொட்டுப் பார்த்தான். யானை முறத்தைப் போலவே இருக்கிறது" என்றான்.

இவ்விதம் நான்கு குருடர்களும் யானையின்உருவத்தைப்பற்றி விவாதித்தார்கள். விவாதம் பலமாக நடந்தது. அப்போது அந்த வழியாக ஒரு வழிப் போக்கன் வந்தான். "நீங்கள் ஏன் இப்படிச் சச்சரவு செய்கிறீர்கள்?" என்று அவன் அவர்களை கேட்டான்.

குருடர்கள் வழிப்போக்கனிடம் தங்கள் விவாதத்தைப் பற்றிச் சொன்னார்கள். தங்களுடைய பிரச்னையைத் தீர்க்கும்படியும் கேட்டுக்கொண்டார்கள். வழிப்போக்கன் அவர்களிடம், "உங்களில் ஒருவருமே யானையை முழுமையாக பார்க்கவில்லை. யானை தூணைப்போல இல்லை; அதன் கால்கள்தான்

தூண்களைப் போல இருக்கின்றன. அது ஒரு ஜாடியைப் போலவும் இல்லை; அதன் வயிறு மட்டும் தான் ஜாடியைப் போல இருக்கிறது. யானை முறத்தைப் போல இல்லை; அதன் காதுதான் அப்படி இருக்கிறது. யானை உலக்கையைப் போல இல்லை; அதன் துதிக்கையே உலக்கையைப் போல இருக்கிறது. இவை எல்லாமே சேர்ந்த ஓர் உருவம் தான் யானை ஆகும்'' என்று சொன்னான்.

கடவுளுடைய குறிப்பிட்ட ஏதோ ஒரு வடிவத்தை மட்டும் பார்ப்பவர்களும் குருடர்களைப் போல இப்படித்தான் சச்சரவு செய்வதில் ஈடுபடுகிறார்கள்.

21. கிணற்றுத் தவளை

ஒரு கிணற்றிலே ஒரு தவளை நீண்ட காலமாக வாழ்ந்து வந்தது. அது அந்தக் கிணற்றிலேயே பிறந்தது; அங்கேயே வளர்ந்தது. ஒருநாள் சமுத்திரத்தில் வசித்த வேறொரு புதிய தவளை அந்தக் கிணற்றில் வந்து குதித்தது. இரண்டு தவளைகளும் சந்தித்துக் கொண்டன. கிணற்றுத் தவளை, புதிய தவளையைப் பார்த்துக் கேட்டது; ''நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?''

''நான் கடல் தவளை. சமுத்திரத்திலிருந்து வருகிறேன்'' என்றது கடல் தவளை.

கிணற்றுத் தவளை, ''சமுத்திரமா! அது எவ்வளவு பெரிது?'' என்று கேட்டது.

''சமுத்திரம் மிகவும் பெரியது'' என்று வந்த தவளை பதில் சொன்னது.

கிணற்றுத் தவளை தன் கால்களை அகல நீட்டி, ''நீ சொல்லும் உன் சமுத்திரம் இவ்வளவு பெரியதாக இருக்குமோ?'' என்று கேட்டது.

''அது இன்னமும் எவ்வளவோ பெரியது'' என்றது கடல் தவளை.

இதைக் கேட்டதும் கிணற்றுத் தவளை கிணற்றினுள் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குத் தாண்டிக்குதித்து, ''நீ சொல்கிற உன் கடல் இவ்வளது பெரியதாக இருக்குமா?'' என்று கேட்டது.

''நண்பா! கிணற்றைக் கடலுக்கு எப்படி ஒப்பிட முடியும்?'' என்றது கடல் தவளை.

கிணற்றுத் தவளை, ''இல்லை, இவன் சொல்வதைப் போல ஒன்று எந்தக்காலத்திலும் இருப்பதற்கு வழியில்லை. என் கிணற்றைக் காட்டிலும் பெரியது ஒன்று ஏது? இவன் பொய்யன். இவனை இங்கிருந்து விரட்டி ஓட்டிவிட வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டது.

விரிந்த நோக்கம் இல்லாதவனின் விஷயமும் இப்படிப்பட்டதுதான், அவன் தனது கருத்தோ, அனுபூதியோ சிறந்ததென்றும், அதைவிடவும் சிறந்த கருத்தோ அனுபூதியோ இருக்க முடியாது என்றும் நினைக்கிறான்.

22. பச்சோந்தி

ஒரு சமயம் ஒருவன் ஒரு காட்டுக்குள் சென்றிருந்தான். அப்போது அங்குள்ள ஒரு மரத்திலே ஓர் அழகான பிராணி இருப்பதைப் பார்த்தான். திரும்பி வந்தபோது, வழியில் சந்தித்த வேறு ஒருவனிடம், ''நான் ஒரு மரத்திலே சிவப்பு நிறம் கொண்ட அழகிய பிராணி ஒன்றைப் பார்த்தேன்'' என்று சொன்னான்.

ஆனால் அவன் சொன்னதை இரண்டாமவன் ஒப்புக்கொள்ளவில்லை. ''நீ தவறாகச் சொல்கிறாய். நானும் காட்டுக்குப் போயிருந்தபோது அந்தப் பிராணியைப் பார்த்தேன். ஆனால் நீ ஏன் அதைச் சிவப்பு நிறமுடையது என்று சொல்கிறாய்? அது நீல நிறத்தில் இருந்ததை நானே பார்த்தேனே'' என்றான் இரண்டாமவன்.

இருவருடைய உரையாடல்களையும் மூன்றாமவன் ஒருவன் கவனித்தான். ''நீங்கள் இருவருமே தவறாகச் சொல்கிறீர்கள். நீங்கள் குறிப்பிடும் அந்தப் பிராணி மஞ்சள் நிறம்கொண்டது'' என்று வற்புறுத்திச் சொன்னான்.

சிறிது நேரத்தில் இந்த மூவரோடும்கூட இன்னும் பலரும் பிராணியின் நிறம் பற்றிய அந்த விவாதத்தில் கலந்து கொண்டார்கள். அவர்களும் பிராணியைப் பார்த்திருப்பதாகச் சொன்னார்கள். ஒவ்வொருவரும் அந்தப் பிராணியை ஒரு நிறத்தில் கண்டதாகக் கூறினர். அந்தப் பிராணியின் நிறம்

ஊதா, கறுப்பு, பச்சை, சாம்பல் என்று இன்னமும் பலவித நிறங்களைச் சொன்னார்கள். அவர்களு டைய கருத்துக்கள் பெரிய சர்ச்சையாக மாறின. மும்முரமாக ஒருவருடைய கருத்தை மற்றொருவர் எதிர்த்துப் பேச ஆரம்பித்தார்கள். இறுதியில் பிராணியின் நிறம் பற்றிய அபிப்பிராய பேதங் களால் பெரிய சண்டையே அங்கு வந்துவிட்டது. சண்டை முற்றி உச்சக்கட்டத்தை அடைந்து கூச்ச லும் குழப்பமுமாக பெரிய ரகளை உருவாகியது!

அவர்களுடைய இந்த விவாதம் முடிவிற்கு வருவதாக இல்லை. ஆதலால் அவர்கள் அனைவரும் கூடி மரத்தடிக்குச் சென்று, பிராணி எந்த நிறத் தில் இருக்கிறது என்பதை நேரிலேயே பார்த்து முடிவு செய்வது என்று தீர்மானித்தார்கள். பெரிய கூட்டமாகக் கூடிக்கொண்டு நேராக மரத்தடிக்குப் போனார்கள்.

அங்கே அதே மரத்தின்கீழே ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தான். அவனிடம் அனைவரும் சேர்ந்து தங்களுடைய பிரச்னையை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதை எல்லாம் அந்த மனிதன் கேட்டான். பிறகு அவர்களிடம், ''நான் இந்த மரத்தடியிலேயே தங்கி இங்கேயே வாழ்ந்து வரு கிறேன். நீங்கள் அனைவரும் குறிப்பிடும் அந்தப் பிராணியை எனக்கு மிக நன்றாகத் தெரியும். நீங்கள் சொல்லும் ஒவ்வொரு நிறமுமே உண்மைதான். சில சமயங்களில் அதே பிராணி சிவப்பாக இருக் கிறது. சில சமயங்களில் அதே பிராணி மஞ்சளாக

இருக்கிறது. மேலும் அதே பிராணி வேறு சில சமயங்களில் நீலமாகவும், ஊதாவாகவும், பச்சையாகவும், சாம்பல் நிறத்திலும்—இப்படிப் பல சமயங்களில் விதவிதமான பல நிறங்களிலும் தோன்றுகிறது. அது மட்டுமல்லாமல், அந்தப் பிராணி எந்த ஒரு நிறமும் இல்லரமல் இருப்பதையும் சில சமயங்களில் நான் பார்த்திருக்கிறேன். அது பச்சோந்தி என்னும் ஒருவகைப் பிராணியாகும். சில சமயங்களில் அதற்கு நிறம் உண்டு சில சமயங்களில் அது தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும். சில சமயங்களில் எந்த நிறமும் இல்லாமலும் இருக்கும்'' என்று அவன் தெரிவித்தான்.

இதைப் போலவே பரம்பொருளாகிய இறைவனுக்கு உண்மையிலேயே பல வடிவங்கள் இருக்கின்றன. அனந்த கல்யாண குணங்கள் எனப்படும் ஏராளமான தெய்விகக் குணங்களும் அவரிடம் இருக்கின்றன். ஆனால் வடிவமும் குணங்களும் இல்லாத ஒரு நிலையும் அவருக்கு உண்டு. மனித மொழியில் விளக்கியே சொல்ல இயலாத மிகப் பெரிய ஒரு நிலை அது.

பகவானை ஏதாவது ஒரே ஒரு வடிவத்தில் கண்ட பக்தன், இறைவனுக்கு அந்த ஒரு வடிவம் மட்டுமே உண்டு என்று தவறாக நினைக்கிறான். கடவுளைப் பல வித வடிவங்களில் தரிசிக்கக்கூடிய பக்தர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மட்டுமே, 'இந்த எல்லாவித உருவங்களும் ஒரே பகவானுக்கு உரியவை. மேலும் அளவிட்டுச் சொல்ல முடியாத வடிவங்

களும் குணங்களும் அவருக்கு உண்டு' என்று உணர்ந்து சொல்லக் கூடியவர்களாக இருப்பார்கள்.

கடவுளைச் சதாசர்வ காலமும் உண்மையாகவே ஒருவன் நினைக்க வேண்டும். அப்படிப்பட்ட தெய்விக வாழ்க்கையிலேயே தோய்ந்திருப்பவனால்தான் பகவானுடைய வடிவங்கள், குணங்கள் போன்ற நுட்பமானவையும், புலன்களுக்கு எட்டாதவையுமான அரிய உண்மைகளைப் புரிந்துகொள்ள முடியும். அவனுக்குப் பகவானே அவற்றை எல்லாம் விளக்கிவிடுகிறார். அப்படிப்பட்ட உயர்ந்த பக்தனுக்குக் கடவுளைப் பற்றிய எந்தவிதக் குழப்பமும் இருக்காது.

காம—காஞ்சன ஆசைகளுக்கு உள்ளத்தில் இடம் கொடுப்பவர்கள் தெளிந்த அறிவு இல்லாதவர்களாகவே இருப்பார்கள். அவர்களால் நுட்பமானவையும் புலன்களுக்கு எட்டாதவையுமான அரிய ஆன்மிக உண்மைகளைப் புரிந்துகொள்ளவே முடியாது. அவர்கள் தங்களுடைய அறிவாற்றல்களைக் கொண்டும் பரந்த சாஸ்திர அறிவைக் கொண்டும் எவ்வளவுதான் முட்டி மோதிப் பார்த்தாலும் ஆன்மிக உண்மைகளைப் பொறுத்தவரையில் அவர்களை அறியாத குழந்தைகள் என்றே சொல்லவேண்டும்.

பரமஹம்சர் அருளியுள்ள இந்தப் பச்சோந்தியின் கதை பரம்பொருளைக் குறித்த பெரிய ஓர் உண்மைக்கு விளக்கமாக அமைகிறது.

23. புதுமையான சாயக்காரன்

கடவுள் ஒருவர்தாம்; ஆனால் அவரே தமது பக்தர்களுக்காக எத்தனையோ விதங்களிலும் எத்தனை எத்தனையோ உருவங்களிலும் தோன்றுகிறார்— இப்படி ஒரு கருத்தை மட்டும் சொன்னால் அதை எவ்வளவு பேர் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்? ஆகவே கருத்தைச் சொன்ன ஸ்ரீராமகிருஷ்ணர் அந்தக் கருத்தை விளக்க ஒரு கதையையும் சொல்கிறார். அந்தக் கதை வருமாறு:—

ஓர் ஊரிலே ஒரு சாயக்காரன் இருந்தான். அவனிடம் ஒரு பாத்திரம் நிறைய வர்ணக் கலவை இருந்தது. மக்கள் தங்களுடைய துணிகளுக்குச் சாயம் பூசுவதற்காக அவனிடம் போவது வழக்கம்.

சாயக்காரன் துணிகளுக்குச் சாயமேற்றும் போது, மற்றவர்களுக்குத் தெரியாத புதுமையான ஒரு முறையைக் கையாண்டு வந்தான். ''உன் துணிக்கு எந்த நிறத்தில் சாயம் தோய்க்க வேண்டும்?'' என்று அவன் வாடிக்கைக்காரரைக் கேட்பான். ''சிவப்பு நிறம்'' என்று வாடிக்கைக்காரர் சொன்னால், உடனே சாயக்காரன் வர்ணக் கலவை உள்ள பாத்திரத்தில் அந்தத் துணியைத் தோய்த்து எடுப்பான். பிறகு, இதோ, எடுத்துக்கொள். உன் துணிக்குச் சிவப்புச் சாயம் போட்டாயிற்று'' என்று சொல்லிச் சிவப்பு நிறம் போடப்பட்ட துணியை வாடிக்கைக்காரனிடம் கொடுப்பான்.

மற்றொருவன் தன் துணிக்கு மஞ்சள் சாயம் வேண்டும் என்று கேட்பான். சாயக்காரன் அவனுடைய துணியையும் அதே பாத்திரத்தில் தோய்த்து எடுப்பான். துணியை வெளியில் எடுக்கும்போது மஞ்சள் நிறமாக மாறியிருக்கும்! ''இதோ, உன் துணிக்கு மஞ்சள் நிறம் போட்டாயிற்று, எடுத்துக்கொள்'' என்று சொல்வான்.

இப்படியே நீலம், ஊதா, கறுப்பு, பச்சை, ஆரஞ்சு என்று இருக்கப்பட்ட அத்தனை நிறங்களில், எந்த நிறம் வேண்டுமானாலும் அவன் வர்ணக் கலவை உள்ள அதே பாத்திரத்திலேயே துணியைத் தோய்ப்பான். துணியை வெளியில் எடுக்கும்போது தேவையான நிறம் வந்துவிட்டிருக்கும்.

இந்தப் புதுமையை வாடிக்கைக்காரர்களில் ஒருவன் கவனித்தான். அவன் சாயக்காரனிடம், ''ஐயா, என் துணிக்கு எந்த நிறத்தைக் கேட்பதென்றே எனக்குத் தெரியவில்லை. தங்களுடைய பாத்திரத்தில் எந்த நிறத்தை வைத்திருக்கிறீர்களோ, அந்த நிறத்திலேயே என் துணிக்கும் சாயம் ஏற்றிக் கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான்.

பக்தனுடைய விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற விதத்தில் பகவான் உருவம் உள்ளவராகவோ, அருவம் உள்ளவராகவோ தோன்றுகிறார். அப்படித் தோன்றும் அவருடைய தெய்விக வடிவம் ஒவ்வொருவரின் உள்ளத்தின் பரிபக்குவத்திற்கும், காலம், இடம், சூழ்நிலைகளுக்கும் பொருத்தமான வகையில் உண்மையானதாகவே அமைகிறது. அவ

ரிடம் எல்லாவிதமான நிலைகளுமே இருந்து கொண்டிருக்கின்றன. அவருடைய தெய்விக இயல்புகளும் ஆழ்ந்த நிலைகளும் உண்மையில் எப்படிப்பட்டவை என்பதை யாரால் புரிந்து கொள்ள முடியும்? இறைவனாகிய சாயக்காரன் மட்டுமே, தான் எந்த நிறச் சாயத்தில் தோய்ந்திருக்கிறான் என்பதை அறிவான். அவனால் எந்த வடிவத்திலும் தோன்ற முடியும்; உருவம் ஒன்றுமே இல்லாமலுங் கூடப் பிரகாசிக்க முடியும்.

''யார் என்னை எப்படி வழிபடுகிறார்களோ, அப்படியே அவர்களுக்கு நான் அருள் புரிகிறேன். பார்த்தா! மக்கள் எல்லா வகைகளிலும் எனது வழியையே பின்பற்றுகிறார்கள்.''—கீதை, 4-11.

VI. நம்பிக்கை வேண்டும்

24. கடவுள் வரமாட்டார்

சரணாகதி என்பது உதட்டளவில் இருக்கக் கூடாது. கடவுளிடம் முழுமையான அளவில் ஒருவன் உண்மையிலேயே சரணாகதி செய்ய வேண்டும். அப்போதுதான் கடவுளுடைய உதவி அவனுக்குக் கிட்டும். அப்படி இல்லாவிட்டால், பகவானின் கிருபையைப் பெற முடியாது. இந்தக் கருத்தைப் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பின்வரும் கதை மூலம் விளக்குகிறார்:—

ஒரு முறை வண்ணான் ஒருவன் ஒரு பக்தனைக் கடுமையாக அடித்தான். அப்போது பக்தன், ''நாரா

யணு! நாராயணு!'' என்று மட்டும் சொல்லி அலறினன்.

அப்போது ஸ்ரீமந்நாராயணன் வைகுண்டத்தில் லட்சுமி ஸமேதராய் வீற்றிருந்தார். அவருடைய காதில் பக்தனின் அறைகூவல் விழுந்தது. உடனே அவர் எழுந்து புறப்பட ஆயத்தமானர். தேவி அவரிடம், ''நாதா, தாங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டாள்.

''தேவி என் பக்தன் ஒருவன் பெரிய ஆபத்தில் இருக்கிருன். நான் அவனைக் காப்பாற்றியாக வேண்டும்'' என்று சொல்லிவிட்டு அவசர அவசரமாக ஸ்ரீமந்நாராயணன் புறப்பட்டார்.

ஆனல், இரண்டு மூன்று அடி தூரம் சென்றதும் மீண்டும் திரும்பி வந்து அவர் தமது ஆசனத்தில் அமர்ந்துவிட்டார்.

இதைப் பார்த்த லட்சுமி திகைத்தாள்; ''பிரபோ, இவ்வளவு விரைவில் திரும்பிவிட்டீர்களே, ஏன்?'' என்று கேட்டாள்.

நாராயணர் புன்முறுவல் பூத்தபடியே பதில் சொன்னர். ''நான் போக வேண்டிய அவசியமே இல்லாமல் போனதைப் பார்த்தேன். அந்தப் பக்தனும் வண்ணுனுகிவிட்டான்; தன்னைத் தானே அவன் காப்பாற்றிக்கொள்ள நினைத்தான். இப்போது தன்னை அடித்தவனை அவன் திருப்பி அடிக்கத் தொடங்கியிருக்கிருன். ஆகவே நான் அங்கே போய்ச் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. எனவே

அவசியம் இல்லாததால் நான் திரும்பி வந்துவிட்டேன்'' என்று பதில் சொன்னர்.

முற்றிலும் உன்னை நீ கடவுளிடம் ஒப்படைத்துச் சரணுகதி செய்ய வேண்டும். அப்படி நீ செய்தாலன்றிக் கடவுள் உன்னைக் காப்பாற்ற மாட்டார். உண்மையாகவே உன்னை நீ பகவானுடைய பீடத்தில் சமர்ப்பித்துவிட வேண்டும்.

நாம் நமது ஆணவத்தைத் துறந்தாக வேண்டும். அப்படிச் செய்தாலன்றிப் பகவான் நமது பொறுப்புக்களைத் தாமாக ஏற்றுக்கொள்வதில்லை.

எவன் ஒருவன் கடவுளிடம் முற்றிலும் தன்னை அர்ப்பித்துச் சரணமாகப் பற்றுகிருனே, அவனை மட்டுமே பகவான் காப்பாற்ற முன்வருகிருர்.

25. இராதையின் பெருமை

தூய உள்ளமும் தூய பக்தியும் கொண்டிருந்தால்தான் இராதையின் பெருமையைப் புரிந்து கொள்ள முடியும். ஸ்ரீராமகிருஷ்ணர், இராதையின் தனிப் பெரும் சிறப்பைப் பல தருணங்களில் உள்ளங்குழைந்து கூறியிருக்கிருர். அவற்றில் ஒன்று வருமாறு:—

ஒரு சமயம் தன் கோபாலனைப பற்றிய செய்தி ஒன்றுமே யசோதைக்குத் தெரியாமல் இருந்தது. ஆகவே அவள் இராதையிடம் சென்று, 'கோபால

னைப் பற்றிய செய்தி ஏதாவது உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள். அப்போது இராதை ஆழ்ந்த தெய்விகப் பரவசநிலையில் தோய்ந்திருந்தாள். ஆகையால், யசோதை கேட்டது இராதையின் காதில் விழவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு இராதைக்கு மெல்ல மெல்லத் தெய்விகப் பரவசநிலை கலைந்து, உலக நினைவு திரும்பியது. அப்போது நந்தனின் மனைவியாகிய யசோதை தன் முன்னால் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். யசோதையைக் கண்டதும் உடனே இராதை அவளை வீழ்ந்து பணிந்து வணங்கினாள். பிறகு இராதை யசோதையிடம் தன்னைத் தேடி வந்ததற்கான காரணத்தை விசாரித்தாள். யசோதை காரணத்தைச் சொன்னதும், ''அம்மா! உங்களுடைய கண்களை மூடிக்கொண்டு கோபாலனின் உருவத்தைத் தியானியுங்கள், நீங்கள் அவனைக் காண்பீர்கள்'' என்று சொன்னாள்.

யசோதை கண்களை மூடித் தியானிக்க ஆரம்பித்தாள். உடனே தூய பக்தியும் தூய தெய்விகப் பரவச நிலையுமே வடிவெடுத்தவளாகிய இராதை, தனது தெய்விகச் சக்தியை யசோதையிடம் செலுத்தினாள். அது காரணமாக, மறுகணமே யசோதையால் கோபாலனைக் காண முடிந்தது.

பிறகு, யசோதை இராதையிடம், ''அம்மா! நான் கண்களை மூடிக்கொள்ளும் போதெல்லாம், என் அன்பிற்குரிய கோபாலனை நான் பார்க்கும்படியாக வரம் தந்தருள வேண்டும்'' என்று சொல்லிப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

26. இராமனும் தவளையும்

ஸ்ரீராமபிரான் வனவாசத்தில் இருந்தபோது காட்டின் வழியாகப் போய்க்கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் தமது வில்லையும் அம்பையும் தரையில் நட்டுவிட்டு, பம்பை என்னும் குளத்தில் நீர் அருந்துவதற்காக இறங்கினார். மீண்டும் அவர் கரையேறி வந்தபோது தமது வில் ஒரு தவளையை ஊடுருவிச் சென்று துளைத்திருப்பதைப் பார்த்தார். தவளையின் உடல் முழுவதும் இரத்தத்தால் நனைந்திருந்தது. இதைக் கண்ட ஸ்ரீராமபிரான் பெரிதும் மனம் வருந்தினார். சொல்லொண்ணாத துயரம் உள்ளத்தை வருத்த அவர், "ஏ தவளையே! நீ ஏதாவது கொஞ்சம் சப்தம் செய்திருக்கக் கூடாதா? அப்போது நீ இங்கிருப்பது எனக்குத் தெரிந்திருக்கும். உனக்கு இந்தக் கதி வந்திருக்காதே" என்று தவளையிடம் கேட்டார்.

அதற்குத் தவளை பதில் சொன்னது:—"ராமா! எனக்கு ஏதாவது ஆபத்து நேரும்போது, ராமா! என்னைக் காப்பாற்று" என்று நான் சொல்லி உன்னைச் சரணடைகிறேன். ஆனால் இப்போது நீயே என்னைக் கொல்லும்போது நான் யாரிடம் சொல்லி முறையிடுவேன்?

27. பகவானும் பக்தனும்

ஒரு முறை ஒரு பணக்காரன் தன் தோழர்களுடன் கூடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தான். அப்போது வேலைக்காரன் ஒருவன் மிகுந்த பயபக்தியுடன் ஒரு மூலையில் வந்து நின்றான். அவன் கையில் எதையோ ஒன்றைத் துணியால் மூடி வைத்திருந்தான். வேலைக்காரன் தயங்கித் தயங்கி அங்கே நிற்பதைக் கண்ட எஜமானன் "என்னப்பா என்ன சமாசாரம்? கையில் என்ன வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டான். வேலைக்காரன் தயங்கிக் கொண்டே துணி முடிப்பிலிருந்து ஓர் இலந்தைப் பழத்தை எடுத்தான். பின்பு அதை எஜமானனின் முன்னால் பணிவுடன் வைத்து, 'ஐயா! தாங்கள் இதைச் சாப்பிட வேண்டும் என்பது எனது விருப்பம்'' என்று கேட்டுக் கொண்டான். அவனது குரலில் அன்பும் பண்பும் தொனித்தன.

பணக்காரன் தன் வேலைக்காரனின் உண்மையான அன்பையும் பக்தியையும் புரிந்துகொண்டு, மகிழ்ச்சியுடன் அந்த அற்பமான இலந்தைப் பழத்தையும் மன நிறைவுடன் ஏற்றுக் கொண்டான். பேரன்பு பொங்க அந்தப் பழத்தைக் கையில் எடுத்து, ''அடே என்ன அழகான பழம்! உனக்கு இது எங்கிருந்து கிடைத்தது?'' என்று கேட்டான்.

இதைப் போலவே, கடவுளும் பக்தனுடைய இதயத்தைத்தான் பார்க்கிறார். அவரிடம் அளவில்லாத மகிமைகளும் பெருமைகளும் இருக்

கின்றன. என்றாலும் அவர் பக்தனின் உண்மையான பக்திக்கு வசப்படுகிறார்—என்று சொல்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

ஸ்ரீராமபிரான் சேது அமைத்தபோது அணில் செய்த சிறு உதவியையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

யார் எனக்கு இலை, மலர், கனி அல்லது நீரைப் பக்தியுடன் படைக்கிறானோ, அத்தகைய தூய பக்தனின் அன்பளிப்பை விருப்பத்துடன் நான் ஏற்றுக்கொள்கிறேன்.—கீதை 9-26.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படும்பரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்தும் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பர சிவமே.

—திருவருட்பா

28. யாருடைய குடிசை?

வங்காளத்திலே பிரம்ம சமாஜம் என்ற புகழ் பெற்ற ஸ்தாபனம் ஒன்று இயங்கி வந்தது. சமயம், சமூக முன்னேற்றம் ஆகிய துறைகளில் இந்த ஸ்தா பனத்தைச் சேர்ந்தவர்கள் தொண்டு புரிந்திருக்

கிறார்கள். பிரம்ம சமாஜத்திற்குக் கேசவசந்திர ஸேன் என்பவர் தலைவராக இருந்தார். வங்க சரித்திரத்தில் ஒரு மாபெரும் மறுமலர்ச்சியையும் அவர் உண்டாக்கினார். கேசவசந்திர ஸேனுக்கு அடுத்த படியாக விளங்கிய பிரம்ம சமாஜத்தின் முக்கியத் தலைவர்களில் பிரதாப் சந்திர மஜும்தார் என்பவரும் ஒருவர். கேசவசந்திர ஸேனும் பிரதாப்சந்திர மஜும்தாரும் மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். இருவரும் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டவர்கள். அடிக்கடி அவர்கள் இருவரும் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிப்பதற்காகச் செல்வது வழக்கம். ஸ்ரீராமகிருஷ்ணருடன் உரையாடிப் பல அரிய உண்மைகளைக் கேசவசந்திர ஸேனும் பிரதாப் சந்திர மஜும்தாரும் கற்றார்கள். ஸ்ரீராமகிருஷ்ணரும் அவர்களிடம் அபாரமான அன்பு வைத்திருந்தார்.

நாளடைவில் பிரம்ம சமாஜத்தின் புகழ் மெல்ல மெல்ல மங்க ஆரம்பித்தது. இந்த நிலையில் ஒருநாள் பிரதாப்சந்திர மஜும்தார் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிப்பதற்காக வந்திருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்:—(*மஜும்தாரிடம்*) ''இதோ, நான் சொல்வதைக் கவனி. நீ நன்றாகப் படித்திருக்கிறாய். அதோடுகூட உனக்கு நல்ல திறமைகளும், எதையும் ஆராய்ந்து சிந்திக்கக்கூடிய ஆற்றலும் இருக்கின்றன. கேசவசந்திர ஸேனும் நீயும் கௌராங்கரையும் நித்தியானந்தரையும் போல நெருக்கமாகச் சகோதர மனப்பான்மை உள்ளவர்

களாக இருக்கிறீர்கள். உலக விவகாரங்களாகிய சொற்பொழிவுகள், தர்க்கங்கள், விவாதங்கள், சண்டை சச்சரவுகள், வாதப்பிரதிவாதங்கள்— என்று இப்படி எவ்வளவோ விஷயங்களைப் பலகால மாக வேண்டிய அளவுக்கு நீ நடத்திப் பார்த்தாகி விட்டது. இன்னமும் கூட இவற்றிலேயே நீ ஈடு பட்டுக் கொண்டிருக்க விரும்புகிறாயா? சிதறி ஓடும் உள்ளத்தை ஒன்றுபடுத்திப் பகவானிடம் செலுத்த வேண்டிய காலம் இப்போது உனக்கு வந்திருக்கிறது கடவுள் சிந்தனையிலேயே ஆழ்ந்து நீ மூழ்கி விடு.''

மஜூம்தார்:—அதைத்தான் நான் இப்போது செய்யவேண்டும். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. ஆனால் கேசவசந்திர ஸேனின் பெயரையும் புகழை யும் நிலைநிறுத்துவதற்காகவே, இப்படியெல்லாம் சொற்பொழிவுகள் போன்ற இன்னும் பல விவ காரங்களில் இப்போதும் நான் ஈடுபட வேண்டி யிருக்கிறது; ஈடுபட்டுக்கொண்டும் இருக்கிறேன்.

பிரதாப்சந்திர மஜூம்தார் சொன்ன பதிலைக் கேட்டதும் ஸ்ரீராமகிருஷ்ணர் லேசாகச் சிரித்தார். சிரித்துக்கொண்டே அவர், ''கேசவசந்திர ஸேனு டைய புகழை நிலைக்க வைப்பதற்காக இவற்றை எல்லாம் செய்து கொண்டிருக்கிறேன் என்று நீ சொல்கிறாய். நீ சொல்வதும் ஒருவிதத்தில் சரிதான். ஆனால் இந்த எண்ணமுங்கூடச் சில காலத்திற்குப் பிறகு உனக்கு நிலைத்திருக்கப் போவதில்லை. நான் உனக்கு ஒரு கதையைச் சொல்கிறேன்'' என்று

சொல்லிவிட்டு, ஸ்ரீராமகிருஷ்ணர் பின்வரும் கதையை மஜூம்தாருக்குச் சொல்ல ஆரம்பித்தார்.—

ஒருவன் மலையுச்சியில் ஒரு குடிசையைக் கட்டினான். அதை அவன் கட்டி முடிப்பதற்குப் பணச் செலவையும் பலவிதமான சிரமங்களையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எவ்வளவோ அரும் பாடுபட்டுக் கடைசியில் ஏதோ ஒரு வழியாக அதை அவன் கட்டி முடித்துவிட்டான்.

கொஞ்ச காலம் கடந்தது. ஒரு நாள் பயங்கரமான புயற்காற்று அடிக்க ஆரம்பித்தது. குடிசை மெல்ல ஆட்டம் கொடுத்தது. இந்த நிலையில் குடிசையை எப்படிக் காப்பாற்றுவது என்ற கவலையில் அவன் மூழ்கினான். வாயுபகவானைப் பிரார்த்தித்துக் கொண்டால் குடிசை விழாமல் காப்பாற்றி விடலாம் என்ற யோசனை அவனுக்குத் தோன்றியது. ஆதலால் அவன், ''ஓ வாயு பகவானே! என் குடிசை நாசமாகாமல் இருக்க வேண்டும். வீட்டை அடித்துக்கொண்டு போய்விடாதே, அப்பனே!'' என்று சொல்லிப் பிரார்த்தித்தான்.

ஆனால் வாயுபகவான் அவன் சொன்னதைக் காதில் போட்டுக்கொண்டதாகத் தெரியவில்லை. வீடு அசைந்து கொடுப்பது நிற்கவில்லை. அவன் மீண்டும் மீண்டும் வாயுபகவானை நினைத்துப் பிரார்த்தித்தான். அப்போதும் குடிசை ஆட்டம் கொடுத்துக்கொண்டே இருந்தது.

பிறகு அவனுக்கு வேறு ஒரு யோசனை தட்டுப் பட்டது. 'அனுமான் வாயுபகவானுடைய புத்திரன்' என்பதை அவன் நினைத்துப் பார்த்தான். அந்த நினைவு வந்த உடனேயே பரபரப்புடன் அவன், ''பிரபோ! இந்த குடிசையைத் தாங்கள் காப்பாற்ற வேண்டும். அழித்துவிடாதே, அப்பா! இது தங்கள் மைந்தனாகிய அனுமானுடைய குடிசை, அனுமானுடைய குடிசை! பிரபோ, அழித்துவிடாதே அப்பா! உன்னை வேண்டி நான் கேட்டுக்கொள்கிறேன். இது அனுமானுடைய தடிசை'' என்று கூவினான். பலமுறையும் திரும்பத் திரும்பச் சொல்லிப் பலமாக கூவினான்.

ஆனால் அப்போதும் வாயுதேவன் இந்தப் பிரார்த்தனையைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. புயற் காற்றின் வேகம் வரவர அதிகமாகியது. குடிசை மேலும் மேலும் ஆட்டம் கொடுத்துக் கொண்டே இருந்தது. பலமுறையும் 'அனுமானுடைய குடிசை, அனுமானுடைய குடிசை' என்று சொல்லி அலறிப் பார்த்தான். ஆனால் பயன் ஒன்றுமே ஏற்படவில்லை.

பிறகு, ''அப்பனே! இது இலட்சுமணனுடைய குடிசை, இலட்சுமணனுடைய குடிசை!'' என்று சொல்லிக் கூவினான். அப்படிக் கூவியும் குடிசை ஆடிக்கொண்டுதான் இருந்தது. வெளியே, பேய்க் காற்று பலமாகச் சுழன்று அடித்தது.

பிறகு அவன், ''வாயுபகவானே! இந்த க்குடிசையைத் தாங்கள்தான் காப்பாற்ற வேண்டும். இது அனுமானுடைய பிரபுவான இராமபிரானுடையது,

இராமபிரானுடையது. இதை அழித்து விடாதே அப்பா. உன்னை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இது இராமபிரானின் குடிசை, அப்பா. அழித்து விடாதே. அப்பா!'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தான்.

இந்தப் பிரார்த்தனையையும் வாயுதேவன் இலட்சியம் செய்யவில்லை. இதற்குள்ளாகப் புய லின் கடுமை மிகமிக அதிகமாகி உச்ச நிலையை அடைந்தது. குடிசை எந்த நிமிடத்திலும் பிய்த்துக் கொண்டு போய்விடும் போல இருந்தது. சிறிது நேரத்தில் குடிசையின் நடுப்பகுதி இடிந்து, மளமள வென்று சரிந்து கீழே விழவும் ஆரம்பித்தது! நிலைமை மோசமாகிவிடவே, உயிர் தப்பினுல் போதும் என்று குடிசையை விட்டு அவசர அவசரமாக அவன் வெளியே ஓடி வந்தான்.

வெளியே வந்தபிறகு, ''இது சாத்தானின் குடிசை. இந்தக் குடிசை நாசமாகத்தான் போகட் டுமே, எனக்கென்ன? இந்தப் பாழாய்போன குடிசை எக்கேடாவது கெட்டு ஒழியட்டும்'' என்று சொல்ல ஆரம்பித்தான்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இந்த கதையைப் பிரதாபருக்குச் சொன்னுர்.

ஸ்ரீராமகிருஷ்ணர்:—கேசவருடைய பெயரை யும் புகழையும் காப்பாற்றுவதற்காக நீ புறப்பட்டுப் போய் அலைந்து திரிய வேண்டிய அவசியம் இல்லை. இது வரையிலும் என்ன என்ன நடந்திருக்கிறதோ,

அவை எல்லாம் கடவுளுடைய சங்கல்பத்தின்படியே நடந்தேறியிருக்கின்றன என்பதைப் புரிந்துக்கொள். அவை தொடர்ந்து நீடிப்பதும் நீடிக்காமல் போவதும் கடவுளுடைய விருப்பத்தையே பொறுத்திருக்கின்றன. இந்த உண்மையை புரிந்துகொண்டு நீ அமைதி அடைய வேண்டும்.

கேசவரின் பெயரால் எழுந்த தர்ம ஸ்தாபனம் கடவுளின் விருப்பப்படியே எழவும் புகழின் உச்சியை அடையவும் செய்தது. இப்போது அவருடைய விருப்பத்தின்படியே மெல்ல மெல்ல அழிந்து கொண்டிருக்கிறது. உண்மை இப்படி இருக்க, இந்த விஷயத்தில் நீ போய்ப் பெரிதாக என்ன செய்துவிட முடியும்? இப்போதுள்ள இந்த நிலையில் நீ செய்ய வேண்டிய ஒரே காரியம், உன் உள்ளம் முழுவதையும் பகவானிடம் ஒப்படைத்து விடுவதுதான். ஆகையால் நிலைத்த பேரின்பமாகிய பக்தி என்னும் கடலில் குதித்து நீ மூழ்கிவிடு.

29. பணிவு

ஒருவன் ஒரு சன்னியாசியிடம் சென்றான். அவன்அந்தச் சாதுவிடம் தன்னை மிகவும் பணிவுடையவனைப் போலக் காட்டிக் கொண்டு, ''சுவாமி! நான் மிகவும் தாழ்ந்தவன். கருணை கூர்ந்து தாங்கள் எனக்கு, நான் கடைத்தேறுவதற்கு உரிய வழி இன்னது என்பதைக் காட்டியருள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான்.

சன்னியாசி அவனது மனநிலையையும் அவனிடம் உண்மையான பணிவு இல்லை என்பதையும் புரிந்து கொண்டார். ஆகவே அவர், ''நல்லது, முதலில் உன்னைவிடவும் தாழ்ந்ததான ஒரு பொருளை என்னிடம் கொண்டு வா'' என்று சொன்னார்.

அந்த மனிதன், சாது சொன்னபடியே அங்கும் இங்கும் சென்று தேடிப் பார்த்தான். ஆனால் தன்னை விடவும் தாழ்ந்ததாக எதையும் அவன் காணவில்லை. இறுதியில் தன் மலம் இருப்பதைப் பார்த்தான். 'நல்லது, இதோ ஒரு பொருள் என்னைவிடவும் தாழ்ந்ததாக இருக்கிறது' என்று நினைத்துக்கொண்டு அதைச் சாதுவிடம் கொண்டு போவதற்காகக் கையை நீட்டினான்.

உடனே அப்போது மலத்தின் உள்ளிருந்து ஒரு குரல் கேட்டது. 'ஏ பாவி! என்னைத் தொடாதே. நான் இன்சுவை பொருந்திய தின்பண்டமாக இருந்தேன். தெய்வங்களுக்கு நைவேத்தியம் செய்யக் கூடிய தகுதிகளையும், பார்ப்பவர் அனைவருடைய கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய கவர்ச்சியையும் பெற்றிருந்தேன். ஆனால் என் துரதிர்ஷ்டம் என்னை உன்னிடம் கொண்டு வந்து ஒரு முறை சேர்த்தது. உன்னுடன் ஏற்பட்ட தீய தொடர்பின் விளைவாக, இப்போது நான் இப்படிப்பட்ட கேவலமான அவல நிலையை அடைந்துவிட்டேன். இப்போது என்னைப் பார்ப்பவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டும் மூக்கைப் பிடித்துக்கொண்டும் என்னை விட்டே அப்பால் விலகி ஓடிப்போகிறார்கள். ஒரே

ஒரு முறைதான் நான் உன்னுடன் தொடர்பு கொள்ள நேர்ந்தது. அதன் விளைவாக இப்படிப் பட்ட கேவலமான நிலையை அடைந்திருக்கிறேன். மீண்டும் ஒருமுறை என்னை நீ தொட்டால், எனக்கு இதைவிடவும் தாழ்ந்தநிலை ஏற்பட்டுவிடாதா?''

தனது மலமே இப்படிச் சொன்னவுடன் அந்த மனிதனுக்கு உண்மையான பணிவு எது என்பது புரிந்தது. அதன் விளைவாக அவன் பரிபூரண ஞானத்தை அடைந்தான்.

30. நாரதர் கர்வபங்கம்

ஒரு சமயம் தேவரிஷியான நாரதர் தம்மை விடவும் பக்தியில் மிஞ்சியவர் யாருமே கிடையாது என்று நினைத்து கர்வம் கொண்டார். எல்லாம் அறிந்தவராகிய பகவான், நாரதருடைய மனப் போக்கை அறிந்து அவரைத் திருத்தி நல்வழிப் படுத்தத் திருவுள்ளம் கொண்டார். ஆகவே நாரத ரிடம் அவர், ''நாரதரே! இன்ன இடத்தில் என் பரம பக்தனாகிய ஒருவன் வாழ்ந்து வருகிறான். அவனிடம் சென்று உறவாடி நட்புக் கொள்ளுங்கள். அவனுடைய தொடர்பை வளர்த்துக் கொள்ளுங் கள்'' என்று சொன்னார்.

பகவான் சொன்னபடியே நாரதர் அந்த இடத் திற்குச் சென்றார். அங்கே ஒரு குடியானவன் இருப் பதைப் பார்த்தார்.

குடியானவன் அதிகாலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்போது, 'ஸ்ரீஹரி' என்று பகவானுடைய பெயரை ஒருமுறை சொன்னான். பிறகு கலப்பையை எடுத்துக்கொண்டு வயலுக்குப் போய் நாள் முழுவதும் உழுதான். மாலை சாய்ந்தபோது வீடு திரும்பினான். இரவு அவன் படுக்கைக்குப் போகும்போது மீண்டும் ஒருமுறை 'ஸ்ரீஹரி' என்று பகவானின் பெயரைச் சொன்னான்.

நாரதர் அவனுடைய வாழ்க்கையை ஒரு நாள் முழுவதும் இருந்து கவனித்தார். பிறகு அவர், ''இந்தப் பட்டிக்காட்டான் எப்படிப் பக்திமானாக இருக்கமுடியும்? நாள் முழுவதும் அவன் தன் உலகக் காரியங்களையே கவனித்துக் கொண்டிருக்கிறான். பெரிய பக்திமான் என்பதற்கு உரிய எந்த அடையாளமும் இவனிடம் காணப்படவில்லையே! இவனை எப்படிப் பக்தன் என்று சொல்ல முடியும்?'' என்று தமக்குத் தாமே நினைத்துக் கொண்டார்.

பிறகு நாரதர் பரந்தாமனிடம் திரும்பிச் சென்று, குடியானவனைப் பற்றிய தமது அபிப்பிராயத்தைச் சொன்னார்.

நாரதர் தமது கருத்தைச் சொன்னதும் பகவான் அவரிடம், ''நாரதரே! எண்ணெய் நிரம்பியுள்ள இந்தக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு இந்தப் பட்டணத்தை ஒரு முறை சுற்றிவிட்டு வாருங்கள். ஆனால் ஒரே ஒரு துளி எண்ணெய்கூடக் கீழே சிந்திவிடாமல் ஜாக்கிரதையாக இருங்கள்'' என்று சொல்லி நாரதரை அனுப்பி வைத்தார்.

நாரதர் பகவான் சொன்னபடியே செய்து முடித்தார். ''நாரதரே! ஊரைச் சுற்றி வரும்போது தாங்கள் எத்தனை முறை என்னை நினைத்துக்கொண்டீர்கள்?'' என்று பகவான் வினவினார்.

''பிரபோ, ஒரே ஒரு முறைகூட நினைக்கவில்லை. கிண்ணத்தில் இருந்த எண்ணெய் சிந்திவிடக்கூடாது என்பதற்காக நான் கவனமாக இருக்கும்போது, எப்படி உங்களை நினைக்க முடியும்? அப்போது எனக்கு வேறு எந்த ஞாபகமும் வரவில்லை'' என்று நாரதர் பதில் சொன்னார்.

அதற்குப் பகவான், ''நல்லது நாரதரே, இந்த ஒரு கிண்ணத்தில் உங்கள் கவனம் பதிந்ததனால், என்னை அடியோடு முற்றிலும் மறந்து போய்விட்டீர்கள். ஆனால் அந்தக் குடியானவனைப் பாரும், பாரமான குடும்பச் சுமையைத் தாங்கிக் கொண்டிருந்தாலும், தினந்தோறும் தவறாமல் இரண்டு முறை என்னை அவன் நினைக்கிறான்'' என்று கூறியருளினார்.

31. இரண்டு யோகிகள்

ஓரிடத்தில் இரண்டு யோகிகள் ஈசுவரனைக் காணும் பொருட்டுத் தவம் செய்துகொண்டிருந்தார்கள். ஒரு நாள் அவர்கள் இருந்த ஆசிரமம் வழியாகத் தேவரிஷி நாரதர் போய்க்கொண்டிருந்தார்.

அப்போது யோகிகளில் ஒருவர், ''நாரதரே! இப்போது தாங்கள் வைகுண்டத்திலிருந்துதான் வருகிறீர்களா?'' என்று கேட்டார். ''ஆமாம்'' என்று பதில் சொன்னார் நாரதர். உடனே இரண்டு யோகிகளும், ''அப்படியானால் பகவான் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?'' என்று கேட்டார்கள். ''ஓர் ஊசியின் காது வழியாகப் பகவான் யானைகளையும் ஒட்டகங்களையும் போகவும் திரும்பி வரவும் செய்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன்'' என்று நாரதர் பதில் சொன்னார். யோகிகளுள் ஒருவர், ''அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. சர்வேசுவரனால் ஆகாத காரியம் ஒன்றுமே கிடையாது' என்றார். மற்றொரு யோகியோ, ''ஓ! இது முட்டாள்தனமான வார்த்தை. நீங்கள் சொல்வது அசம்பாவிதம். இது தாங்கள் எப்போதுமே வைகுண்டத்திற்குப் போனதில்லை என்பதைத்தான் காட்டுகிறது'' என்று சொன்னார்.

முதலாவது யோகி ஒரு பக்தர். அவருக்குக் குழந்தைகளுக்கு இருப்பதைப் போன்ற நம்பிக்கை இருந்தது. கடவுளுக்கு இயலாத காரியம் என்று எதுவுமே கிடையாது. அவருடைய சுபாவத்தை ஒருவராலும் முற்றிலும் தெரிந்து கொள்ளவும் முடியாது. அவரைப் பற்றி எதைச் சொன்னாலும் பொருந்தும்.

32. நம்பிக்கை விளைவித்த அற்புதம்

ஒருவனுடைய மகன் தீராத நோய்வாய்ப்பட்டு மரணத் தறுவாயில் இருந்தான். எவ்வளவோ வைத்தியம் செய்து பார்த்தார்கள். நோய் குணமாகவில்லை. இந்த நிலையில் அங்கு வந்த ஒரு சன்னியாசி, ''ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. சுவாதி நட்சத்திரம் உச்சநிலையில் இருக்கும்போது மழை பெய்ய வேண்டும். அப்படிப் பெய்யும் மழைத் தண்ணீர் ஒரு மண்டையோட்டில் விழ வேண்டும். மண்டையோட்டின் அருகில் ஒரு தவளையைப் பிடிப்பதற்காகப் பாம்பு ஒன்று துரத்தவேண்டும். தவளையைப் பாம்பு பிடிக்கப்போகும் தறுவாயில் அது தப்பி மண்டையோட்டைத் தாண்டிக் குதிக்க வேண்டும். அப்படித் தாண்டிக் குதிக்கும்போது பாம்பின் விஷம் மண்டையோட்டில் உள்ள தண்ணீரில் விழ வேண்டும். பிறகு அந்த விஷத்தையும் தண்ணீரையும் கொண்டு மருந்து தயாரித்து உன் மகனுக்குக் கொடுத்தால், அவன் பிழைத்துக் கொள்வான்'' என்று சொன்னார்.

உடனே அந்த மனிதன் நாள் நட்சத்திரம் எப்படி இருக்கிறது என்று காலத்தைக் கவனித்துப் பார்த்தான். சுவாதி நட்சத்திரம் மறுநாள் உதயமாகும் என்பது தெரிய வந்தது. அவன் இறைவனை நினைத்து, ''பெருமானே, இந்த நிபந்தனைகளை எல்லாம் நிறைவேற்றித் தந்து எனது மகனைக் காப்பாற்றுங்கள்'' என்று உளமார மனம் கசிந்து பிரார்த்தித்துக் கொண்டான்.

பிறகு அவன், அதிகச் சிரத்தையுடனும் ஆவலுடனும் எங்கேயாவது ஒரு மண்டையோடு கிடைக்குமா என்று தேடிக் கொண்டே சென்றான். கடைசியில் ஒரு மரத்தின் அடியில் ஒரு மண்டை ஓடு இருப்பதைப் பார்த்தான். அதை எடுத்து ஒரு பக்கமாக வைத்து, மீண்டும் இறைவனின் திருவருள் துணையை வேண்டிப் பிரார்த்தித்தான். சிறிது நேரத்தில் சுவாதி நட்சத்திரம் உச்சத்திற்கு வந்த போது லேசாக மழை பெய்ய ஆரம்பித்தது. அவன் வைத்திருந்த மண்டையோட்டிலும் மழை நீர் விழுந்தது.

பிறகு அவன், ''பகவானே! உமது திருவருளால் இரண்டு காரியங்கள் நடந்தேறிவிட்டன. இப்போது கிருபைகூர்ந்து மற்றொன்றையும் நிறைவேற்றி வைத்து என் மகனுக்கு உயிர்ப்பிச்சை தாருங்கள்'' என்று மனம் தோய்ந்து பிரார்த்தித்தான்.

சிறிது நேரம் ஆயிற்று. மண்டையோடு வைத்திருந்த இடத்தின் பக்கமாக ஒரு தவளை வந்தது. அதைக் கண்ட அவன் மீண்டும் மீண்டும் பகவானைப் பிரார்த்தித்தான். அவனது பிரார்த்தனை வீண் போகவில்லை. சிறிது நேரத்தில் ஒரு நல்ல பாம்பு தவளையைப் பிடிப்பதற்காக அந்தப்பக்கமாக வந்தது. அதைக் கண்டதும், விரும்பியபடியே எல்லாம் நல்ல விதமாக நடக்க வேண்டும் என்பதால், அவனது இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. அந்த நிலையிலும் ஈசுவரனை நினைத்து அவன் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். 'வந்த பாம்பு, தவளையைப் பிடிப்பதற்காகத் துரத்தியது. பாம்பு

மண்டையோட்டின் அருகில் வந்து தவளையைப் பிடிக்கப் பாய்ந்த சமயத்தில், தவளை தப்பித்துக் கொள்வதற்காக மண்டையோட்டைத் தாண்டிக் குதித்தது. அதே நேரத்தில் அந்தக் கணத்தில் நல்ல பாம்பின் விஷம் மண்டையோட்டில் விழுந்தது.

இதைக் கண்ட மனிதன் கடவுளின் கிருபையை நினைத்து உளம் பூரித்தான். ''பரமேசுவரா, உமது திருவருளால் நடக்கவே இயலாத செயல்களும் நடந்தேறுகின்றன. இனி, எனது மகன் உயிர் பிழைத்துக் கொள்வான்'' என்று நன்றியறிதலோடு இறைவனை நினைத்துச் சொன்னான்.

''ஆசையால் தீவிரமான ஆவல், உண்மையான நம்பிக்கை ஆகியவற்றை முழு அளவில் பெற்றிருந்தால், கடவுள் கிருபையால் உனக்குத் தேவையானவை எல்லாம் நடந்தேறும் என்று நான் கூறுகிறேன்.

''கடவுள் எல்லாவற்றையும் அறிய வல்லவர். சிறிய துரும்பு விழும் சப்தத்தையும் அவர் அறிவார். ஆதலால் என் செல்வக் குழந்தைகளே, உங்கள் பிரார்த்தனை ஒவ்வொன்றும் அவரது செவியில் படும்'' என்று சொல்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

உண்மைப் பிரார்த்தனை ஒரு நாளும் வீண் போகாது. சர்வசக்திமானாகிய இறைவன் தமது பக்தர்கள் உளமார எதை வேண்டிப் பிரார்த்தித்தாலும் உறுதியாக அதை நிறைவேற்றித் தந்திடுவார். இது உண்மை, உறுதி.

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'

33. வியாசர் சாப்பிட்டாரா?

ஆத்மஞானத்தைப் பெறுவதற்கு ஞானசாதனே முற்றிலும் அவசியம். ஆனுல் தெய்வ நம்பிக்கை பரிபூரணமாக இருக்குமானுல் ஒரு சிறிது ஞானசாதனேகளே போதுமானவை.

ஒரு சமயம் வியாசர் யமுனே நதியைக் கடந்து போக இருந்தார். அப்போது கோபியரும் நதியைக் கடப்பதற்காக அங்கே வந்தார்கள். ஆனுல் ஓடக்காரன் ஒருவனும் அங்கில்லே. ஆகையால் கோபியர் வியாசரிடம் ''சுவாமி! நாம் இப்போது என்ன செய்வது?'' என்று கேட்டார்கள்.

வியாசர் அதற்குப் பதிலாக, ''கவலேப்படாதீர்கள். நான் உங்களே மறுகரைக்கு அழைத்துப் போகிறேன். ஆனுல் முதலில் நீங்கள் எனக்குச் சாப்பிடுவதற்கு ஏதாவது கொடுங்கள். இப்போது எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது'' என்று சொன்னுர்.

கோபியர், தங்களிடம் இருந்த பால், ஏடு வெண்ணெய் ஆகியவற்றைத் தாராளமாக வியாசருக்குக் கொடுத்தார்கள். அவரும் அவர்கள் கொடுத்ததை எல்லாம் வாங்கித் திருப்தியாகச் சாப்பிட்டு முடித்தார்.

பிறகு ஆய்ச்சியர், ''சரி, இப்போது ஆற்றைக் கடப்பது என்ன ஆயிற்று? அதற்கு என்ன வழி?'' என்று வியாசரிடம் கேட்டார்கள். வியாசர் யமுனேயின் நதிக்கரையில் நின்றுகொண்டு, ''யமுனே தேவி! நான் இன்றைய தினம் ஒன்றுமே சாப்பிடாதது

உண்மையானால் நீ எங்களுக்கு வழிவிட வேண்டும். நாங்கள் ஆற்றைக் கடந்து மறுகரைக்குப் போய்ச் சேருகிறோம்'' என்று சொல்லிப் பிரார்த்தித்தார்.

அப்படி அவர் பிரார்த்தித்தவுடனே, மறு கணமே யமுனை நதி நீரில் ஒரு பிளவு உண்டாயிற்று. தரை தெரிந்தது.

இதைப் பார்த்த ஆய்ச்சியர் மிகவும் ஆச்சரியப் பட்டனர். அப்படியே அவர்கள் திகைத்துப்போய், ''சற்று நேரத்திற்கு முன்பு, இப்போதுதான் நாம் கொடுத்த பால் முதலிய அவ்வளவையும் வாங்கிச் சாப்பிட்டார்! அப்படி இருக்கும்போது இவர், 'நான் இன்றைய தினம் சாப்பிடாதது உண்மை யானால்' என்று எப்படிச் சொல்ல முடியும்?'' என்று நினைத்தனர்.

சற்று முன்பு வியாசர் சாப்பிட்ட அவ்வளவு உணவுப் பொருள்களையும், உண்மையில் சாப்பிட்ட வர் அந்தர்யாமியான பகவானே தவிர வியாசர் அல்ல. இந்த விஷயத்தில் வியாசருக்கு இருந்த உறுதியான நம்பிக்கையின் பலத்தினால் அவர் அவ்விதம் சபதம் செய்தார். இந்த உண்மையை ஆய்ச்சியர் புரிந்து கொள்ளவில்லை.

''கர்மபலனில் பற்றை விட்டு, எப்போதும் திருப்தியுள்ள மனதினனாய், வேறொன்றையும் சாராதவனாய் இருப்பவன்—கர்மத்தில் ஈடுபட்டா லும் அவன் கர்மம் செய்யாதவனே ஆவான்.''

—கீதை, 4-20

34. சிறுவனின் சிவபூஜை

ஒரு கனவான் வீட்டில் ஒரு பிராம்மணர் பூஜை செய்து வந்தார். ஒரு சமயம் அந்தப் பிராம்மணர் வெளியூர் போக வேண்டியிருந்தது. ஆகவே பூஜைக் காரியங்களை அவர் தம் மகனுகிய சிறு பையனிடம் ஒப்படைத்து, ''தினந்தோறும் நைவேத்தியத்தை சுவாமி முன்னுல் வைத்து, அவருக்கு அமுது செய்து வை'' என்று சொல்லிவிட்டுப் போனுர்.

தந்தையின் கட்டளைப்படியே நடந்த பையன், நைவேத்தியத்தை சுவாமி முன்னுல் வைத்தான். சுவாமி வந்து சாப்பிடுவார் என்ற நம்பிக்கையுடன் மௌனமாகக் காத்திருந்தான். ஆனுல் பூஜையறையில் இருந்த சுவாமி பேசவும் இல்லை; நைவேத்தியத்தை வந்து சாப்பிடவும் இல்லை.

பையன் நீண்டநேரம் வரையிலும் சுவாமி வந்து சாப்பிடுவார் என்று பொறுத்திருந்து பார்த்தான். சுவாமி பீடத்திலிருந்து எழுந்து கீழே இறங்கி வருவார்; நைவேத்தியத்தின் முன்னுல் உட்கார்ந்து கொண்டு அதைச் சாப்பிடுவார் என்று அவன் மனப்பூர்வமாகவும் உறுதியாகவும் நம்பியிருந்தான்.

ஆகையால் அவன், ''கடவுளே! சீக்கிரம் நீ வந்து சாப்பிடு. ஏற்கனவே எனக்கு நேரமாகிவிட்டது. இனிமேல் என்னுல் காத்துக்கொண்டிருக்க முடியாது'' என்று சுவாமி விக்கிரகத்தைப் பார்த்துச் சொன்னுன். ஆனுல் அவன் அப்படிப் பிரார்த்தித்தும் பகவான் வரவும் இல்லை; அவனிடம் பேசவும் இல்லை.

எவ்வளவு நேரம்தான் குழந்தை பொறுத்திருந்து பார்ப்பான்? அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது.

ஆகையால் அவன் கண்ணீர் விட்டு அழுதுகொண்டே, "சுவாமி! உனக்கு அமுது செய்விக்க வேண்டும் என்று என் அப்பா எனக்குச் சொல்லிவிட்டுப் போனார். நீ ஏன் சாப்பிட வராமல் இருக்கிறாய்? என் அப்பா கூப்பிட்டால் சாப்பிட வருகிற நீ, நான் கூப்பிட்டால் மட்டும் ஏன் சாப்பிட வராமல் இருக்கிறாய்? நான் என்ன தப்பு செய்தேன்? நீ ஏன் இவ்வளவு நேரமாகியும் சாப்பிட வராமல் இருக்கிறாய்? நான் வைத்திருக்கிற நைவேத்தியத்தை வந்து சாப்பிடேன். நான் என்ன அபராதம் செய்தேன் என்று இன்னமும் நீ சாப்பிட வராமல் இருக்கிறாய்?" என்று மீண்டும் மீண்டும் சொல்லி நீண்ட நேரம் அழுது பிரார்த்தித்துக்கொண்டேயிருந்தான். உள்ளபடியே மனம் கசிந்து அப்படி ஒரு அழுகையை அவன் அழுதான்.

பிறகு அவன் தலையை நிமிர்த்திப் பார்த்த போது, இறைவன் மனித வடிவத்தை எடுத்துக் கொண்டு நைவேத்தியத்தைச் சாப்பிடுவதைக் கண்டான்!

பூஜை முடிந்ததும் பையன் வெளியே வந்தான். வீட்டுக்காரர்கள், "பூஜை முடிந்திருந்தால் நைவேத்தியத்தை வெளியே எடுத்துக்கொண்டு வருவது தானே?" என்று கேட்டார்கள்.

பையன் ''ஆமாம், பூஜை முடிந்துவிட்டது. ஆனால் நைவேத்தியம் எல்லாவற்றையும் சுவாமி சாப்பிட்டு விட்டாரே'' என்று இயல்பாகவும் சர்வ சாதாரணமாகவும் பதில் சொன்னான்.

வீட்டுக்காரர்கள் ஆச்சரியத்துடன் ''நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார்கள்.

பையன் கள்ளங்கபடமற்ற வெள்ளையுள்ளத்துடன், ''ஏன்? நான் நைவேத்தியம் செய்தவற்றை எல்லாம் சுவாமி சாப்பிட்டுவிட்டார்'' என்று திரும்பவும் பதில் சொன்னான். பிறகு வீட்டுக்காரர்கள் பூஜையறையில் நுழைந்து பார்த்தார்கள். அங்கே நைவேத்தியம் வைத்திருந்த பாத்திரங்கள் வெறும் காலிப்பாத்திரங்களாக இருந்ததைக் கண்டு, வியந்துபோய் பிரமித்தார்கள்.

உண்மையான கடவுள் நம்பிக்கையும் உண்மையான ஆவலும் இத்தகைய மகிமையை உடையன.

சாதகனின் பலம் எங்கே இருக்கிறது? அவன் கடவுளின் குழந்தை; ஆதலால் கண்ணீர்தான் அவனுக்குப் பிரதானமான பலம். அழும் குழந்தையின் விருப்பங்களை அதன் தாய் நிறைவேற்றிவைப்பதைப் போல, பகவானும் அழுதுகொண்டிருக்கும் தன் குழந்தை கேட்பவற்றை எல்லாம் கொடுத்துவிடுகிறார்.

35. கண்ணன் வந்தான்!

உண்மையிலேயே தீவிரமான ஆவல் இருந்தால், இறைவனை நிச்சயமாகத் தரிசிக்க முடியும். குழந்தைக்கு இருப்பதைப் போன்ற கள்ளமில்லாத மனப்பான்மையும் நம்பிக்கையும் ஒருவனுக்கு இருக்கவேண்டும். தாயைக் காணவேண்டும் என்று குழந்தை உருகுவதைப் போல, உண்மையான ஆவலும் ஏக்கமும் கடவுள் விஷயத்தில் ஒருவனுக்கு இருப்பது முற்றிலும் அவசியம்.

ஒரு காலத்திலே ஜடிலன் என்ற ஒரு பையன் இருந்தான். அவன் தன்னந்தனியாகக் காட்டு வழியே பள்ளிக்கூடம் போவது வழக்கம். தனியாக அவன் மட்டும் அந்தக் காட்டு வழியாகப் போக வேண்டியிருந்ததால், அடிக்கடி அவனுக்குப் பயம் ஏற்பட்டது. ஆகவே அவன் தான் அடிக்கடியும் பயந்து போவதைத் தாயாரிடம் தெரிவித்தான்.

பையனுக்கு ஆறுதலாக அவள், ''குழந்தாய், நீ ஏன் பயப்படுகிறாய்? உனக்கு பயம் ஏற்படும்போது, 'கிருஷ்ணா!' என்று சப்தம் போட்டுக் கூப்பிடு'' என்று சொன்னாள். பையனுக்குக் கிருஷ்ணன் யார் என்பது தெரியவில்லை. ஆகவே அவன், ''கிருஷ்ணன் என்பது யார் அம்மா?'' என்று கேட்டான்.

தாய் அவனுக்கு ''கிருஷ்ணன் உன் அண்ணன்'' என்று பதில் சொன்னாள்.

இதன் பிறகு வழக்கப்படி ஒரு நாள் ஜடிலன் காட்டு வழியாகப் போய்க்கொண்டிருந்தான். அப்

போது அவனுக்குப் பயம் தோன்றியது. உடனே ஜடிலன், ''அண்ணு!'' என்று உரக்கக் கூப்பிட்டான். ஆனல் ஒருவரும் வரவில்லே. ஆதலால் மீண்டும் அவன், ''ஓ அண்ணு! நீ எங்கே இருக்கிருய்? எனக்குப் பயமாக இருக்கிறது. என்னே வந்து நீ காப்பாற்று'' என்று கூவினுன்.

இந்தக் குழந்தையின் நம்பிக்கையைக் கண்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் உடனே ஒரு சிறுவனின் வடிவில் அங்கு வந்தார். அவர் ஜடிலனிடம், ''தம்பி! இதோ, உன் அண்ணு இங்கே இருக்கிறேன். நீ ஏன் பயப்படுகிருய்! என்னுடன் வா. நான் உன்னேப் பள்ளிக்கூடம் கொண்டுபோய் விடுகிறேன்'' என்று சொல்லிப் பள்ளிக்கூடம் வரை அழைத்துச் சென்ருர். அங்கே போனதும், ''தம்பி! நீ கூப்பிடும் போதெல்லாம் நான் வருகிறேன். பயப்படாமல் இரு'' என்று சொல்லிவிட்டுப்போனுர்.

உண்மையான கடவுள் நம்பிக்கையும் உண்மையான கடவுள் ஏக்கமும் இப்படிப்பட்ட மகிமையை உடையன.

''என் அருமைக் குழந்தைகளே உண்மையாகவே பகவத் தரிசனம் பெற முடியும். நாம் எப்படி உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிருேமோ, அது போலவே கடவுளேக்கண்டு அவரோடு பேச முடியும். நான் இப்படிச் சொல்வது வெறும் வார்த்தையல்ல; சத்தியமான வார்த்தை ஆகும்'' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லியிருக்கிருர்.

36. பால்மனம் கொண்ட பால்காரி

ஒரு பால்காரி ஆற்றுக்கு அக்கரையிலே வசித்து வந்த பிராம்மண குரு ஒருவருக்குத் தினந் தோறும் பால் கொண்டுபோய்க் கொடுப்பது வழக்கம்.

ஒரு சமயம் படகுப் போக்குவரத்து சரியாக நடைபெறவில்லை. ஆதலால், நாள்தோறும் சரி யான நேரத்திற்குப் பால் கொண்டுபோய்க் கொடுப் பதில் தடை ஏற்பட்டது. ஒரு நாள் அந்தப் பிராம் மண குரு, ''வேளைக்கு ஒழுங்காக ஏன் பால் கொண்டு வந்து தருவதில்லை?'' என்று பால்காரி யைக் கடுமையாகக் கோபித்துக்கொண்டார்.

எளிய பால்காரி அவருக்கு, சுவாமி, நான் என்ன செய்வேன்? தினமும் அதிகாலையில்தான் நான் வீட்டை விட்டுக் கிளம்புகிறேன். ஆனால் நதிக் கரைக்கு வந்ததும் நீண்ட நேரம் ஓடக்காரனுக் காகக் காத்திருக்கவேண்டியிருக்கிறது'' என்று பதில் சொன்னாள்.

அதைக் கேட்டதும் பிராம்மண குரு, ''ஏ பெண்ணே! பகவானுடைய நாமத்தை உச்சரிப் பதால் மக்கள் பிறவியாகிய பெரிய கடலையே தாண்டிக் கடந்து விடுகிறார்கள்! உன்னால் இந்த சிறிய ஆற்றைக் கடக்க முடியவில்லையா?'' என்று வினவினார்.

கள்ளங்கபடமில்லாத அந்தப் பால்காரி, பிராம் மணர் சொன்னதை அப்படியே நம்பினாள்.

ஆற்றைக் கடப்பதற்குச் சுலபமான வழி தெரிந்து விட்டது என்று பெரிதும் மகிழ்ந்தாள். வஞ்சம் இல்லாத நெஞ்சம் அவளுடையது.

அடுத்த நாள் முதற்கொண்டு குருவுக்கு அதி காலையிலேயே உரிய நேரத்தில் பால் கிடைத்து வந்தது. ஒரு நாள் அவர் பால்காரியிடம், ''நீ முன்பு போல இப்போதெல்லாம் தாமதமாக வருவ தில்லையே! எப்படி உன்னால் உரிய காலத்தில் பால் கொண்டுவர முடிகிறது?'' என்று கேட்டார்.

''சுவாமி தேவரீர் சொன்னபடியே பகவானின் நாமத்தைச் சொல்லிக்கொண்டே ஆற்றைக் கடந்து வருகிறேன். இப்போதெல்லாம் நான் ஓடக்காரனுக் காகக் காத்திருப்பதில்லை'' என்று பால்காரி பதில் சொன்னாள். பிராம்மணர் இதை எப்படி நம்புவார்? பால்காரியின் வார்த்தையில் நம்பிக்கையில்லாத அவர், ''நீ எப்படி ஆற்றைத் தாண்டி வருகிறாய் என்பதை எனக்கு காட்டுவாயா?'' என்று கேட்டார்.

பால்காரி சூதுவாது தெரியாதவள். அவள் சம்மதித்துப் பிராம்மணரை அழைத்துக்கொண்டு நதிக்கரைக்குப் போனாள். பகவானின் நாமத்தைச் சொல்லிக்கொண்டே ஆற்றுநீரின் மேல் சர்வ சாதாரணமாக நடந்துபோக ஆரம்பித்தாள். அப்படிச் சிறிது தூரம் சென்றதும் பின்னால் திரும்பிப் பார்த்தபோது குரு நடக்க முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவரது நிலையைக் கண்டதும் அவள், ''சுவாமி!

இது என்ன? பகவானின் நாமத்தை வாயால் சொல்கிறீர்கள். ஆனால் அதே சமயம், துணி எங்கே நனைந்துவிடப்போகிறதோ என்று கைகளால் தூக்கிப் பிடித்துக் கொள்கிறீர்களே! தங்களுக்குப் பகவானிடத்தில் பரிபூரண நம்பிக்கை இல்லையே!'' என்று கேட்டாள்.

பகவானிடத்தில் வைக்கும் தீவிரமான நம்பிக்கையும் பரிபூரண சரணாகதியுமே எல்லா அற்புதச் செயல்களுக்கும் காரணமாக இருக்கின்றன.

37. நாரதர் நரகம் சென்ற விதம்

மனிதனால் எதையும் சாதிக்க முடியும். அதற்கு உரிய சுதந்திரம் அவனுக்கு இருக்கிறது—என்பது ஒரு கருத்து.

மனிதனால் எதையுமே சாதிக்க முடியாது. அவனுக்குச் சுதந்திரம் என்பதே கிடையாது. எல்லாம் இறைவனின் திருவருளை ஒட்டியே நடைபெறுகின்றன. அவனின்றி அணுவும் அசையாது. இறைவனாகிய சூத்திரதாரியின் கையில் ஒரு பொம்மை போல மட்டுமே மனிதன் இருக்கிறான்—என்பது மற்றொரு கருத்து.

இந்த இரண்டு கருத்துக்களுமே மத நூல்களில் இடம் பெற்றிருக்கின்றன. மகான்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

மனிதனுக்கு உள்ள சுதந்திரம், இறைவனின் திருவருள் ஆகிய இரண்டு கருத்துக்களும் ஒன்றுக்

கொன்று முரண்பாடு கொண்டவை போல இருக்கின்றன. இந்த உண்மை எளிதில் புரிந்துகொள்ள முடியாத பிரச்னையாகவும் இருக்கிறது—இந்த பிரச்னையை ஒருமுறை ஸ்ரீராமகிருஷ்ணரிடம் இரண்டு சீடர்கள் எடுத்துச் சொல்லி விளக்கம் கேட்டார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களுக்கு விளக்கம் சொன்னார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்:— மனிதனுக்குள்ள சுதந்திரத்தைப்பற்றி மிகவும் பிரமாதமாகப் பேசுகிறீர்கள்! உண்மையில் எல்லாம் இறைவனின் இச்சையை ஒட்டியே நடைபெறுகின்றன.

ஒரு மூலையில் கட்டப்பட்ட பசுவை போல நமது இச்சைகள் எல்லாம் இறைவனின் இச்சையுடன் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பசுவைக் கட்டியுள்ள கயிற்றின் நீளத்திற்கு அந்தப் பசுவிற்குச் சுதந்திரம் இருக்கிறது. அதைப் போல நமக்கும் சிறிதளவு சுதந்திரம் இருப்பது உண்மை. ஆதலால்தான் மனிதன் தனக்குச் சுதந்திரம் இருப்பதாக நினைக்கிறான். தனது விருப்பப்படியே எல்லாம் நடப்பதாக நினைத்துவிடுகிறான். ஆனால் மனிதனின் எல்லா இச்சைகளும் இறைவனின் இச்சை ஒன்றையே ஒட்டி இருக்கின்றன. அனைத்தும் இறைவனின் விருப்பத்தையே பொறுத்திருக்கின்றன என்பதை நிச்சயமாக உணர்ந்துகொள்ளுங்கள்.

சீடர்:—அப்படியானால் தியானம், தவம், பிரார்த்தனை போன்றவற்றுக்கு அவசியம் இல்லையா?

ஏனென்றால் ஒருவன், ''எல்லாம் கடவுளின் இச்சை. அவன் விருப்பப்படியேதான் எல்லாம் நடக்கப் போகிறது'' என்று சொல்லிக்கொண்டே சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கலாமே?

ஸ்ரீராமகிருஷ்ணர்:—ஓ! அப்படிச் சும்மாவேனும் வெறும் வாயினாலே மட்டும் சொல்லிவிட்டால் போதுமா? முட்செடியில் கையைக் கொண்டுபோய் வைப்பதால் முட்கள் தைப்பது நிச்சயம். அதனால் உண்டாகும் வேதனையை எத்தனை முறைதான் இல்லை என்று சொன்னாலும் நீங்கிவிடாது.

தவம் முதலிய ஞானசாதனங்கள் அனைத்துமே மனிதனின் செய்கைக்குள் அடங்குவதாக இருந்தால், பிறகு ஒவ்வொருவரும் அவற்றைச் செய்து விடமாட்டார்களா? அப்படி ஒவ்வொருவரும் அவற்றைச் செய்து விட முடியாது. ஆனால் ஓர் உண்மை இருக்கிறது: பகவான் உனக்குக் கொடுத் திருக்கிற ஆற்றல்களை நீ சரியான முறையில் பயன் படுத்த வேண்டும். அப்படி நீ செய்யாவிட்டால் உனக்கு மேலும் அதிகமான ஆற்றல்களை அவர் கொடுக்கமாட்டார். அதனால்தான் சுயமுயற்சி மிகவும் அவசியம். ஆகவே இறைவனின் திரு வருளைப் பெறுவதற்கு உரிய தகுதியுடையவனாக இருப்பதற்குங்கூட, ஒவ்வொருவரும் கடுமையாக முயற்சி செய்து உழைக்க வேண்டும். அதற்காக பாடுபட வேண்டும்.

இவ்விதம் சுயமுயற்சியும் இறைவனின் திரு வருளும் ஒன்றுசேரும்போது பல பிறவிகளில் ஏற்

பட்டுள்ள பந்தவினைகள் அனைத்தும் இந்த ஒரு பிறவியிலேயே கழிந்துவிடும். பல பிறவிகள் எடுத்தும் கழிக்க வேண்டிய வினைகளையும் துன்பங்களையும் இந்த ஒரு பிறவியிலேயே நீக்கிக் கொண்டுவிடலாம். ஆகையால் சிறிதளவாகிலும் சுயமுயற்சி முற்றிலும் அவசியம். இதை விளக்க ஒரு கதை சொல்கிறேன் கேள்.

ஒரு முறை ஸ்ரீமந்நாராயணன் நாரதரைப் பார்த்து, ''நீ நரகத்திற்குப் போகக்கடவாய்'' என்று சாபமிட்டார்.

இதைக் கேட்ட நாரதர் மிகவும் மனம் வருந்தினார். பகவானிடம் அவர், ''சுவாமி! நரகம் எங்கே இருக்கிறது? அங்கே செல்வதற்கு உரிய வழி எது?'' என்று கேட்டு மனம் உருகிப் பிரார்த்தித்தார். பக்தியுடன் பகவானின் புகழைப் பாடியும் மனம் கசிந்து உருகியும் பகவானிடம் அருள் புரியும்படி வேண்டிப் பிரார்த்தித்தார்.

நாரதர் அவ்விதம் மன்றாடிக் கேட்டதும் ஸ்ரீமந்நாராயணன் தரையில் பிரபஞ்சத்தின் படத்தை வரைந்தார். பின்பு அந்த படத்தின் மூலம் சொர்க்கமும் நரகமும் இருக்கும் இடங்களை நாரதருக்குச் சுட்டிக் காட்டினார். நாரதர் அதைக் கண்டதும் உடனே 'நரகம்' என்று குறிப்பிட்டிருந்த இடத்தைக் காட்டி, ''இதுதான் நரகமா? நரகம் இதைப் போலத்தான் இருக்குமா? அப்படியானால் இதுதான் நரகம்'' என்று சொல்லிக்கொண்டே நரகம் என்று பகவான் குறிப்பிட்ட இடத்தின்மீது

விழுந்து புரண்டார். பின்பு எழுந்து நின்று, ''சுவாமி, இப்போது நரக தண்டனையை நான் அனுபவித்து விட்டேன்'' என்று சொன்னார்.

ஸ்ரீமந்நாராயணன் அதைக் கேட்டதும் புன் சிரிப்புடன், ''அதெப்படி நீ நரகத் துன்பத்தை அனுபவித்ததாகும்?'' என்று வினவினார்.

நாரதர் அதற்குப் பதிலாக, ''சொர்க்கமும் நரகமும் தங்களுடைய சிருஷ்டியே அல்லவா? பிரபஞ்சத்தின் படத்தை நீங்களே வரைந்தீர்கள். நீங்களே படத்தில் நரகம் இருக்கும் இடத்தையும் குறிப்பிட்டு நரகம் என்று சொன்னீர்கள். ஆதலால் அந்த இடம் உண்மையான நரகமாகவே ஆகி விட்டது. நானும் அதன் மீது புரண்டு எழுந்து விட்டேன். ஆகவே தாங்கள் குறிப்பிட்ட நரக தண்டனை தீர்ந்துவிட்டது'' என்று சொன்னார்.

நாரதர் முழு நம்பிக்கையோடு மனதார அவ்விதம் சொன்னார். ஆகவே பகவானும் அவர் சொன்ன விளக்கத்தைத் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டார்.

38. அர்ஜுனன் பெற்ற படிப்பினை

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவும் அர்ஜுனனும் நண் பர்களாக இருந்தார்கள். ஒரு சமயம் அர்ஜுனனின் உள்ளத்தில் கர்வம் தோன்றியது. தன்னைவிடவும் கிருஷ்ணனிடம் பெருமளவில் பக்தியும் அன்பும் கொண்டவர்கள் யாருமே கிடையாது என்று அவன்

நினைத்தான். இது விஷயத்தில் தனக்கு இணையானவர்களே கிடையாது என்று கருதிக் கர்வம் கொண்டான்.

அனைத்தும் அறிந்தவராகிய கிருஷ்ணனுக்கு அர்ஜுனனின் உள்ளம் புரிந்தது. அவர் அர்ஜுனனின் கர்வத்தைப் போக்கிப் பாடம் புகட்டத் திருவுள்ளம் கொண்டார்.

ஆகவே ஸ்ரீகிருஷ்ணர் ஒருநாள் அர்ஜுனனைத் தம்முடன் அழைத்துக்கொண்டு உலாவுவதற்காகக் கிளம்பினார். சிறிது தூரம் சென்றதும் உலர்ந்த புல்லைத் தின்றுகொண்டிருந்த பிராம்மணன் ஒருவனை அவர்கள் இருவரும் வழியில் கண்டார்கள். அந்தப் பிராம்மணனின் இடுப்பில் கூரியகத்தி ஒன்றும் தொங்கிக்கொண்டிருந்தது.

பிராம்மணனைப் பார்த்த மாத்திரத்திலேயே அவன் ஒரு விஷ்ணுபக்தன் என்பதை அர்ஜுனன் தெரிந்து கொண்டான். வைஷ்ணவர்கள் ஜீவ ஹிம்சை செய்யமாட்டார்கள். 'பச்சைப் புல்லுக்கும் உயிர் உண்டு' என்பதால் இந்த பிராம்மணன் உயிரற்ற உலர்ந்த புல்லைத் தின்றுகொண்டிருந்தான்.

ஆனால் இப்படிப்பட்ட உயர்ந்த பக்தன், தன் இடுப்பிலேயே ஒரு கத்தியைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்ததற்கான காரணம் மட்டும் அர்ஜுனனுக்குப் புரியவில்லை. ஆதலால் அவன் ஆச்சரியத்துடன் ஸ்ரீ கிருஷ்ணரை நோக்கி, ''பிரபோ, இது

என்ன விந்தையாக இருக்கிறதே! பிராம்மணனைப் பார்த்தால் புல்லுக்கும் ஹிம்சை செய்யாத விரதமுடையவனுகக் காணப்படுகிருன். ஆனுல் ஹிம்சை செய்யக்கூடிய கத்தியை வைத்துக் கொண்டிருக்கிருனே, அது என்ன?'' என்று கேட்டான்.

அதற்குப் பதிலாக ஸ்ரீகிருஷ்ணர், ''நீயே அவனைக் கேட்டுத் தெரிந்துகொள்'' என்று சொன்னுர்.

உடனே அர்ஜுனன் நேராக அந்தப் பிராம்மணனிடம் சென்று, ''சுவாமி! தாங்கள் ஜீவஹிம்சை செய்யாதவர். ஆகவேதான் உலர்ந்த புல்லைத் தின்று கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் இந்தக் கூரிய கத்தியை ஏன் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று விசாரித்தான்.

பிராம்மணன்:—நான்கு கொடியவர்களைத் தண்டிப்பதற்காக இந்தக் கத்தியை வைத்திருக்கிறேன். அவர்களை நேரில் சந்திக்கும் காலத்தைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

அர்ஜுனன்:—சுவாமி, அந்த நான்கு கொடியவர்கள் யார்?

பிராம்மணன்:—அவர்களில் முதலாவது ஆள், அந்தப் பாவியான நாரதன்.

அர்ஜுனன்—யார்! நாரதரா? அவர் என்ன தவறு செய்தார்?

பிராம்மணன்:—அவனுடைய ஆணவத்தைப் பார். அவனுல் என் பகவானுக்கு ஒரு நிமிடங்கூடத்

தூக்கம் கிடையாது. எப்போது பார்த்தாலும் நாரதன் பாட்டும் சங்கீதமுமாக இருந்து கொண்டு பகவானைத் தூங்கக்கூட விடுவதில்லை. சுவாமியின் சௌகரியத்தை அவன் கொஞ்ச மேனும் கவனிப்பதில்லை. வேளை நேரம் என்று இல்லாமல் இரவு பகலாகப் பகவந்நாம சங்கீர்த் தனம் செய்கிறான். அதனால் பகவானுடைய நிம்மதியைக் குலைத்துக் கொண்டிருக்கிறான்.

அர்ஜுனன்:—சரி, இரண்டாவது ஆள் யார்?

பிராம்மணன்:—வேறு யார்? கர்வம் பிடித்த அந்தத் திரௌபதிதான் இரண்டாவது ஆள்.

அர்ஜுனன்:—அப்படி அவள் செய்த பிழை என்னவோ?

பிராம்மணன்:—எதை எப்போது செய்ய வேண்டும் என்று கொஞ்சமும் யோசனையில்லாமல் அவள் செய்த அக்கிரமத்தைத்தான் பார்! பகவான் உணவருந்தப் போகும் சமயத்தில் அவரை கூப்பிட்டாள். ஆதலால் அவர் துர்வாஸ ரிஷி யின் சாபத்திலிருந்து பாண்டவர்களைக் காப்ப தற்காகக் காம்யக வனத்திற்குச் சாப்பிடா மலே பட்டினியாகப் போக வேண்டியதா யிற்று. அது மட்டுமா? அவளுடைய கர்வம், தான் சாப்பிட்டு மீதியாக இருந்த உணவை என் பகவானுக்குப் போட வரும் அளவுக்குப் போயிருக்கிறது! இப்படிப்பட்ட அவளுடைய ஆணவத்தை என்ன என்று சொல்வது?

அர்ஜுனன்:—மூன்றாவது யார்?

பிராம்மணன்:—இதயமே இல்லாத கல்நெஞ்சன் பிரகலாதன். கொஞ்சங்கூட இரக்கம் என்பதே அவனுக்குக் கிடையாது. சிறிதும் தயங்காமல் அவன் என் சுவாமியைப் பொங்கும் எண்ணெய்க் கொப்பரையில் இறங்கும்படியாகச் செய்தான். வஜ்ரம் போன்ற அவ்வளவு உறுதியான தூணைப் பகவான் பிளந்து கொண்டு வரும்படியாகவும் செய்தானே!

அர்ஜுனன்:—நான்காமவன் யார்?

பிராம்மணன்:—கொடும்பாவியான அர்ஜுனன்.

அர்ஜுனன்:—அர்ஜுனனு? அவன் என்ன தவறு செய்தான்?

பிராம்மணன்:—பெருங் குற்றவாளி அவன். அவன் செய்த படுபாதகச் செயலைப் பார். என் தெய்வமாகிய பகவானையே அவன்தன் தேர்ப்பாகனுக இருக்கும் இழிந்த வேலையை மேற்கொள்ளச் செய்து மகாபாரதப் போரில் ஈடுபட்டான்.

பிராம்மணன் சொன்ன பதில்களை அர்ஜுனன் கேட்டான். பிராம்மணன் பகவானிடம் கொண்டிருந்த தன்னலம் கருதாத தூய அன்பு அர்ஜுனனுக்குப் புரிந்தது. அந்தப் பக்தனுடைய பக்திப் பிரேமையின் தீவிரத்தைக் கண்டு வியப்படைந்த அர்ஜுனன், அந்த நிமிடம் முதல் தன்னைவிடவும் பகவத்பக்தியில் உயர்ந்தவர் எவருமில்லை என்ற அகங்காரத்தை விட்டுவிட்டான்.

39. இராமனின் இச்சை

ஒரு கிராமத்திலே ஒரு நெசவாளி இருந்தான். அவன் உண்மையிலேயே பரம பக்தன். ஆகவே ஊர் மக்கள் அனைவரும் அவன் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். உண்மையான அன்பையும் செலுத்தினர்கள்.

அந்த நெசவாளி, தான் நெய்த துணிகளைச் சந்தையிலே கொண்டுபோய் விற்பது வழக்கம். துணியை வாங்க வரும் வாடிக்கைக்காரர் யாராவது, ''இந்தத் துணியின் விலை என்ன?'' என்று விசாரித்தால், ''ராமபிரானின் இச்சைப்படி நூல்விலை ஒரு ரூபாய். ராமபிரானின் இச்சைப்படி நெசவுக்கூலி நாலணு. ராமபிரானின் இச்சைப்படி லாபம் இரண்டணு. ராமபிரானின் இச்சைப்படி ஆக மொத்தம் இந்தத் துணியின் விலை ரூபாய் ஆறணு'' என்று நெசவாளி பதில் சொல்லுவான். அந்த நெசவாளி நாணயமானவன் என்பதில் மக்களுக்குப் பரிபூரண நம்பிக்கை இருந்தது. ஆதலால் அவர்கள் நெசவாளி விலையைச் சொன்னவுடனே மறுபேச்சில்லாமல் அவன் சொன்ன விலையைக் கொடுத்து துணியை வாங்கிக் கொள்வார்கள்.

நெசவாளி நேர்மையான வாழ்க்கையையும் பகவானிடம் அபாரமான பக்தியையும் கொண்டவன். இரவுச் சாப்பாட்டிற்குப் பிறகும் அவன், நீண்ட நேரம் தன் வீட்டுப் பூஜையறையில் உட்கார்ந்திருப்பான். அங்கே பகவத் தியானத்திலும் ஜபத்திலும் பக்திப் பாடல்களைப் பாடுவதிலு

மாக இரவு நீண்ட நேரம் மனம் தோய்ந்திருப்பதை அவன் வழக்கமாகக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் இரவு நீண்ட நேரம் ஆகியும் நெசவாளிக்கு ஏனோ தூக்கம் வரவில்லை. ஆகவே திண்ணையில் தனியாக உட்கார்ந்து இடையிடையே புகை குடித்துக் கொண்டு ஜபமும் தியானமும் செய்வதில் அவன் ஈடுபட்டிருந்தான். அப்போது அந்த வழியாக ஒரு கொள்ளைக்காரர் கூட்டம் வந்தது. அவர்களுக்கு மூட்டைகளைச் சுமந்துவர ஓர் ஆள் தேவைப்பட்டது. ஆகவே அவர்கள் நெசவாளியைப் பார்த்ததும், ''எங்களுடன் வா'' என்று சொல்லிக்கொண்டே அவனுடைய கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனார்கள்.

பிறகு, திருடர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு வீட்டில் நுழைந்தார்கள். அந்த வீட்டிலிருந்த பல சாமான்களையும் திருடர் கூட்டம் தாராளமாகக் கொள்ளையடித்தது. பின்பு கொள்ளையடித்த பொருள்களைத் தூக்கிப் போவதற்கு வசதியாக ஒரு பெரிய மூட்டையாகக் கட்டினார்கள். அந்த மூட்டையை நெசவாளியின் தலைமேல் வைத்து, அதைச் சுமந்து வரும்படி கட்டளையிட்டார்கள். அப்பாவி நெசவாளி இப்போது மூட்டையைச் சுமந்து கொண்டு திருடர்களுடன் போக வேண்டியதாயிற்று.

கொள்ளைக் கூட்டம் தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தது. அப்போது திடீரென்று வழியில் ஒரு போலீஸ் படையே வந்து

விட்டது. அவ்வளவுதான், கொள்ளைக்காரர்கள் 'அடித்தோம், பிடித்தோம்' என்று பஞ்சாய்ப்பறந்து ஓடிவிட்டார்கள். மூட்டையை சுமந்து வந்த நெசவாளி மட்டும் போலீஸ்காரர்களிடம் மாட்டிக் கொண்டான். போலீஸார் நெசவாளியை அவன் மூட்டையை தலையில் வைத்திருந்த நிலையில் கைது செய்தனர். அவனைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அன்றைய இரவு முழுவதும் காவலில் வைத்தார்கள்.

மறுநாள் காலை போலீஸார் மாஜிஸ்ட்ரேட் முன்பு நெசவாளியை விசாரணைக்காகக் கொண்டு போய் நிறுத்தினர். இதற்குள்ளாக ஊரில் இருப்பவர்களுக்கு விவரம் தெரிய வந்தது. உடனே பரபரப்புடன் ஊரே மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு வந்து கூடிவிட்டது. 'நம் நெசவாளிக்கு இப்படிப் பட்ட நிலை வந்ததே!' என்று நினைத்து மக்கள் மனம் பெரிதும் புண்பட்டது. ஊர் மக்கள் மாஜிஸ்ட்ரேட்டைப் பார்த்து, ''ஐயா, இந்த நெசவாளி ஒரு போதும் திருடியிருக்க மாட்டான்'' என்று ஒரு மனதாக ஏகோபித்துச் சொன்னார்கள்.

இப்படி ஊர் மக்களே கூட்டமாகத் திரண்டு வந்து ஒருவனுக்காகப் பரிந்து பேசியதை மாஜிஸ்ட்ரேட் கேட்டார். அவர் நெசவாளியைப் பார்த்து, ''என்ன நடந்தது? சொல்'' என்று கேட்டுவிட்டு விசாரணையைத் துவக்கினார்.

நெசவாளி அதற்குப் பதிலாகப் பின்வருமாறு வாக்குமூலம் கொடுத்தான்:-''ஐயா, ராமபிரானின் இச்சைப்படி நான் இரவுச் சாப்பாட்டை முடித்தேன்.

பிறகு ராமபிரானின் இச்சைப்படி வழக்கம் போல் பூஜையறையில் உட்கார்ந்திருந்தேன். ராமபிரானின் இச்சைப்படி அப்போது 'இரவு வெகுநேரம் ஆயிற்று. ராமபிரானின் இச்சைப்படி பகவத் தியானமும் ஜபமும் பஜனையும் செய்து கொண்டிருந்தேன். ராம பிரானின் இச்சைப்படி பிறகு திண்ணையில் உட்கார்ந்து அவனையே நினைத்துப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். ராமபிரானின் இச்சைப்படி அப்போது அந்த வழியாக ஒரு கொள்ளைக்கூட்டம் செல்ல நேர்ந்தது. ராமபிரானின் இச்சைப்படி அவர்கள் என்னையும் தங்களோடு வரச்சொல்லி இழுத்துக்கொண்டு போனார்கள். ராமபிரானின் இச்சைப்படி அவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு வீட்டில் கொள்ளையடித்தார்கள். ராமனின் இச்சைப் படியே கொள்ளையடித்த பொருள்களை ஒரு மூட்டை யாக கட்டி என் தலைமேல் வைத்தார்கள். ராமனின் இச்சைப்படி அவர்கள் அந்த மூட்டையைத் தூக்கி வரும்படி கட்டளையிட்டார்கள். ராமனின் இச்சைப் படியே அப்போது போலீஸ்காரர்கள் வந்துவிட்டார் கள். ராமனின் இச்சைப்படி திருடர் கூட்டம் ஓடிப் போக, ராமனின் இச்சைப்படி நான் கைதியாக்கப் பட்டேன். ராமனின் இச்சைப்படி போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்துப்போய் அங்கே ஓர் இரவு காவலில் வைத்தார்கள். ராமனின் இச்சைப் படி இப்போது போலீசாரால் தங்கள் முன்பு கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறேன்.''

மாஜிஸ்ட்ரேட் நெசவாளியின் வாக்குமூலத்தைக் கவனமாகக் கேட்டார். அவருக்கு நெசவாளி

உண்மையிலேயே ஒரு பெரிய பக்தன் என்பது புரிந்துவிட்டது. நெசவாளியின் பக்தியையும் நேர்மையையும் மனதில் கொண்ட மாஜிஸ்ட்ரேட், உடனே நெசவாளியை விடுதலை செய்யும்படி உத்தர விட்டார்.

நெசவாளி வீட்டுக்குப் போகும் வழியில் தன் நண்பர்களிடம், ''இராமபிரானின் இச்சைப்படி என்னை விடுதலை செய்துவிட்டார்கள்'' என்று சொன்னான்.

நீ குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு இல்லறத்தவனாக இருப்பதோ, குடும்ப வாழ்க்கையைத் துறந்து உயர்ந்த சந்நியாசியாக இருப்பதோ—உண்மையில் இராமபிரானின் இச்சையையே பொறுத்திருக்கிறது. ஆகவே, இதை நீ புரிந்துகொண்டு உன் ஒவ்வொரு செயலையும் பகவானிடமே ஒப்படைத்துவிடு. எல்லாப் பாரத்தையும் இறைவன் மீது போட்டு விட்டு உலகில் உனக்கு ஏற்பட்டுள்ள கடமைகளை முறையாக செய். அதைத் தவிர வேறு என்ன நீ செய்ய இருக்கிறது?

உலகில் வாழ்பவர்கள் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் மேலே கூறியுள்ள இந்த ஒரே ஒரு கதையையும் கருத்தையும் நினைவில் வைத்துக்கொண்டால் கூடப் போதுமானது. 'நான் செய்கிறேன். நான் செய்துவிடுவேன்' என்று நினைக்கும் ஆணவம்தான் அஞ்ஞானம். அதற்குபதிலாக, ''பகவானே, நீயே கர்த்தா. நான் ஒரு கருவி மாத்திரமே'' என்று மனப்பூர்வமாக உணர்ந்திருப்பதுதான் ஞானமாகும்.

'அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மங்யதே'

(கீதை 3-27)

அகங்காரத்தால் அறிவிழந்த மூடன் தன்னை கர்த்தாவாக நினைத்துக்கொள்கிறான். உண்மையில் இறைவன் ஒருவனே எல்லாக் காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறார். ''அவனின்றி ஓர் அணுவும் அசையாது'' என்பதே எல்லா மகான்களின் அனுபவமாக இருந்து வந்திருக்கிறது.

பகவானிடம் முழு அளவில் சரணாகதி கொண்டவனிடம் ஆணவம் இருக்காது. அவன் அடக்கத்தோடு இருப்பான். கதையில் சொல்லப்பட்ட நெசவாளி, எந்த நேரத்திலும் 'நான்' என்று தன்னை முதலில் வைத்துக் கொள்ளவில்லை. நடைபெற்ற எல்லாச் செயல்களுக்கும் பின்னணியில் இறைவனே இருந்தார் என்பதை அவன் கண்டான்.பகவானிடம் தன்னை ஆத்ம சமர்ப்பணம் செய்துவிட்டவனுக்கு உண்மையிலேயே எந்தவிதமான துன்பமும் நேர்ந்து விடாது; குழப்பமும் நேராது. இறைவனிடம் சரண் புகுந்தவனுக்குத்தான், 'எல்லாம் இறைவனே செய்து வருகிறார்' என்ற உண்மை புரியும்; புரிய முடியும். மற்றவர்களுக்கு அது ஒரு கேள்வி ஞானமாக மட்டுமே இருக்கும்.

''இயந்திரத்திலேற்றி வைக்கப்பட்ட பொம்மைகளை சுழற்றுவதுபோல், எல்லாப் பிராணிகளையும் தன் மாயா சக்தியினால் ஆட்டி வைத்துக்கொண்டு, இறைவன் எல்லாப் பிராணிகளுடைய இதயங்களிலும் குடி கொண்டுள்ளார்.'' **கீதை 18-61**

''யோகக்ஷேமம் வஹாம்யஹம்.'' —**கீதை 9-22**

40. திருடன் சன்னியாசி ஆனான்!

ஒரு நாள் ஒரு திருடன் அரசனுடைய அரண்மனையில் திருடுவதற்காக நுழைந்தான். அப்பொழுது இரவின் நடுஜாமப் பகுதி கழிந்து கொண்டிருந்தது. அரசன் தன் மனைவியிடம், ''நம் மகளை ஆற்றங்கரையில் வசித்துக் கொண்டிருக்கும் சாதுக்களில் ஒருவருக்கு திருமணம் செய்து கொடுக்கப்போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

அரசன் சொன்ன வார்த்தைகள் மறைந்திருந்த திருடனின் காதில் விழுந்தன. உடனே அவன், 'ஆகா, பேஷ்! இப்போது ஒரு நல்ல அதிர்ஷ்டம் எனக்காகக் காத்திருக்கிறது. நாளைக்கே நான் சாது வேஷம் போட்டுக்கொண்டு ஆற்றங்கரையிலுள்ள சாதுக்களில் ஒருவனாகப் போய் உட்கார்ந்து கொள்கிறேன். ஒரு வேளை எனக்கே யோகம் அடித்து இளவரசியே எனக்கு மனைவியானாலும் ஆகலாம்' என்று நினைத்து அரண்மனையை விட்டு வெளியேறினான்.

மறுநாள் காலையில் திருடன் தான் திட்டமிட்டபடியே சன்னியாசிக் கோலத்தில் சாதுக்களில் ஒருவனாகப் போய் உட்கார்ந்துகொண்டான்.

சிறிதுநேரம் கடந்தது. அரண்மனையைச் சேர்ந்த அதிகாரிகள் ஆற்றங்கரைக்கு வந்தார்கள். அங்கே இருந்த சன்னியாசி ஒவ்வொருவரிடமும் மன்னரின் மகளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொண்

டார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கையை அந்தச் சாதுக்களில் ஒருவருமே ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. அரசனுடைய அதிகாரிகள் எவ்வளவோ மன்றாடினார்கள்; கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள்; பிரார்த்தித்தார்கள். என்றாலும் சாதுக்களில் ஒருவருமே சம்மதிக்கவில்லை. அனைவருமே மறுத்துவிட்டார்கள்.

தங்களுடைய கோரிக்கையைச் சாதுக்கள் ஏகமனதாக முற்றிலும் நிராகரித்தவுடன், கடைசியில் அதிகாரிகள் சாதுவேஷம் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த திருடனிடம் வந்தார்கள். அவனிடமும் தங்களுடைய கோரிக்கையை எடுத்துச் சொல்லிப் பிரார்த்தித்தார்கள். திருடன் பதில் பேசவில்லை; மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

அதிகாரிகள் அரண்மனைக்குத் திரும்பி, ''ஒரு வாலிப சன்னியாசி அங்கே இருக்கிறார். ஒருவேளை அவர் நமது கருத்துக்கு இணங்குவார் போலிருக்கிறது. அங்குள்ள மற்றச் சாதுக்கள் அனைவருமே நம் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார்கள்'' என்று அரசனிடம் செய்தியைத் தெரிவித்தார்கள்.

பிறகு அரசனே கபட சன்னியாசியிடம் நேரில் சென்றான். தன் மகளை ஏற்று அங்கீகரிக்கவேண்டும்; திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று மனப்பூர்வமாகவும் பணிவாகவும் அந்தக் கபட சன்னியாசியிடம் வேண்டினான்; பிரார்த்தித்தான்.

அரசனே நேரில் வந்ததையும், தன் முன்னால் பணிந்து நின்று உள்ளம் தோய்ந்து வேண்டியதை

யும் கண்டதும் திருடனின் மனம் மாறிவிட்டது. 'ஆகா! நான் சாது அல்ல! சாதுவின் உடையை மட்டுமே அணிந்து கொண்டிருக்கிறேன். அது காரணமாக அரசனே என்னைத் தேடி நேரில் வந்திருக்கிறான். என் முன்னால் பணிந்து நின்று வேண்டுகோள் விடுக்கிறான். நயந்து பிரார்த்திக்கிறான். நான் உண்மையிலேயே சாதுவாகி விட்டால் இதைவிடவும் உயர்ந்தவை எனக்கு எவ்வளவோ காத்திருக்கும் அல்லவா?'' என்ற சிந்தனைகள் திருடனின் உள்ளத்தில் உதயமாயின.

அந்தச் சிந்தனைகள் அவனது உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து அவனுடைய மனப்போக்கையே முற்றிலும் மாற்றி அமைத்துவிட்டன. போலி வேடம் பூண்டு மன்னன் மகளைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் அந்த நிமிடமே அவனது உள்ளத்தை விட்டு அகன்றது. அந்த நாள் முதற்கொண்டு தன் பழைய வாழ்க்கை முறைகளை அடியோடு நீக்கவும் உண்மையான சாதுவின் உயர்ந்த வாழ்க்கை வாழவும் அவன் கடுமையாக முயற்சி செய்தான். பிறகு அவன் திருமணமே செய்து கொள்ளவில்லை. அவனுடைய உண்மையான முயற்சி நல்ல பலனை விளைவித்தது. பிற்கால வாழ்க்கையில் அவன் அக்காலத்தில் விளங்கிய உயர்ந்த தபஸ்விகளில் ஒருவன் ஆனான். மகானின் நிலையை அடைந்த அவனை உலகமே பாராட்டித் தலை வணங்கியது.

போலி வேடம் சில சமயங்களில் எதிர்பாராத நன்மையைத் தருகிறது.

VII. சன்னியாசமும் வைராக்கியமும்

41. யாருக்காக அழச் சொல்கிறாய்!

"ஞானிகள் இறந்துபோனவர்களைக் குறித்தோ, இருந்து கொண்டிருப்பவர்களைக் குறித்தோ துன்பப் படமாட்டார்கள்." —கீதை 2–11

ஓர் ஊரிலே ஒரு குடியானவன் தன் மனைவி யுடன் வாழ்ந்து வந்தான். ஆனால் அவன் மற்றக் குடியானவர்களைப் போல இல்லாமல் பெரிய ஞானி யாகவும் இருந்தான்.

திருமணம் முடிந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு குடியானவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. நீண்ட நாள் கழித்துப் பிறந்த குழந்தையாதலால் அந்தக் குழந்தையின் மீது கணவனும் மனைவியும் உயிரையே வைத்திருந்தார்கள். அன்பையும் பாசத்தையும் பொழிந்து செல்லமாக வளர்த்தார்கள். 'குலம் தழைக்க வந்த கொழுந்து,' 'எங்கள் தங்கம்,' ஒரே இரத்தினம்' என்றெல்லாம் சொல்லி அந்தக் குழந் தையைக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

குடியானவன் நிறைந்த கடவுள் பக்தி கொண்ட வன்; ஊர்மக்களின் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமானவன்.

ஒரு நாள் வழக்கப்படி குடியானவன் தன் வயலில் வேலை செய்து கொண்டிருந்தான். அப் போது ஒருவன் திடுக்கிடும் செய்தியுடன் ஓடிவந்து, "வீட்டிலே உங்கள் குழந்தைக்குக் காலரா கண்டி

ருக்கிறது. உடனே விரைந்துபோய்க் குழந்தையைப் பாருங்கள்'' என்று குடியானவனிடம் சொன்ஞன்.

குடியானவன் வயலில் தான் செய்து கொண்டிருந்த வேலேகளேப் பாதியில் நிறுத்திவிட்டு வீட்டுக்குத் திரும்பிஞன். வீட்டில் அவன் பெற்ற மகனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. குடியானவன் தன்ஞல் ஆனவரையில் வைத்தியர்களேக் கொண்டு மருத்துவம் செய்து பார்த்தான். ஆஞலும் பயன் ஏற்படவில்லே. குழந்தை இறந்துவிட்டது.

வீட்டில் இருப்பவர்களும் உறவினர்களும் துன்பத்தால் இடிந்து போஞர்கள். சொல்லொண்ஞத துயரம் அவர்களே ஆட்கொண்டது. ஆஞல் குடியானவஞே மகன் இறந்துபோனதால் பாதிக்கப்படாதவஞகவே தென்பட்டான். அதுமட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் அவன், ''ஏன் வருத்தப்படுகிறீர்கள்? வருந்தி இப்போது என்ன ஆகப்போகிறது?'' என்ற ரீதியில் பேசி உண்மையை எடுத்துச் சொன்ஞன்.

பிறகு அவன், தான் பாதியில் நிறுத்திவிட்டு வந்திருந்த உழவு வேலேகளேக் கவனிக்க வயலுக்குப் போய்விட்டான். மாலே சாய்ந்தது. குடியானவன் வேலேகளே முடித்துக்கொண்டு வீடு திரும்பிஞன். அப்போது அவன் மனேவி மகனே நினேத்து அழுது கொண்டிருந்தாள். அவளது நெஞ்சு வெடித்துக் கொண்டிருந்தது. புத்திரபாசம் அவளேக் கசக்கிப் பிழிந்து புலம்பச் செய்தது. குடியானவஞே ஒன்றுமே நடக்காததைப் போல எப்போதும் போல அமைதியாக இருந்தான். இதைக் கண்ட அவனது மனேவி, 'நீ

கல்நெஞ்சுக்காரன். இதயமே இல்லாதவன்; மகன் இறந்ததற்காக ஒரே ஒரு முறைகூட நீ அழவில்லை, ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விடாமல் இருக்கிருயே'' என்று சொல்லி வருத்தமும் கோபமும் தொனிக்க அவனைக் கண்டபடி திட்டினுள்.

குடியானவன் அதற்குப் பதிலாகச் சாவகாசமாக உட்கார்ந்துகொண்டு அமைதியாகப் பதில் சொன்னுன். ''இதோ, பார். நான் அழாததற்குக் காரணம் இருக்கிறது. சொல்கிறேன் கேள். நேற்றைய இரவு நான் புதுமையான ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில் நான் ஓர் அரசனுக இருந்தேன். நமக்கு எட்டுக் குழந்தைகள் பிறந்தார்கள். நாம் அனைவரும் மகிழ்ச்சி நிறைந்த உல்லாசமான சுகவாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தோம். பிறகு தூக்கம் கலைந்து கனவு போய்விட்டது. விழிப்பு வந்தபோது அந்த எட்டுக் குழந்தைகளில் ஒருவரையும் காணும்; அரசாட்சியும் நமக்கில்லை என்பது தெரிந்தது. பிறகு அது ஒரு கனவு மட்டுமே என்பதும் புரிந்தது. இப்போது நான் ஒரு பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். அந்த நம் எட்டுக் குழந்தைகளை இழநததற்காக அழட்டுமா? அல்லது இப்போது நாம் பறிகொடுத்துவிட்ட இந்த ஒரு குழந்தையை இழந்ததற்காக அழட்டுமா?''

குடியானவன் பெரிய ஞானி. ஆகவேதான் அவன், கனவுநிலை எப்படிப் பொய்யோ, அப்படியே அதே அளவுக்கு விழிப்புநிலையாகிய இந்த உலக வாழ்க்கையும் பொய் என்பதை உணர்ந்திருந்தான்.

ஆத்மா ஒன்றுதான் நிலையானது. பரம்பொருள் தான், கடவுள்தான், உலகிலேயே நித்தியமாக உள்ள ஒரே வஸ்து.

இந்த உலகமும் உலக வாழ்க்கையும் உண்மையிலே ஒரு கனவு போன்றதே ஆகும். இதைப் புரிந்து கொண்டுவிட்ட உண்மை ஞானிக்கு, உலக ஆசா பாசங்களில் சாதாரண மக்களுக்கு நேரும் இன்ப துன்பங்கள் இருப்பதற்கு இடமில்லை.

கனவு, நனவு ஆகிய இரண்டு நிலைகளுக்கும் விவகாரத்தில் மட்டுமே மதிப்பு உண்டு. பாரமார்த்திக நிலையில் இந்த இரண்டு நிலைகளுமே எந்த மதிப்பையும் பெறுவதில்லை. எனவேதான், ''பிரம்ம சத்தியம், ஜகத்மித்யா'' என்று அத்வைத வேதாந்தம் அறுதியிட்டுக் கூறுகிறது.

கௌடபாதர் என்னும் மகான் மாண்டூக்கிய உபநிஷத்திற்கு 'காரிகை' என்னும் புகழ்பெற்ற விரிவுரையை எழுதியிருக்கிருர். அதில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ள இந்தக் கதை நல்ல விளக்கமாக அமைந்துள்ளது.

''மாயா மாத்ரம் இதம் த்வைதம், அத்வைதம் பரமார்த்தத:-இந்தத் துவைதமானது மாயையின் சொரூபம் மட்டுமே ஆகும். உண்மையில் அத்வைதமே இருக்கிறது'' என்று கௌடபாதர் தாம் இயற்றியுள்ள காரிகையில் திட்டவட்டமாகக் கூறுகிருர்.

விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகிய மூன்று நிலைகளிலும் நாம் உலக வாழ்க்கையை நடத்திக்

கொண்டிருக்கிறோம். ஆனல் இந்த மூன்று நிலைகளுமே உண்மை போலத் தோன்றினலும் பாரமார்த்திக நிலையில் உண்மை கிடையாது. ஏனென்ருல் இந்த மூன்று நிலைகளும் மாயையால் விளைந்தவை; மாயைமயமானவை; மாயையில் தோன்றியும் இருந்தும் முடிவடையவும் கூடியவை. இந்த உண்மையை சுய அனுபவமாக உணரும் பாக்கியம் பெற்ற ஞானியே, இவற்றுள் எதனுலும் பாதிக்கப்படாமல் சாட்சியாக மட்டுமே இருப்பான்; இருக்க முடியும்.

ஜால வித்தைக்காரன் ஒருவன் பலவிதமான மாய வித்தைகளைச் செய்து காட்டுகிருன். மக்கள் அதைப் பார்த்ததும் ரசிக்கிருர்கள். ஆனல் அதை அவர்கள் உண்மை என்று நம்புவதில்லை. ஜால வித்தைக்காரனின் அதிசயச் செயல்களில் உண்மை கிடையாது என்பதைத் தெரிந்துகொண்டே மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். ஆனல் குழந்தைகள் ஜால வித்தைகளை உண்மை என்று நம்பிவிடக் கூடும்.

அறிவு முதிர்ச்சி பெற்றவர்களுக்கு ஜாலவித்தை பொய் என்பது தெரியும். அதைப் போலவே ஞானிகளும் இந்த உலக விவகாரங்களைப் பொய் என்று ஐயம் திரிபற உணர்ந்திருக்கிருர்கள். அறிவு முதிர்ச்சி பெருத குழந்தைகளைப் போல, அஞ்ஞானம் என்னும் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ள இலெளகிக மக்கள் உலகை உண்மையென்றே நம்புகிருர்கள். அதனல் அடுக்கடுக்கான ஆயிரக்கணக்கான துன்பங்

களைத் தங்களுக்குத் தாங்களே சிருஷ்டித்துக் கொள்கிருர்கள். ஞானி ஒருவருக்கும் இலெளகிக மனிதன் ஒருவனுக்கும் உள்ள வேறுபாடு கடல் அளவு போன்றது. ஏனென்ருல் வாழ்க்கையைப் புரிந்து கொள்வதிலும் அதற்கு ஏற்றவாறு நடந்துகொள்வதிலும் அடிப்படையிலேயே இருவரும் வேறுபட்டு விடுகிருர்கள்.

'ஞானி ஒருவர், இந்த உலகைக் கனவைப்போலக் கருதுகிருரே, அதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா?' என்று கேட்கலாம். நாம் கனவு காணும் போது அதை உண்மை என்றே முட்டாள்தனமாக நம்புகிருேமே, அதில் மட்டும் ஏதாவது நியாயம் இருக்கிறதா? ஆதிசங்கரர் இப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பின்வருமாறு விடையைச் சொல்கிருர்:—

விழிப்பு நிலையில் கனவு பொய்யாகிறது. கனவு நிலையில் விழிப்பு உலகமே இல்லை. ஆழ்ந்த உறக்கத்தில் இரண்டும் இல்லை. உறக்கமும் மற்ற இரண்டு நிலைகளில் இல்லை.

ஆகையால் மூன்று குணங்களால் சிருஷ்டிக்கப்பட்ட மூன்று நிலைகளும் பொய்யே ஆகின்றன. என்ருலும் அவற்றுக்குப் பின்னுல் உள்ள (பரம்பொருளாகிய) சாட்சியோ, குணங்களைக் கடந்து, நித்தியமாய் ஏகமாய் அறிவு வடிவாகிய மெய்ப்பொருளாக விளங்குகிறது.

நாம் நாள்தோறும் கண்டு அனுபவிக்கும் உலகம் விவகாரத்தில் உண்மையாகத் தோன்றினுலும்,

அடுத்த நொடியில் பொய்த்துப் போவதால் அது இருப்பில்லாத கனவு உலகம் போன்றதே ஆகிறது.

உலக வாழ்க்கை நடக்கும்போது பொருள்களும் நிகழ்ச்சிகளும் உண்மை போலவே தோன்றுகின்றன. அவை நடைபெறுகிற காலத்தில் அவை உண்மைகளாகவும் இருக்கலாம். ஏனென்ருல் தாற்காலிக உண்மைகள் என்னும் பொய்யும் மெய்யும் கலந்த நிலையில் அவை இருக்கின்றன. ஆனுல் அவையே என்றென்றும் உள்ள நித்திய உண்மைகள் அல்ல. நித்திய உண்மை ஒன்றுதான்; அதுவே பரப்பிரம்மம்.

பிரம்மத்தை அனுபூதியின் வாயிலாக நேருக்கு நேரே சுயமாக உணர்ந்தவனே பிரம்மஞானி. அவனும் உலகில் வாழ்கிருன். ஆனுல் அந்த வாழ்க்கையை அவன் தன் பழவினைகளைக் கணக்கு தீர்த்து முடித்துக்கொண்டு போகும் ஓர் உடல் யாத்திரையாக மட்டுமே செய்கிருன். உடல் வாழ்க்கை முற்றுப் பெற்ருன பிறகோ, பிரம்மத்துடன் ஒன்றுபட்டுத் துன்பத்தின் சாயலும் இல்லாததும், பேரின்பம் மட்டுமே நிறைந்ததுமான, அழியாத அமரநிலையைப் பெறுகிருன்.

அவன் வாழும் உலக வாழ்க்கையுங்கூட மற்றவர் வாழும் உலக வாழ்விலிருந்து எல்லாவிதத்திலும் வேறுபடுகிறது. எனவே ஆதிசங்கரர் தமது உபதேச ஸாஹஸ்ரீயில் பின்வருமாறு குறிப்பிட்டார்; ''எவன் தூக்கத்தில் இருப்பதைப் போலவே, விழித்திருக்கும் போதும் யாதொன்றையும் காண

வில்லையோ, இரண்டற்ற பரம்பொருளைப் பார்த்துக் கொண்டிருப்பதால், பன்மையான பல பொருள் களைப் பார்த்தும் பார்க்கவில்லையோ, எவன் காரியங் களைச் செய்து கொண்டிருக்கும்போதும் செய்யா மலே இருக்கிருனே, அவனே இங்கு ஆத்மாவைத் தெரிந்து கொண்டவன், மற்றவர்கள் அல்ல என்பது உறுதி.''

42. வாலிப சன்னியாசி

வாலிப சன்னியாசி ஒருவர் இருந்தார். அவர் மிகவும் சிறு பையனுக இருந்தபோதே சன்னியாச வாழ்க்கையை மேற்கொண்டு உலக மக்களின் தொடர்பிலிருந்து விலகிப்போயிருந்தார். ஆகவே அவருக்கு உலக அனுபவமே மிகக் குறைவாகத்தான் இருந்தது. ஒரு முறை அந்தச் சன்னியாசி பிட்சை யெடுப்பதற்காக ஒரு வீட்டிற்கு சென்ருர்.

ஓர் இளம் பெண் அவருக்குப் பிட்சையளிப்ப தற்காக வீட்டின் உள்ளேயிருந்து வெளியே வந்தாள். அவளுடைய ஸ்தனங்களைப் பார்த்த இந்தப் பால சன்னியாசி, அவளுடைய மார்பில் கட்டி ஏதாவது புறப்பட்டிருக்கிறதா என்று கேட்டார். அப் போது அந்தப் பெண்ணின் தாய் அங்கே வந்து, ''குழந்தாய், இல்லையப்பா! அவளுக்கு நீ நினைப் பதைப் போலக் கட்டி எதுவும் புறப்படவில்லை. கூடிய விரைவில் அவளுக்கு குழந்தை பிறக்கப் போகிறது. அந்தக் குழந்தைக்குப் பால்கொடுப்பதற் காக இறைவன் முன் கூட்டியே இந்த இரண்டு

ஸ்தனங்களைப் படைத்திருக்கிறான். குழந்தை பிறந்ததும் அந்த ஸ்தனங்களிலிருந்து பால் குடிக்கும்'' என்று பதில் சொன்னாள்.

இந்தப் பதிலை அந்த இளம் சன்னியாசி கேட்டாரோ இல்லையோ, உடனே அவர், ''நான் இனிமேல் பிட்சைக்காகப் போகமாட்டேன். என்னை யார் படைத்தாரோ அந்த இறைவனே என் உணவு விவகாரங்களையும் கவனித்துக் கொள்வார்'' என்று சொல்லி அங்கிருந்து போய்விட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அருளியுள்ள இந்தக் கதை ஒப்பற்ற ஓர் உண்மையை எளிய முறையில் விளக்கிக் காட்டுகிறது.

உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் தந்தையாக இருப்பவர் கடவுள். அவரே எல்லா உயிர்களையும் பரிபாலிக்கிறார். காத்து இரட்சிக்கிறார். இந்த உண்மை தூய உள்ளங்களில் பசுமரத்தாணி போல எளிதாகச் சென்று பாய்ந்து தங்குகிறது. கேட்ட உண்மைகளை அப்படியே அவர்கள் கிரகித்து கொள்ளவும் வாழ்க்கையில் உடனே கடைப்பிடிக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

கடவுள் ஒருவர்தாம் கர்த்தா. உன்னைக் காத்து இரட்சிக்கும் பொறுப்பையும் அவர்தாம் கவனித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே அஞ்ஞானத்தினால் பைத்தியக்காரத்தனமாக, 'நாளைக்கு இதைச் செய்வேன், அதைச் செய்வேன்' என்று இலௌகிக எண்ணங்களுடன் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்காதே. நீ கடவுளுடைய பொறுப்பில் இருக்கிறாய் என்பதை

உணர்ந்து முற்றிலும் அவரிடமே உன்னை ஒப்படைத்துவிடு. சதாசர்வகாலமும் கடவுளின் நினைவிலே உன்னை வைத்துக்கொள். உன் உலக விவகாரங்கள் என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்றெல்லாம் நீ அச்சம் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. நீ உன்னை உண்மையிலேயே கடவுளிடம் ஒப்படைத்து விட்டால், உனக்கு எதை, எப்போது செய்ய வேண்டும் என்பதை அவரே பொறுப்பேற்றுக் கவனித்துக்கொள்வார். கடவுள் ராஜ்யம் தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே தலைக்கு மிஞ்சிய ஆபத்து ஒன்றுமே உனக்கு ஏற்பட வழியில்லை.

43. உயர்ந்த உள்ளங்கள்

ஒரு முறை கணவனும் மனைவியுமான இருவர் உலக வாழ்க்கையைத் துறந்து சன்னியாசம் ஏற்றுக் கொண்டார்கள். இருவரும் சேர்ந்து புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்கத் தீர்த்த யாத்திரை செய்தனர்.

ஒரு நாள் யாத்திரையின்போது, அவர்கள் இருவரும் ஒரு பாதை வழியாகச் சென்று கொண்டிருந்தனர். அப்போது கணவன் சற்று முன்னால் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுடைய கண்களுக்குப் பாதையில் ஒரு வைரக்கல் விழுந்து கிடப்பது தென்பட்டது. அதைக் கண்டதும், தன் மனைவி இந்த வைரக்கல்லைப் பார்த்தால், ஒருவேளை எங்கே அதன்மீது ஆசைகொண்டு தன் ஆன்மிக

பலத்தை இழந்து விடுவாளோ என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது.

உடனே அவன், அந்த வைரத்தைத் தன் மனைவி அங்கு வருவதற்கு முன்பாகப் புதைத்துவிட நினைத்து அவசர அவசரமாகத் தரையைத் தோண்டினான்!

மண்ணை அவன் அப்படித் தோண்டிக்கொண்டிருந்த வேளையில், அவனது மனைவியே அங்கு வந்து விட்டாள். நெருங்கி வந்ததும் அவள், ''என்ன விசேஷம்? என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று அவனை விசாரித்தாள். கணவன் அவளுக்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. ஏதோ சாக்குப் போக்காக மறைமுகமாகப் பதில் சொல்லி மழுப்பினான்.

என்றாலும் அவளுடைய கண்ணில் அந்த வைரம் தட்டுப்பட்டுவிட்டது! அதோடு கணவன் எத்தகைய எண்ணத்துடன் வைரத்தை மறைக்க முயற்சி செய்கிறான் என்பதையும் புரிந்துகொண்டு, ''சுவாமி! வைரத்திற்கும் மண்ணாங்கட்டிக்கும் இன்னமும் உங்களுக்கு வித்தியாசம் தெரிவதாக இருந்தால், பிறகு நீங்கள் ஏன் உலகத்தைத் துறந்து வந்தீர்கள்?'' என்று அவன் மனதில் படும்படியாகக் கேட்டாள்.

பெரிய சக்தி வாய்ந்த கடவுள் காட்சிக்கு முன் இந்த அற்ப உலகப் பொருள்களின் கவர்ச்சி எம்மாத்திரம்?

இறைவனை அடைந்தவர்களுக்கு இழிவான பயனற்ற உலகபோகங்கள் யாவும் சத்தில்லாத சக்கையைப் போலிருக்கும்.

உலகப் பற்றுள்ளவர்கள் உபயோகமற்ற பொருள்களைத் தேடுபவர்களாவார்கள். உலகப் பற்றற்ற தூய ஆத்மாக்கள் ஈசுவரனை நம்பி அவனையே சதா சர்வ காலமும் சிந்தித்திருப்பார்கள்.

44. இரண்டு குடியானவர்கள்

தீவிரமான வைராக்கியம் ஒருவனுக்கு இருந்தால்தான், கடவுளுடைய தரிசனம் கிடைக்கும். அப்படிப்பட்டவனால் உலகபந்தங்களிலிருந்து காம காஞ்சன ஆசைகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளவும் முடியும். தீவிர வைராக்கியம் இல்லாதவன், 'சரி, சரி; எல்லாம் காலம் வரும் போது நடக்கும். நான் இப்போது பகவானுடைய நாமத்தை மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் போதும்' என்று சோம்பி இருப்பான்.

''செய்யலாம் என்றுதான் இருக்கிறேன். இதோ செய்யப் போகிறேன். இப்போது ஆரம்பிக்கப் போகிறேன்'' என்று சொல்லிக்கொண்டு கால தாமதம் செய்வது தீவிர வைராக்கியத்தைச் சேர்ந்தது ஆகாது. இப்படிப்பட்ட வைராக்கியம் மந்த வைராக்கியம் ஆகும். இதை வைராக்கியம் என்று சொல்வதே பொருந்தாது.

தீவிர வைராக்கியம் உள்ளவனின் ஆன்மா கடவுளுக்காகவே ஏங்கியிருக்கும் இறைவனின் புனிதமான நினைவிலேயே தோய்ந்து போயிருக்கும். தாய் ஒருத்தி தன் கைக்குழந்தையின் நலனிலேயே

கருத்தூன்றி இருப்பதைப் போலவும், குழந்தைக்காக அவள் துடிதுடித்து ஏங்கித் தவிதவிப்பதைப் போலவும், தீவிர வைராக்கியம் கொண்டவன் ஆண்டவனை அடைந்துவிட வேண்டும் என்ற பரபரப்பும் ஆவலும் கொண்டவனாக இருப்பான். அவனுக்கு இறைவனைக் காண வேண்டும் என்பதைத் தவிர வேறு எதுவுமே வேண்டியிருக்காது. அவன் எதையுமே தேடிக்கொண்டும் இருக்க மாட்டான். அவனுக்கு இல்லற வாழ்க்கையே ஓர் ஆழமான பாழுங்கிணற்றைப் போலத் தென்படும். 'அதில் வீழ்ந்து மூழ்கிப்போய்விடுவோமோ!' என்பதைப் போன்ற எண்ணங்கள் அவனைச் சித்திரவதை செய்யும். அப்படிப்பட்ட ஓர் அவலநிலை தனக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தன்னால் ஆனவரையில் அவன் மிகமிக எச்சரிக்கையுடன் இருப்பான். உற்றார் உறவினரை எல்லாம் கொடிய விஷப் பாம்புகளைப் போலவே அவன் கருதுவான். அவர்களை விட்டு ஒரேயடியாக விலகி ஓடிவிட வேண்டும் என்று முழுமனதோடு விரும்புவான். விரைவில் அவன் அவர்களைவிட்டு விலகியே ஓடிப்போயும் விடுகிறான். மந்த வைராக்கியம் கொண்ட சாதாரண மக்களைப் போல, ''முதலில் குடும்ப விவகாரங்களை ஒருவகையாக ஒழுங்கு படுத்துகிறேன். முதலில் என் குடும்பத்திற்காக நான் ஏதாவது செய்ய வேண்டியிருக்கிறது. அவற்றைச் செய்து முடித்தான பிறகு, இறைவனின் தியானத்தில் ஈடுபடப் போகிறேன்'' என்று தீவிர வைராக்கியம் கொண்டவன் சொல்லிக் கொண்டிருக்க

மாட்டான். இத்தகைய சிந்தனேயே அவனுக்கு வராது. அதற்கு அவனுக்குப் பொழுதும் இருக்காது. தீவிர வைராக்கியம் கொண்டவனுக்குத்தான் அளவில்லாத அளவில் மன உறுதி இருக்கும். அவன்தான் இலட்சியமாகிய கடவுளே அடைவான்; அடைய முடியும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், 'தீவிர வைராக்கியம் வேண்டும், மந்த வைராக்கியம் கூடாது' என்று பல தருணங்களில் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறியுள்ளார். அதை விளக்குவதற்காக அவர் பின்வரும் கதையைக் கூறுகிருர்:

ஒரு காலத்திலே ஒரு தேசத்தின் ஒரு பகுதியில் மழை இல்லாமற் போய்விட்டது. அதன் விளேவாக மக்கள் பஞ்சத்தில் வாடினர்கள். குடியானவர்கள் நீண்ட வாய்க்கால்களே வெட்டினர். அவற்றின் மூலமாக வெகு தூரத்திலிருந்து தங்கள் விளேநிலங்களுக்குத் தண்ணீர் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டனர்.

குடியானவர்களில் ஒருவன் திடமான மனஉறுதி கொண்டவனுக இருந்தான். அவன், 'என் வாய்க்காலே ஆற்றுடன் சேர்க்கும்வரையிலும் தொடர்ந்து வெட்டிக்கொண்டே போவேன்' என்று தனக்குத் தானே ஒரு சபதம் எடுத்துக் கொண்டான். வரிந்து கட்டிக்கொண்டு கால்வாயை வெட்டும் பணியில் முழு மூச்சுடன் இறங்கினுன்.

வழக்கமாக அவன் குளிக்கும் நேரம் வந்தது. அப்பொழுதும் வேலே மும்முரத்தில் அவன் ஆழ்ந்து

போயிருந்தான். நேரம் கடந்து கொண்டிருந்தது. ஆதலால் குடியானவனின் மனைவி தன் மகளிடம் எண்ணெயைக் கொடுத்து, குடியானவன் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கு அனுப்பி வைத்தாள். மகள் தந்தையிடம் சென்று, ''அப்பா, உச்சிப்பொழுது கடந்து ஏற்கனவே நேரம் ஆகி விட்டது. இந்த எண்ணெயைத் தேய்த்துக்கொண்டு குளிக்க வா'' என்று சொன்னாள். மகள் சொன்னதைக் குடியானவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ''போ, போ. இன்னும் செய்ய வேண்டிய வேலை எவ்வளவோ பாக்கி இருக்கிறது'' என்று இடித்தாற்போல் பதில் சொல்லி மகளைத் திருப்பி அனுப்பிவிட்டான்.

உச்சிவேளை கழிந்து, மணி இரண்டு ஆயிற்று. அப்பொழுதும் குடியானவன் எலும்பு ஒடிய வேலை செய்து கொண்டிருந்தான். குளிப்பதைப் பற்றிய நினைவு அவனுக்கு இல்லை. சாப்பாட்டைப் பற்றிய நினைவும் அவனுக்கு இல்லை.

கடைசியில் அவனது மனைவியே நேராக அங்கு வந்தாள். ''ஏன் நீங்கள் இன்னும் குளிக்காமல் இருக்கிறீர்கள்? சாதங்கூட ஆறிப்போய்விட்டது. எப்போதும் நீங்கள் இப்படித்தான் பிடிவாதம் செய்கிறீர்கள். எதையுமே அளவுக்கு மீறிச் செய்வது உங்கள் பழக்கமாகிவிட்டது. வேலையை இப்படிப் போய்ப் பிரமாதப்படுத்துகிறீர்களே! செய்த வேலை போதும். இப்போதாவது வாருங்கள். மீதி வேலையை நாளைக்குச் செய்யலாம். அல்லது

வேண்டுமானுல் சாப்பிட்டுவிட்டு வந்து பிறகு செய்துகொள்ளுங்கள்'' என்று சொன்னுள்.

அவ்வளவுதான்! குடியானவனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. உடனே அவன், அவளை வெட்டப்போவதைப் போல மண்வெட்டியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு அவள் நின்ற இடத்திற்கு ஓடினுன். ''புத்தி கெட்டவளே! உனக்கு ஏதாவது மூளை கீளை இருக்கிறதா? பயிர்கள் வாடிப்போவதை நீ பார்க்கவில்லையா? மழை இல்லாமல் பயிர்கள் செத்துவிடும்போல் இருக்கிறது! இப்படி இருந்தால் குழந்தைகள் எதைச் சாப்பிடும்? நாளைக்கு நீங்கள் அனைவருமே பட்டினி கிடந்து சாக வேண்டிய நிலை வந்துவிடாதா? இன்றைக்கு வயலுக்குத் தண்ணீர் கொண்டுவரும் வரையிலும் குளிப்பதையோ சாப்பிடுவதையோ நினைத்தும் பார்ப்பதில்லை என்று நான் சபதம் எடுத்திருக்கிறேன். இங்கிருந்து ஓடிப்போ! இன்றைக்கு நம் வயலுக்கு எந்நேரமானுலும் எப்படியாவது தண்ணீர் வந்தாக வேண்டும். பிறகுதான் மற்ற விஷயங்களைப் பார்ப்பேன்'' என்று சப்தம் போட்டுக் கண்டபடி திட்டி அவளை அங்கிருந்தே விரட்டியோட்டி விட்டான். குடியானவன் இப்படிப் பொரிந்து தள்ளி எரிமலையாகவே வெடிப்பான் என்று அவளே எதிர்பார்க்கவில்லை. கணவனின் மன நிலையைக் கண்ட அவள் பயந்து ஓடியே போய்விட்டாள்.

குடியானவன் ஒரு நாள் முழுவதும் முதுகு வலிக்கப் பாடுபட்டான். உடலெல்லாம் வேர்வை

ஆறுகப் பெருக, பகீரதப் பிரயத்தனம் செய்தான். அன்றையதினம் பொழுது சாய்ந்து இருள்சூழ இருந்த சமயத்தில், தான் வெட்டிய கால்வாயை அவன் நதியோடு இணைத்துவிட்டான். பிறகு ஆனந்தமாகக் கீழே உட்கார்ந்து கொண்டு, தன் வயலுக்குள் நீர் சளசளவென்ற சத்தத்துடன் பாய் வதைக் கவனித்தான். அவன் உள்ளம் அமைதி பெற்றது. மனம் மகிழ்ச்சியால் துள்ளியது.

பிறகு நிறைந்த உள்ளத்துடன் அவன் வீடு திரும்பினுன். மனைவியை அழைத்து, ''ஏலே! இந்தா, இப்போது எனக்குக் குளிக்கக் கொஞ்சம் எண்ணெய் எடுத்து வா. புகை குடிப்பதற்கு ஹுக்காவையும் தயாரித்து வை'' என்று சொன்னுன். பிறகு கவலை இல்லாமல் குளித்தான். திருப்தியாகச் சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போனுன். நெடுநேரம் அயர்ந்து நன்ருகக் குறட்டைவிட்டுச் சுகமாகத் தூங்கினுன்.

இந்தக் குடியானவன் காட்டிய மன உறுதி தான் தீவிர வைராக்கியத்திற்கு நல்ல உதாரணம். உலகிலே நாம் சேர்க்கக்கூடிய ஒரே செல்வம், சேர்க்க வேண்டிய மிக பெரிய செல்வம் இப்படிப் பட்ட முதல் தரமான தீவிர வைராக்கியம்தான். ஏனென்ருல் அது இருந்தால்தானே நாம் கடவுளை அடைய முடியும்?

இனி, வேறு ஒரு குடியானவனும் இருந்தான். அவனும் தன் வாய்க்காலுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக வாய்க்கால் வெட்டிக்கொண்டிருந் தான். அப்போது அவனுடைய மனைவியும் வயலுக்கு

வந்தாள். ''நேரமாகிவிட்டது. வேலை செய்தது போதும். இப்போது வீட்டுக்கு வந்துவிடுங்கள். அதிகமாக அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை'' என்று சொன்னாள்.

இந்த குடியானவன் அவளை எதிர்த்து வாயாடவில்லை. தடை ஒன்றும் சொல்லவில்லை. அவள் வந்து கூப்பிட வேண்டும் என்பதற்காகவே காத்திருந்தவனைப் போல, மண்வெட்டியைத் தூக்கித் தோளிலே போட்டுக்கொண்டான். அவளிடம், ''அன்பே, சரி! நீயே வந்து கூப்பிடும்போது நான் என்ன சொல்ல இருக்கிறது? நான் வரத்தான் வேண்டும். இதோ வந்துவிட்டேன்'' என்று சொல்லிக்கொண்டே அவளைத் தொடர்ந்து போய் விட்டான்.

அவனால் தன் வயலுக்கு உரிய காலத்தில் தண்ணீர் கொண்டு வரவே முடியவில்லை. இது தான் தாமதமும் சோம்பலும் கலந்த மந்த வைராக்கியத்திற்கு உதாரணம்.

எப்படி, எடுத்த காரியத்தை முடிக்கும் திடமான மன உறுதி இல்லாவிட்டால் குடியானவனால் விளை நிலத்திற்கு நீர் பாய்ச்ச முடியாதோ, அப்படியே தீவிரமான வைராக்கியம் ஒருவனுக்கு இல்லாமற் போனால் இறைவனின் தரிசனமாகிய மகோன்னத நிலையை அவனால் அடையவே முடியாது.

பிரசவ வைராக்கியம், மயான வைராக்கியம் போன்ற வைராக்கியங்களும் உண்டு. ஆனால்

அப்படிப்பட்ட வைராக்கியங்கள் உறுதியில்லாத படகுகளைப் போன்றவை. அவற்றைக் கொண்டு பிறவியாகிய கடலைக் கடந்து பரம்பொருள் என்னும் வெகு தொலைவில் உள்ள துறைமுகத்தை அடையவே முடியாது. இந்த வகையைச் சேர்ந்த வைராக்கியங்கள் ஆன்மிக வாழ்க்கைக்குப் பயன்படா; கடவுளைக் காட்டமாட்டா.

தீவிரமான வைராக்கியம் ஒருவனுக்கு அவசியம் இருக்கவேண்டும். அது இல்லாமற்போனால் வாழ்க்கையில் பெரிதாக எதையுமே ஒருவன் சாதிக்க முடியாது. வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு அப்படி இப்படித் திரும்பாமல் நேராகத் தன் இலட்சியத்தில் சென்று பாய்கிறது அதை போலவே தீவிர வைராக்கியம் ஒருவனை விரைவில் கடவுளின் சன்னதிக்கு அழைத்துச் செல்கிறது.

45. சன்னியாசம் ஆமை வேகத்தில் வருவதில்லை

ஒரு மனிதனுக்கு எப்படி வைராக்கியம் வருகிறது? எப்படிச் சன்னியாசம் வருகிறது?

ஒரு நாள் ஒருவனிடம் அவனுடைய மனைவி வந்து, ''அன்பரே! எனக்கு என் சகோதரனைப் பற்றி மிகவும் கவலையாக இருக்கிறது. கடந்த ஒரு வாரமாக அவன் சன்னியாசியாகிவிடும் எண்ணத்தில் இருக்கிறான். அப்படிச் சன்னியாசம் வாங்கிக் கொள்ளும் எண்ணத்துடன் அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் முயற்சிகளையும் செய்து

கொண்டிருக்கிறான். தன் ஆசைகளையும் தேவைகளையும் அவன் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு வருகிறான்'' என்று சொன்னாள்.

இதைக் கேட்ட அவளுடைய கணவன், ''அன்பே உன் சகோதரனைக் குறித்து நீ கொஞ்சங் கூடக் கவலைப்படாதே. அவன் ஒரு நாளும் சன்னியாசியாகவே மாட்டான். அப்படி அவனைப் போல யாருமே சன்னியாசம் பெற்றதில்லை'' என்று பதில் சொன்னான்.

மனைவி, ''உண்மையாகவா? அப்படியானால் ஒருவர் எப்படித்தான் சன்னியாசியாவார்?'' என்று கேட்டாள்.

உடனே கணவன், ''இப்படித்தான்'' என்று சொல்லிக்கொண்டே தான் உடுத்தி இருந்த துணியைப் பல துண்டுகளாகக் கிழித்து, அவற்றில் ஒன்றை எடுத்து இடுப்பில் சுற்றிக்கொண்டே, ''இந்த நிமிடம் முதல் நீயும் பெண்குலம் முழுவதிலும் உள்ள அத்தனை பெண்களும் என் தாய்க்குச் சமமானவர்கள்'' என்று சொல்லிக் கொண்டே வீட்டை விட்டு வெளியேறினான்.

அப்படிப் போனவன் போனவன்தான்; அதன் பிறகு அவன் வீட்டுக்குத் திரும்பவேயில்லை.

46. மீனவன் சன்னியாசியானான்!

ஒரு பணக்காரனுக்கு ஒரு குளம் சொந்தமாக இருந்தது. ஒரு நாள் இரவு மீனவன் ஒருவன் அந்தத் தோட்டத்திற்குள் ஒருவரும் அறியாதபடி இரகசியமாக நுழைந்தான். அங்குள்ள குளத்தில் வலை வீசித் திருட்டுத்தனமாக மீன் பிடித்துக் கொண்டிருந்தான்.

பணக்காரனுக்குச் செய்தி தெரிய வந்தது. அவன் தன் வேலைக்காரர்களுடன் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு திருடனைப் பிடிப்பதற்காகத் தோட்டத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டான். தப்புவதற்கு வழி ஒன்றும் இல்லாததைக் கண்ட மீனவன், தன் உடல் முழுவதும் சாம்பலைப் பூசிக் கொண்டு ஒரு மரத்தடியில் சாதுவைப் போல உட்கார்ந்துவிட்டான்.

ஆதலால் திருடனைத் தேடிவந்த வேலைக்காரர்களுக்குத் தோட்டம் முழுவதும் தேடிப் பார்த்ததும் திருடன் எவனும் அகப்படவில்லை. ஒருமரத்தடியில் உடல் முழுவதும் சாம்பல் பூசிய சன்னியாசி ஒருவர் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருப்பதைத்தான் வேலைக்காரர்கள் கண்டார்கள்.

மறுநாள் காலையில், அந்தப் பணக்காரனுடைய தோட்டத்திற்கு ஒரு பெரிய மகான் எழுந்தருளியிருக்கிறார் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவியது.

ஆகவே, நூற்றுக்கணக்கான மக்கள் பழங்கள், மலர்கள், பட்சணங்கள் ஆகியவற்றைக் காணிக்கை

யாக எடுத்துக் கொண்டு திரள்திரளாகச் சாது வைத் தரிசிப்பதற்காக வர ஆரம்பித்தார்கள். ஏராளமான காணிக்கை பொருள்களைச் சாதுவின் திருவடிகளில் வைத்து வணங்கினர்கள். சாதுவின் முன்னல் பொன், வெள்ளி நகைகள் குவியத் தொடங்கின.

அப்பொழுது சாதுவின் வேடத்தில் இருந்த மீனவன், ''ஆகா, இதென்ன ஆச்சரியம்? நானே உண்மையான சன்னியாசி இல்லை. அப்படியிருந்தும் மக்கள் இவ்வளவு பெரிய மரியாதைகளைக் காட்டு கிறர்கள்! நான் உண்மையிலேயே சன்னியாசியாக இருந்தால், எனக்குக் கடவுளின் தரிசனமே கிடைப் பது நிச்சயம். நிச்சயமாக எனக்குக் கடவுளின் தரிசனம் கிடைக்கும். அதில் சந்தேகத்திற்கே இட மில்லை'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

இவ்விதம் மீனவன் மேற்கொண்ட வெறும் போலிவேடமே அவனுடைய உள்ளத்தில் உண்மை யான ஆன்மிக விழிப்பை ஏற்படுத்திவிட்டது.

''திருந்திய வாழ்க்கை மருந்தினும் இனிது''

47. சித்திகள் கடவுளைக் காட்டமாட்டா

சாது ஒருவர் இருந்தார். அவர் வாழ்ந்த தவ வாழ்க்கை காரணமாகப் பல சித்திகள் அவருக்குக் கிடைத்தன. சித்திகளைப் பெற்றுவிட்டதனல் அவ ருக்கு எப்படியோ தற்பெருமை வந்துவிட்டது!

ஆனல் அந்த சாது இயல்பிலேயே நல்லவராகவும், உண்மையான தபஸ்வியாகவும் இருந்தார்.

பல அரிய நற்குணங்கள் அவரிடம் இருந்ததால் அந்தச் சாதுவின் தற்பெருமையைப் போக்கி அவரை நல்வழிப்படுத்த இறைவன் திருவுள்ளம் கொண்டார். ஆதலால் சர்வேசுவரன் ஒரு சன்னியாசியின் வடிவில் சாது இருந்த இடத்திற்குச் சென்றார். அவரிடம், ''சுவாமி! தாங்கள் அனேகம் சித்திகளைப் பெற்றிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உங்களைக் காண வந்தேன்'' என்று சொன்னர்.

சாது, தன்னைக் காண வந்த சன்னியாசியை மரியாதையுடன் வரவேற்று உட்காரும்படி கேட்டுக் கொண்டார்.

அப்போது அவர்கள் இருந்த வழியாக ஒரு யானை போய்க்கொண்டிருந்தது.

அதைப் பார்த்த சன்னியாசி சாதுவிடம், ''சுவாமி! தாங்கள் விரும்பினல் இந்த யானையைக் கொல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

அதற்குச் சாது, ''ஓ, அதை என்னுல் செய்ய முடியும்'' என்று பதில் சொல்லிவிட்டு, ஒரு பிடி மண்ணைக் கையில் எடுத்தார். பிறகு அந்த மண்ணை மந்திரித்து யானையை நோக்கி வீசினர். உடனே அந்த யானை வேதனைப்பட்டுத் துடிதுடித்துக் கீழே விழுந்தது. அந்த நிமிடமே அதன் உயிர் போய் விட்டது.

இதைச் சன்னியாசி கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். ''ஆகா! தங்களுடைய சக்திதான்

எவ்வளவு அபாரமானது! எவ்வளவு சுலபமாகத் தாங்கள் யானையைக் கொன்றுவிட்டீர்கள்,'' என்று சொல்லிப் பாராட்டினார்.

இப்படி சன்னியாசி புகழ்ந்ததும் சாதுவுக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. அவருக்குப் பெருமை தாங்க முடியவில்லை. மகிழ்ச்சியும் பெருமையும் பொங்க அவர் புன்சிரிப்புச் சிரித்தார்.

பிறகு சன்னியாசி மறுபடியும் கேட்டார்: ''நல்லது. இறந்துபோன யானையை மீண்டும் பிழைக்கச் செய்ய முடியுமா?''

அதற்கும் நமது சாது உடனே, ''ஆமாம், அதையும் என்னால் செய்ய முடியும்'' என்று பதில் சொன்னார். முன்பு போலவே ஒரு பிடி மண்ணைக் கையில் எடுத்து மந்திரித்தார். பிறகு அதை விழுந்து கிடந்த யானையின் மேலே வீசினார்.

மறுகணமே யானை அசைந்து கொடுத்தது; உயிர் பெற்று எழுந்தது.

இதை எல்லாம் பார்த்த சன்னியாசி கேட்டார்; ''சுவாமி! தங்களுடைய சக்தி உண்மையிலேயே அபாரமானதுதான். அதில் ஒன்றும் சந்தேகமில்லை, ஆனால் உங்களை நான் ஒரு கேள்வி மட்டும் கேட்க விரும்புகிறேன். இப்போது தாங்கள் யானையைக் கொன்றீர்கள், பிறகு மீண்டும் அதை உயிர் பிழைக்கச் செய்தீர்கள். என்றாலும் இதனால் தங்களுக்குக் கிடைத்த நன்மை என்ன? அதன் மூலம் தங்களுக்கு எப்படிப்பட்ட ஆன்மீக முன்னேற்றம் கிடைத்தது? பகவானை அடைய இது உதவி செய்ததா?'' என்று கேட்டுவிட்டு அங்கிருந்து மறைந்து போனார்.

48. முன்னேறிச் செல்!

ஓர் ஏழை விறகுவெட்டி இருந்தான். அருகில் இருந்த காட்டுக்கு நாள்தோறும் சென்று அவன் விறகுவெட்டுவது வழக்கம். அதனால் கிடைக்கக் கூடிய சொற்ப வருவாயில் சிரமத்தோடு அவன் வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் வழக்கப்படி அவன் விறகுகளை வெட்டிக் கொண்டிருந்தான். அப்போது தற்செயலாக அந்த வழியே வந்த பிரம்மசாரி ஒருவர் அவனைப் பார்த்தார். விறகு வெட்டியை நோக்கி அவர், ''அப்பா! மேலும் நீ முன்னேறிச் செல்'' என்று சொல்லிவிட்டுத் தம் வழியே போய்விட்டார்.

வேலை முடிந்து விறகுவெட்டி வீடு திரும்பினான். பிறகு பிரம்மசாரி சொல்லிவிட்டுப் போனதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தான். ''அந்தப் பிரம்மசாரி அப்படிச் சொன்னதில் ஏதாவது பொருள் இருக்க வேண்டும். நான் காட்டுக்கு உள்ளே சென்று பார்க்கிறேன்'' என்று தனக்குத் தானே முடிவு செய்தான்.

மீண்டும் காட்டிற்குச் சென்றபோது, அவன் வழக்கமாக தான் விறகு வெட்டும் இடத்தையும் கடந்து உள்ளே போனான். அப்போது உட்பகுதிகளில் சந்தன மரங்கள் இருப்பது தென்பட்டது. மகிழ்ச்சியோடு அவற்றை வெட்டி வண்டி வண்டியாக ஊருக்குள் கொண்டு வந்தான். சந்தையில் அவற்றை விற்றதனால் அவனுக்கு ஏராளமான பணம் கிடைத்தது.

இவ்விதம் சிலகாலம் கடந்தது. மீண்டும் விறகு வெட்டிக்குப் பிரம்மசாரியின் நினைவு வந்தது. ''அவர் இன்னும் கொஞ்ச தூரம் போனால் சந்தன மரங்கள் கிடைக்கும் என்று சொல்லவில்லையே, 'மேலும் நீ முன்னேறிச் செல்' என்றுதானே எனக்கு சொன்னார்?'' என்று நினைத்துப் பார்த்தான்.

மறுநாள் விறகு வெட்டி சந்தன மரங்கள் கிடைத்த இடத்தையும் தாண்டிக் காட்டுக்குள் போனான். அப்போது அங்கே ஒரு தாமிரச் சுரங்கம் இருப்பதைக் கண்டான். தன்னால் இயன்ற அளவுக்கு தாமிரத்தை எடுத்து ஊரிலே விற்றான். அதனால் வருவாய் மிகுந்தது, பெரும் பணக்காரர்களில் ஒருவன் ஆனான்.

ஆனால் அவன் அத்துடன் நின்றுவிடவில்லை. பிரம்மசாரி சொல்லிவிட்டுப் போன வார்த்தை அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. மீண்டும் அந்த மகான் சொன்னதைச் சிந்தித்தான். பிறகு தாமிரம் கிடைத்த இடத்தையும் தாண்டி மேலும் சிறிது தூரம் காட்டிற்கு உள்ளே சென்றான். அவனது நம்பிக்கையும் முயற்சியும் வீண்போக வில்லை. அன்றைய தினம் அவன் ஒரு நதிக்கரையிலே ஒரு வெள்ளிச் சுரங்கமே இருப்பதைக் கண்டான்! இப்படிப்பட்ட ஒரு பெரிய வாய்ப்பை, அந்த ஏழை விறகு வெட்டி, கனவிலும் நினைத்துப் பார்த்ததில்லை. சுரங்கத்திலிருந்து வெள்ளியை எடுத்து வந்துவிற்று பணம் ஆக்குவதிலேயே கருத்துச் செலுத்தினான். கொள்ளை கொள்ளையாகப் பணம் கிடைத்தது! ஒரு

பெரிய புள்ளியாக கொழுத்த பணக்காரன் ஆகி விட்டான்.

இப்படிக் கொஞ்ச காலம் கடந்தது. நாளுக்கு நாள் அவன் மேலும் மேலும் காட்டின் உட்பகுதிகளில் சென்று கொண்டேயிருந்தான். அப்படி அவன் ஆழ்ந்து செல்லச் செல்ல, தங்கச் சுரங்கமும் வைரச் சுரங்கமும் இருந்ததைப் பார்த்தான். தங்கத்தையும் வைரக் கற்களையும் குவியல் குவியலாகக் கொண்டு வந்தான். அவற்றினுல் அவனுக்கு அளவில்லாத ஐசுவரியம் கிடைத்தத. குபேரனைப் போல பணக்காரன் ஆனுன்.

கடவுளை அடைய விரும்புபவர்களுடைய விஷயமும் இப்படிப்பட்டதுதான். ஏதோ சிறிது ஞான விழிப்பு வந்துவிட்டால், சாதகன் ஒருவன் தனக்கு கிடைக்க வேண்டியதெல்லாம் கிடைத்து விட்டது என்று நினைத்து ஏமாந்து போய்விடக் கூடாது. ஏதோ சில அபூர்வமான சித்திகள் கிடைக்குமானுல், அவற்றுடன் திருப்தி அடைந்து நின்றுவிடவும் கூடாது. விறகு வெட்டியை போல சாதகன் ஒருவன் மேலும் மேலும் ஆன்மிக வாழ்க்கையில் முன்னேறிச் சென்று கொண்டே இருக்க வேண்டும். அப்படி உண்மையாகவே ஒருவன் செய்தால், மேலானதும் உயர்வற உயர்ந்ததுமாகிய கடவுளின் தரிசனமே ஒருவனுக்குக் கிடைத்துவிடும். செல்வங்களிலேயே தலையாயதாகிய ஒப்புயர்வற்ற ஞானச் செல்வம் அவனுக்குச் சொந்தமாகிவிடும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் இந்தக் கதையையும் கருத்தையும் சொல்லிவிட்டு, ''ஆகவேதான் எந்தக்

காரியத்தை நீ செய்தாலும் சரி,முன்னேறிப்போகப் போக இன்னமும் அதிகமான அளவில் நல்ல நல்ல பொருட்கள் உனக்குக் கிடைக்கும் என்று சொல்கிறேன்'' என்று உறுதி கூறுகிருர். சத்தியசொரூபி, சாதர்களுக்கெல்லாம் தருகிற சத்திய வாக்காகிய உறுதிமொழி இது.

'எழுமின்,விழிமின், குறிசாரும் வரை நில்லாது செல்மின்!'
—சுவாமி விவேகானந்தர்

49. அக்பரும் சாதுவும்

அக்பர் அரசாண்ட காலத்தில், டில்லிக்கு அருகிலிருந்த ஒரு காட்டில் முஸ்லிம் பக்கிரி ஒருவர் இருந்தார். ஊருக்குச் சற்று தூரத்தில் இருந்த அந்தக் காட்டில் ஒரு சிறிய குடிசையில் அவரது வாழ்க்கை நடந்து வந்தது. மக்கள் பலர் அந்தச் சந்நியாசியைப் பார்ப்பதற்காகப் போவது வழக்கம். ஆனுல் அவரிடம் பொருள் வசதி எதுவும் கிடையாது. அதனுல், தம்மைக் காண வருபவர்களை அந்தச் சாதுவால் உபசரிக்க முடிவதில்லை. அக்பர் சக்கரவர்த்தி, துறவிகளிடம் அன்பும் மரியாதையும் கொண்டவர். ஆதலால் சாது, தம்மைக் காண வருபவர்களை உபசரிப்பதற்காக அக்பரிடம் சிறிது பணம் பெற்றுவர நினைத்தார்.

ஒரு நாள் அந்தச் சாது, அக்பரைச் சந்திக்கச் சென்ருர். அப்போது அக்பர் தமதுதொழுகையில் ஈடுபட்டிருந்தார். சாதுவும் ஒரு பக்கமாக உட்கார்ந்து தொழுதார். அக்பர்,''இறைவனே! எனக்கு

மேலும் செல்வம், செல்வாக்கு, ராஜ்யம் ஆகிய வற்றைத் தந்தருள வேண்டும்'' என்று சொல்லிப் பிரார்த்தித்தது சன்னியாசியின் காதில் விழுந்தது. அக்பரின் இப்படிப்பட்ட பிரார்த்தனையைக் கேட்ட வுடனே, சாது அங்கிருந்து கிளம்பிப் போக ஆரம் பித்தார். ஆனால் அக்பர் சைகை செய்து சாதுவை அழைத்துத் திரும்பவும் உட்காரும்படி வேண்டினார்.

தொழுகை முடிந்ததும் அக்பர் சாதுவிடம், ''தாங்கள் என்னைப் பார்க்க வந்தீர்கள். ஆனால் என்னிடம் ஒன்றும் சொல்லாமலே தாங்கள் திரும் பிப் போக நினைத்ததன் காரணம் என்ன?'' என்று வினவினார்.

பக்கிரி தயக்கத்துடன் பதில் சொன்னார்:— ''அரசே, தங்களைக் காண வந்ததற்குக் காரணம்.... நல்லது. அதைச் சொல்லி இப்போது உங்களைச் சிரமப்படுத்த வேண்டாமென்று நினைக்கிறேன்.''

வந்த காரியத்தைச் சொல்லும்படி அக்பர் மீண்டும், மீண்டும் வற்புறுத்தியதால், கடைசியாகச் சாது சொன்னார்: ''அரசே, பல மக்கள் என்னிடம் உபதேசம் பெற வருகிறார்கள். ஆனால் என்னிடம் பணவசதி இல்லாத காரணத்தால் அவர்களுடைய சௌகரியங்களை என்னால் கவனிக்க முடியவில்லை. ஆகவே தங்களிடம் சிறிது பணம் பெற்றுப்போக நினைத்து வந்தேன்.''

சாதுவின் பதிலைக் கேட்ட அக்பர், ''அப்படியானால் பிறகு ஏன் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்காமல் போகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''அரசே! நீங்கள் செல்வம், செல்வாக்கு, ராஜ்யம் ஆகியவற்றை வேண்டிப் பகவானிடம் பிரார்த்திப்பதை கண்டேன். ஆகவே ஒரு யாசகனிடம் எதற்காக இன்னொரு யாசகன் யாசிக்க வேண்டும்? யாசகம் பெருமல் காரியத்தைச் சாதிக்கவே முடியாது என்பது உறுதியானல் பகவானிடமே யாசித்துக்கொள்ளலாமே என்று நினைத்துப் புறப்பட்டேன்'' என்று பதில் சொன்னுர் சாது.

என்றென்றைக்குமாக இருந்து மக்களுக்கு வழி காட்டக்கூடிய உண்மைகளை ஸ்ரீராமகிருஷ்ணர் தமது கதைகளின் மூலம் தெரிவித்திருக்கிருர். அக்பரையும் பக்கிரி ஒருவரையும் மையமாகக் கொண்டு பரமஹம்ச தேவர் அருளியுள்ள இந்தக் கதை இரண்டு உண்மைகளை நமக்குப் போதிக்கிறது.

இலௌகிக விஷயங்களைப் பொறுத்தவரையில் சாதகன் தேவைக்கும் அதிகமாக நாட வேண்டியதில்லை. அவன் உள்ளதைக் கொண்டு திருப்தி அடைய வேண்டும். செல்வம், செல்வாக்கு ஆகிய அற்ப விஷயங்களை கடவுளிடம் பிரார்த்திப்பதற்குப் பதிலாக, மேலும் மேலும் பக்தி, ஞானம், விவேகம், வைராக்கியம் போன்ற உயர்ந்த செல்வங்களைக் கேட்டுப் பிரார்த்திப்பது உண்மையான நன்மையைத்தரும்.

உற்ருர் உறவினர், அறிமுகமானவர் என்ற நிலையில் உள்ள உலக மக்களின் பலத்தை நம்புவதை விட, கடவுளின் பலத்தை நம்புவது மேலானது. மனிதர்களின் பின்னல் அலைவதை விடக் கடவுளின்

அருளில் நம்பிக்கை வைப்பது பல நூறு மடங்கு சிறந்தது. ஒவ்வொரு சாதகனுடைய வாழ்க்கையிலும் ஒரு காலம் வரும்; அப்போது அவன் கடவுளையே நம்புவான். கடவுளிடமே தன் பிரார்த்தனைகளைச் சொல்லுவான். கடவுளுடைய உதவியையே எதற்கும் நம்பி அவரையே நோக்கியிருப்பான்.

50. நமக்குச் சொந்தமானவர்

ஒரு குருவும் ஒரு சீடரும் பேசிக்கொண்டிருந்தார்கள். குரு, ஆன்மீக வாழ்க்கையின் பெருமைகளையும் உலக மக்களின் போக்கையும் சிஷ்யனுக்கு விளக்கிச் சொன்னார்.

உரையாடல் நீண்ட நேரம் நடந்தது. கடைசியாகக் குரு, ''பாரப்பா, இந்த உலகத்தில் கடவுள் ஒருவர்தான் உனக்குச் சொந்தமானவர். வேறு யாரும் உனக்குச் சொந்தமானவர் இல்லை. உலக மக்கள் யாரும் உண்மையில் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதில்லை'' என்று சிஷ்யனுக்கு உபதேசித்தார்.

குரு ஒரு சன்னியாசி. சிஷ்யனோ உறவினர்களுடன் குடும்பத்தில் வாழ்ந்து வந்தான். எனவே, குரு சொன்ன வார்த்தையில் அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. 'காலமெல்லாம் நான் என் குடும்பத்திற்காக உழைக்கவில்லையா? அப்படி இரவும் பகலும் அவர்களுக்காக நான் உழைத்திருக்கும்போது,

எனக்கு ஒரு துன்பம் என்றால் அவர்கள் என்னைக் காப்பாற்றாமலா போய் விடுவார்கள்?' என்று அவன் நினைத்தான்.

ஆகவே, இப்படிப்பட்ட சிந்தனைகளுடன் அவன் குரு சொன்ன உபதேசத்தை மறுத்தான்.

''சுவாமி! என் தாய், மனைவி, மற்றுமுள்ள உறவினர் அனைவரும் என்னை மிகவும் நன்றாக கவனித்துக் கொள்கிறார்கள், என்மீது அளவில்லாத அன்பையே அவர்கள் பொழிகிறார்கள். நான் இல்லாவிட்டால் உலகமே அவர்களுக்கு இருண்டு போய் விடும். எனக்கு ஒரு சிறிய தலைவலி வந்தாலும் என் தாய் எனக்காக உயிரையே விட்டுவிடுவாள். இப்படி எல்லாம் இருக்கும்போது, உலகில் யாருமே எனக்குச் சொந்தமில்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள்! உறவினர்களைக் கொண்ட பெரிய படையே எனக்கு இருக்கிறது. அவர்கள் யாருமே எனக்குத் துணை வரமாட்டார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்களே!' என்று கேட்டான்.

அதற்கு குரு, ''அப்பா! நீ சொல்வது உண்மையாக இருந்தால், அவர்கள் உனக்குத் துணையாக இருப்பார்கள்தாம். ஆனால், இருக்கிற உண்மையை அப்படியே மறைக்காமல் இப்போது உனக்குத் தெளிவாகச் சொல்லி விடுகிறேன். நீ நினைத்துக் கொண்டிருக்கும் கருத்துத் தவறானது! அவர்களுக்கு உன்மீது உண்மையான அன்பு கிடையாது! மேலும், நீ நினைப்பது போல, உனக்காக அவர்களில் ஒருவரும் தங்கள் உயிரை விட்டுவிட மாட்டார்கள்.

நான் சொல்வதை நம்பு. உண்மையில் யாரும் யாருக்காகவும் வாழவில்லை! யாரும் யாரையும் நம்பிக் காத்திருக்க மாட்டார்கள்! வேண்டுமானல், நீ நினைக்கும் கருத்துத் தவறு என்பதைச் சோதித்தே பார்த்துவிடலாம்.

''நான் உனக்கு இப்போது சில மாத்திரைகளைத் தருகிறேன். வீட்டுக்குப் போனதும் அவற்றைச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கையில் படுத்துக்கொள். நீ இறந்துவிட்டதாக வீட்டில் இருப்பவர்கள் நினைப் பார்கள். ஆனல் உனக்கு வெளியுலக உணர்ச்சி இருந்து கொண்டிருக்கும். அந்த நிலையிலேயே நடப் பவை எல்லாவற்றையும் உன்னல் காணவும் கேட் கவும் முடியும். அப்போது நான் உன் வீட்டிற்கு வந்து சேருகிறேன்'' என்று சொன்னர். சில மாத்திரைகளைச் சீடனிடம் கொடுத்தார்.

மாத்திரைகளைப் பெற்றுக்கொண்ட சீடன் வீடு போய்ச் சேர்ந்தான்.

குருநாதர் சொன்னபடியே அவன் மாத்திரை களை விழுங்கி விட்டுப் படுக்கையில் படுத்துக்கொண் டான். அவன் உணர்ச்சியில்லாமல் இறந்து விட்ட வனைப் போல இருப்பதை வீட்டில் இருப்பவர்கள் பார்த்தார்கள்.

அவனைச் சுற்றி மனைவி, மக்கள், உற்ருர், உற வினர் என்று இருக்கப்பட்டவர்கள் எல்லாருமே கூடிவிட்டார்கள். அனைவரும் சேர்ந்து கோவென்று கதறி அழ ஆரம்பித்தார்கள்.

அப்போது குரு அங்கே வந்து சேர்ந்தார். அவர்களுடைய துன்பத்திற்குக் காரணம் என்ன என்று விசாரித்தார். வீட்டில் இருப்பவர்கள் நடந்ததை விவரமாக எடுத்துச் சொன்னார்கள்.

குரு அவர்களிடம், ''இவனைப் பிழைக்க வைக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. என்னிடம் அபூர்வமான ஒரு மருந்து இருக்கிறது. அதைக்கொண்டு இவனைப் பிழைக்க வைக்க முடியும். ஆனால் உண்மையை நான் முதலிலேயே நிச்சயமாகச் சொல்லிவிடுகிறேன். நான் கொடுக்கும் மருந்தை இவனுடைய உறவினர்களில் யாராவது ஒருவர் முதலில் சாப்பிட வேண்டும். பிறகு அதைப் படுத்துக் கிடக்கும் இவனுக்குக் கொடுத்தால் பிழைத்துக் கொள்வான். ஆனால், முதலில் மருந்தைச் சாப்பிடும் உறவினர் கட்டாயமாக இறந்து போய் விடுவார். இங்கே இவனுடைய பல உறவினர்கள் கூடியிருக்கிறீர்கள். உங்களில் ஒருவர் இறந்துபோக முன் வந்தால், இவனைப் பிழைக்கவைப்பது சாத்தியமாகும்'' என்று சொன்னார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் அழுதுகொண்டிருந்தவர்களுடைய அழுகை நின்றுவிட்டது. எல்லோரும் திடுக்கிட்டார்கள். 'எங்கே இவர் மருந்தை நம்மைச் சாப்பிடச் சொல்வாரோ!'' என்ற திகில் அவர்களைச் சூழ்ந்து கொண்டது போலும்!

சீடன் நடப்பதை எல்லாம் கேட்டுக்கொண்டே படுத்திருந்தான்.

ஒருவரும் பதில் பேசாமல் மௌனமாக இருந்தார்கள்.

முதலில் குரு சீடனுடைய தாயை அழைத்தார். அவளுக்குப் புத்திரபாசம் பொங்கியது. தரையில் உருண்டுஉருண்டு அவள் அழுதாள். மகனை நினைத்து ஓலமிட்டாள். அவளிடம் அவர், ''அம்மா! இப்படிப் புரண்டு அழுவதால் பயன் ஏற்படப் போவதில்லை. இந்தத் தள்ளாத வயதில் உன்னைக் காப்பாற்றி வந்த உன் மகனே போய்விட்டான். இனிமேல் நீ இருப்பதும் ஒன்றுதான்; இறப்பதும் ஒன்றுதான். இனிமேல் நீ அழ வேண்டியதில்லை. இந்த மருந்தை உட்கொண்டு நீ இறந்துபோனால், நீ பெற்ற மகன் பிழைத்துக் கொள்வான். ஆனால் நான் முதலில் சொன்னபடி நீ உறுதியாக இறந்துவிடுவாய். தாயான நீயே உன் மகனுக்காக இப்படிப்பட்ட உதவியைச் செய்யாமல் போனால், வேறு யார் அம்மணி செய்யப்போகிறார்கள்?'' என்று கேட்டார்.

தாய் மருந்தைக் கையில் வாங்கிக்கொண்டாள். சிறிது நேரம் யோசித்தாள். பிறகு, ''சுவாமி, எனக்கு இன்னும் சில குழந்தைகளும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றியும் நான் யோசிக்க வேண்டியவளாக இருக்கிறேன். நான் இறந்துவிட்டால் அவர்களுடைய கதி என்ன ஆவது? இந்தச் சிந்தனை தான் என்னைத் தடுத்து நிறுத்துகிறது'' என்று ஒரு காரணத்தைச் சொன்னாள். மருந்தைக் குருவிடமே திருப்பியும் கொடுத்தாள்.

குரு அடுத்ததாக, இறந்துவிட்டவனைப் போலப் படுத்திருந்தவனின் மனைவியை அழைத்தார். ''தாயே! உன் மாமியார் மருந்தைச் சாப்பிட

மறுத்துவிட்டாள். நீயாவது இந்த மருந்தைச் சாப்பிட்டு உன் கணவனுக்கு உயிர்ப்பிச்சை கொடு. அம்மணி! கணவனைக்காத்த காரிகை என்று உலகமே உன்னைக் கொண்டாடும்; உத்தமி என்று பாராட்டும்'' என்று சொல்லி மருந்தை அவளிடம் கொடுத்தார்.

இதுவரையிலும் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்த அவள், மருந்தைச் சிறிது நேரம் கையில் வைத்து யோசித்தாள். மருந்தைச் சாப்பிடுபவர்கள் இறந்துவிடுவார்கள் என்பது அவளது காதிலும் விழுந்திருந்தது.

அவள், அழுதுகொண்டே, ''சுவாமி, விதிப்படி அவருக்கு மரணம் நேர்ந்தது. ஏதோ காலம் வந்து அவர் போய்விட்டார். நானும் இப்போது இறந்து போய்விட்டால், என் பெற்றோர்களுடைய கதி என்ன ஆகும்? அவர்களை யார் கவனித்துக்கொள்வார்கள்?'' என்று சொன்னாள்.

இப்படியாக ஒவ்வொருவரும் ஒரு காரணத்தைச் சொன்னார்கள். அத்தனையும் புதுமையான காரணங்கள்; விதவிதமான காரணங்கள். அவர்கள் வாயிலிருந்து அப்போது பெரிய பெரிய தத்துவங்கள் எல்லாம் வெளிவந்தன. கடைசி வரையில் ஒருவருமே தமது உயிரை இழக்க முன்வரவில்லை. மருந்தைச் சாப்பிட மறுத்துவிட்டார்கள்.

நடந்தவற்றை எல்லாம் சீடன் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தான். உண்மையிலேயே தனக்குச் சொந்தமானவர் யாரும்

இல்லை என்ற உண்மை அப்போது அவனுக்குத் தெரிந்துவிட்டது.

சீடன் படுக்கையை விட்டு எழுந்தான். அப்போதே குடும்ப வாழ்க்கையை விட்டுக் குருவைத் தொடர்ந்து சென்றுவிட்டான்.

ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன இந்தக் கதை ஆழ்ந்த பொருளை உடையது.

உலகம் என்பது முதல்தரமான ஏமாற்று நாடகம்; ஆழ்ந்து கவனித்தால் தங்களுடைய சுய நலத்திற்காக ஒருவரை ஒருவர் நேசிப்பது போல நடிக்கிறார்கள் என்பது தெரியவரும்.

ஒருவனுக்குக் கடவுளைத் தவிர வேறு எவருமே சொந்தமில்லை; இதுதான் இருக்கிற ஒரே ஒரு உண்மை.

உற்றார், உறவினர் என்னும் போலி நாடகம் நிரந்தரமானதல்ல; இரண்டொரு நாளைக்கு மட்டுமே நிலைக்கும். இதை உண்மை என்று நம்பி விடாதே உன்னைச் சேர்ந்தவர் என்று இருப்பவர் எல்லாரும் என்றைக்காவது ஒரு நாள் உன்னை விட்டுப் போய் விடுவார்கள் அல்லது அவர்களை விட்டு நீ போய் விடுவாய்.

உன்னை என்றென்றும் துணைநின்று காப்பவர் ஒருவர்தாம்.

உன்னை உண்மையாகவே நேசிப்பவர் ஒரே ஒருவர்தாம்.

நீ எவ்வளவு கீழான நிலையை அடைந்தாலும், அதள பாதாளத்திற்குப் போனாலும்—உன்னைக் கை தூக்கிவிடுகிற கரம் ஒரே ஒருவருடையதாகத்தான் இருக்கும். அவரையே நம்பு, அவரை அடைவது ஒன்றே உன் வாழ்வின் இலட்சியமாக இருக்கட்டும்— **அவரே கடவுள்.**

உலகம் உனக்காகக் காத்திருக்கவே இல்லை. உன் தலைவிதிதான் உனக்காகக் காத்திருக்கிறது. அந்தப் பிரச்னையை நீயேதான் தீர்த்தாக வேண்டும்.

அப்பாவி மனிதனே! மனைவி, மக்கள், உறவினர் நண்பர் என்று நம்பி மோசம் போய்விடாதே! கடவுளை மறந்துவிடாதே!

ஏனென்றால் உலக உறவுகள்—யாரும் யாரையும் உண்மையில் காப்பாற்ற வரப்போவதில்லை.

51. கொள்ளையாசை கொள்ளைபோய்விட்டது!

ஒரு சீடன் தன் குருவிடம் சொன்னான்:— 'சுவாமி, என்மீது என் மனைவிக்கு அளவில்லாத அன்பு. கொள்ளை ஆசை என்மீது அவளுக்கு இருக்கிறது. அது காரணமாகத்தான் நான் சன்னியாசம் பெறுமல் இருக்கிறேன்.''

சீடன் சொன்னதைக் குரு கேட்டார். அவருக்குச் சீடன் சொல்லும் காரணத்தில் உண்மை எதுவும் கிடையாது என்பது நன்றாகத் தெரியும். ஆகவே அவர், சீடன் நினைப்பதைப் போல உலக

மக்கள் இல்லை என்பதை அவனாகவே உணர்ந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கத் திருவுள்ளம் கொண்டார். அதன்படி குரு தமது சீடனுக்கு ஏதோ ஒரு இரகசிய யோகமுறையைச் சொல்லிக் கொடுத்தார்.

திடீரென்று ஒரு நாள் சீடனுடைய வீட்டில் ஓலமும் அழுகுரலும் கேட்டன. வீடே அமளி துமளிப்பட்டது. அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் என்னவோ ஏதோ என்று நினைத்து ஓடிவந்து பார்த்தனர். அங்கே ஓர் அறையில் சீடன் மூச்சுப் பேச்சில்லாமல் அசைவற்று ஒரு கற்சிலையைப் போல உட்கார்ந்திருந்தான். அவனது உடலும் அவயவங்களும் இயல்புக்கு மாறாகப் புதுமையான வகையில் கோணிப்போயிருந்தன. அவனை அந்த நிலையில் பார்த்த உறவினர்களும் மற்றவர்களும் அவனுக்கு உயிர் போய்விட்டதென்றே முடிவு செய்தார்கள்.

சீடனுடைய மனைவி ஒப்பாரியும் பிரலாபமுமாக, ''ஐயோ, என் பிராணநாதா! நீங்கள் எங்கே போய்விட்டீர்கள்? எங்களை எல்லாம் கைவிட்டுப் போய்விட்டீர்களே! எங்களை எல்லாம் ஏமாற்றிவிட்டுப் போய்விட்டீர்களே! இப்படி எங்கள் தலையில் இடிவந்து விழும் என்று நாங்கள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லையே!'' என்று என்ன என்னவோ சொல்லிக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தாள்; அழுதாள்; புலம்பினாள்; தேம்பினாள்.

இதனிடையில், உறவினர்கள் பிணத்தைத் தகனம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்

தார்கள். பிணத்தைச் சுடுகாட்டிற்குக் கொண்டு போவதற்காக ஒரு பாடையைக் கட்டிக்கொண்டு வந்தார்கள். அப்போது அவர்களுக்கு ஒரு சங்கடம் வந்தது.

சீடனின் உடல் கோணலான நிலைமையில் இருந்ததால், வாயிற்படி வழியாகப் பிணத்தைக் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டது. ஆகவே ஒருவன் கோடரியைக் கொண்டு மரத்தாலான வீட்டின் நிலைப்படியை இடிக்க ஆரம்பித்தான். அதுவரையிலும் துக்கம் தாங்காமல் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்த சீடனின் மனைவி, கோடரிச் சப்தம் கேட்டதும் நிலைப்படி இருந்த இடத்திற்கு ஓடோடி வந்துவிட்டாள். அங்கிருந்தவர்களிடம் அழுதுகொண்டே அவள், ''என்ன விஷயம்? ஏன் நிலைப்படியை இடிக்கிறீர்கள்?'' என்று விசாரித்தாள்.

அங்கிருந்தவர்களுள் ஒருவன், ''உங்களுடைய கணவனின் உடல் கோணிப்போய் இருப்பதால், பிணத்தை வாயிற்படி வழியாக எடுத்துவர முடியாது. ஆகவே நிலைப்படியைப் பெயர்க்க வேண்டியிருக்கிறது. அதைத் தவிர வேறு வழியில்லை'' என்று அவளுக்குப் பதில் சொன்னான்.

இதை அவள் கேட்டவுடனே, ''இல்லை இல்லை. இதை இப்போது இடிக்கவேண்டாம். நானோ விதவையாகி விட்டேன். என்னைக் காப்பாற்றுபவர் இப்போது யாருமில்லை. தந்தையை இழந்துவிட்ட என் குழந்தைகளை நான் காப்பாற்றியாக வேண்டும்.

நிலைப்படியை நீங்கள் இப்போது இடித்துவிட்டுப் போய்விட்டால், மறுபடியும் அதைப் பழுது பார்க்க முடியாது. ஏதோ என் கணவருக்கு நேர வேண்டியது நேர்ந்துவிட்டது! வேண்டுமானால் பிணத்தின் கை கால்களை வெட்டி வெளியே கொண்டு போய் விடுங்கள்'' என்று சொல்லி விட்டாள்.

மனைவி அப்படிச் சொன்னவுடனே, இதுவரையிலும் இறந்துவிட்டவனைப் போல இருந்த சீடன் எழுந்து நின்றான். அவன் சாப்பிட்டிருந்த மருந்தின் வேகமும் இதற்குள்ளாகத் தணிந்து போயிருந்தது. மனைவியைப் பார்த்து அவன், ''அடி பாதகி! பெண்ணே, என் கை கால்களை வெட்டவேண்டுமென்றா சொல்கிறாய்?'' என்று கூவிக்கொண்டே, வீடு வாசல்களைத் துறந்துவிட்டு அந்த நிமிடமே தன் குருவுடன் புறப்பட்டுப் போய்விட்டான்.

''நமது உலக ஆசைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டு அவற்றில் மூழ்கி அந்தகாரத்தில் கஷ்டப் பட்டாலும், 'நாம் யார்? இவற்றை அனுபவிப்பது யார்?'' என்ற கேள்வி எப்போதாவது ஒரு சமயம் நமது உள்ளத்தில் எழும். இந்தக் காலம்தான் இரகசியப்பொருளை விளக்கும் புனித நேரமாகும்.''

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

''எனக்குச் சரண் தாயுமன்று; தந்தையுமன்று; மக்களுமன்று; சகோதரர்களுமன்று; மற்ற எவருமன்று; என் குரு எந்தப் பாதத்தை என் தலையில் சூட்டினாரோ அதுவே எனக்கு சரண்.''

''நீ யார்? நான் யார்? எங்கிருந்து வந்தோம்? என் தாய் யார்? தந்தை யார்? இப்படித் தன் பிறவித்தளைகளை நன்ருய் விசாரித்துப் பார்த்து இவை எல்லாம் கனவுக்கு ஒப்பானவை எனக் கண்டுகொள்.''

—ஆதிசங்கரர்.

VIII. மாயையின் இயல்பு

52. மூன்று திருடர்கள்

ஒரு நாள் பணக்காரன் ஒருவன் காட்டுவழி யாகப் போய்க்கொண்டிருந்தான். அப்போது மூன்று வழிப்பறித் திருடர்கள் அவனை மடக்கிப் பிடித்துச் சூழ்ந்து கொண்டார்கள். அவன் வைத் திருந்த பொருள்களை அவர்கள் பறித்துக்கொண்டு விட்டார்கள்.

பிறகு அவர்களுள் ஒருவன், ''இவனை உயிருடன் விட்டு வைப்பதால் என்ன லாபம்?'' என்று சொல்லிக்கொண்டே கத்தியை உருவிப் பணக் காரனை வெட்டப் போனுன். அவன் அப்படிச் செய்வதை மற்ருெருவன் தடுத்து நிறுத்தி, ''வேண்டாம். இவனைக் கொல்வதனுல் மட்டும் நமக்கு என்ன லாபம்? இவனுடைய கைகால்களைக் கட்டி, இங்கேயே போட்டுவிட்டுப் போய் விடு வோம்'' என்று சொன்னுன்.

அப்படியே மூவரும் சேர்ந்து அவனுடைய கை கால்களை ஒரு கயிற்ருல் இறுகக் கட்டினுர்கள். பிறகு

அவனைச் சாலையின் ஒதுக்குப்புறமாக இருந்த ஓர் இடத்தில் தூக்கி வீசிப் போட்டுவிட்டுப் போய் விட்டார்கள்.

சிறிது நேரம் ஆயிற்று. மூன்றாவது திருடன் மீண்டும் அதே இடத்திற்குத் திரும்பி வந்தான். அவன் பணக்காரனிடம், ''ஆகா, ஐயோ பாவம்! அப்பா, உனக்கு வலிக்கிறதா? இரு, நான், உன் கட்டுக்களை அவிழ்த்துவிடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே அவனுடைய கட்டுகளை அவிழ்த்து விட்டான். பிறகு, ''என்னுடன் வா. நான் உனக்கு வழி காட்டுகிறேன்'' என்று சொல்லிப் ப்ணக்காரனை நெடுஞ்சாலைவரையிலும் வெகு தூரம் அழைத்துக் கொண்டு போனான். இருவரும் காட்டைக் கடந்து ஊருக்குள் புகும் சாலையை நெருங்கினார்கள். அப் போது திருடன் அவனிடம், ''இதோ, இப்போது ராஜபாதை வந்துவிட்டது. அதோ, அந்த இடத்தில் உன் வீடு தெரிவதைப் பார். இதே பாதையில் நீ சென்றால் உன் வீட்டிற்கு விரைவில் போய்ச் சேர்ந்து விடுவாய்'' என்று சொல்லி கையைக் காட்டினான்.

அப்போது அந்தப் பணக்காரன் திருடனிடம் தன் நன்றியறிதலைத்தெரிவித்துக் கொள்வதற்காக, ''ஐயா, நீங்கள் எனக்குப் பெரிய உபகாரத்தைச் செய்திருக்கிறீர்கள். நீங்களும் என்னுடன் என் வீட்டிற்கு வாருங்கள். எங்கள் வீட்டில் இருப்ப வர்கள் தங்களைக் காண பெரிதும் மகிழ்ச்சி அடை வார்கள்'' என்று சொல்லி தன் வீட்டிற்கு வரும்படி திருடனை அன்புடன்அழைத்தான்.அதற்குத் திருடன்

பதில் சொன்ஞன், ''அப்பா, நீ சொல்லியபடி நான் செய்வதற்கில்லே. நான் அங்கே வரமாட்டேன்; வரவும் கூடாது. அங்கு வரக்கூடிய தகுதி எனக்கு இல்லே. ஊருக்குள் வந்தால் போலீஸ்காரர்கள் என்னேப் பிடித்துக்கொள்வார்கள்'' என்று சொல்லி அவனே வழியனுப்பிவிட்டுப் பழையபடியே காட்டுக்குள் சென்று மறைந்துவிட்டான்.

இந்த உலக வாழ்க்கை ஒரு காடு போன்றது. இந்தக் காட்டில் சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்னும் மூன்று திருடர்கள் இருக்கிருர்கள். ஜீவாத்மாவாகிய மனிதன் காட்டுவழியே வழிப்போக்கஞகப் போகிருன். அவனிடம் புனிதம் நிறைந்த ஆத்மஞானம் என்னும் விலேயுயர்ந்த பொருள் இருக்கிறது. அதை மூன்று திருடர்களாகிய முக்குணங்கள் பறித்துக்கொண்டு வழிப்பறி செய்கிருர்கள். தமோகுணம்தான் முதலாவது திருடன். அது அவனே ஒரே அடியாக அழித்துவிட முயற்சி செய்கிறது. ரஜோகுணம் ஒருவனே இலௌகிகத்தில் பிணேக்கிறது. ஆதலால் ஒருவன் பலவித ஆசைகளுடன் கூடிய பல முயற்சிகளில் ஈடுபடுகிருன். அது பந்தங்களாகிய சங்கிலியால் அவனேக் கட்டுப்படுத்துகிறது. இறைவனே மறக்கும்படியும் செய்கிறது.

இந்த மூன்று திருடர்களும் நமக்குள்ளேயே இருக்கிருர்கள்.

சத்துவகுணம் உலக பந்தங்களிலிருந்தும், ரஜோ தமோகுணங்களின் கொடுமையான உடும்புப்

பிடிகளிலிருந்தும் ஒருவனைக் காப்பாற்றுகிறது. சத்துவகுணம் தலையெடுக்கும் போது, தமோ குணத்தின் இயல்புகளாகிய காமம், குரோதம் போன்ற கீழான இயல்புகளிலிருந்து நாம் காப் பாற்றப்படுகிறோம். சத்துவ குணத்தை ஒருவன் சரணடையும்போது, உலக ஆசைகளாகிய பந்தங் களிலிருந்தும் மாயையிலிருந்தும் அது அவனை விடுவித்துவிடுகிறது. அப்படி அவனை விடுவித்துக் கரையேற்றும் வலிமை சத்துவகுணத்திற்குத்தான் உண்டு.

ஆனால், சத்துவகுணமும் ஒரு திருடன்தான். அதுவே நம்மைக் கடவுளிடம் அழைத்துச்செல்லாது. ஆனால் இறைவனை அடையும் வழியை அது காட்டு கிறது. பரமபதத்திற்குச் செல்லும் வழி வரையிலும் அது ஒருவனை அழைத்து வந்து, ''அதோ பார்! உன் வீடு அங்கே இருக்கிறது'' என்று சொல்லி மறைந்து போய்விடும். சத்துவகுணம் உயர்ந்ததுதான். என்றாலும், அதனால் பரமபதத்தின் அருகில் செல்ல முடியாது. சத்துவகுணத்தையும்விட உயர்ந்ததும் அழியாததுமான மிகப் பெரிய நிலை ஒன்று இருக் கிறது. அதுவே அனுபூதியில் இறைவனை உணர்ந்து, இறைவனின் மயமாகவே ஆகிவிட்ட ஞானியின் நிலையாகும்.

'இஷ்டாபூர்த்தம் போன்ற நல்லசெயல்களையும் ஒருவன் கடந்து செல்ல வேண்டும். அவற்றையே முடிவாகவும் உயர்ந்தனவாகவும் கருதலாகாது. அப்படிக் கருதுபவன் மிகப் பெரிய மூடன்' என்ற

கருத்துக்களை உபநிஷதங்கள் கூறுகின்றன. காரணம், பற்று இல்லாத முறையில் உலக நன்மைக்காகச் செய்யப்படும் நிஷ்காம கர்மம், தயை, நேர்மை பக்தி போன்ற அரிய குணங்களைச் சத்துவகுணம் ஒருவனிடம் தோற்றுவிக்கிறது. மேலும், சத்துவ குணம, ஒரு படிக்கட்டின் கடைசிப் படியைப் போல இருக்கிறது. அதை அடுத்து இருப்பது மாடியாகிய பரப்பிரம்மமேயாகும். பரப்பிரம்மம்தான் மனித னின் உண்மையான சுய இருப்பிடமாகும். முக்குணங் களையுமே ஒருவன் கடந்து சென்றால் தான் பிரம்ம ஞானத்தை அடைய முடியும். ஏனெனில் சச்சிதா னந்தமாகிய உண்மைச் சொரூபம், முக்குணங் களிலிருந்தும் வேறுபட்டதாகவே இருந்துக்கொண் டிருக்கிறது. பிரம்மஞானம் எங்கே இருக்கிறதோ, அங்கிருந்து சத்துவகுணம் வெகு தூரத்தில்தான் இருக்க முடியும்.

அனுபூதியில் பிரம்மத்தை உணர்ந்து, பிரம்ம மயமாகவே ஆகிவிட்ட நிலை ஒன்றே ஒப்புயர் வில்லாத உயர்ந்த இறுதிநிலை. அதற்கும் ஒருமாற்று குறையாத நிலையை மனிதன் அடைய வேண்டும் என்பதற்காக, சத்துவகுணத்தையும் கடந்து செல்லும்படிப் பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

''நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுன. அர்ஜுனா, நீ மூன்று குணங்களையும் கடந்தவனாக ஆகிவிடு'' என்று கீதையில் (2-45) கண்ணன் சொன்ன கருத்து, இந்நேரம் உங்களுக்குப் புரிந்திருக்குமே!

53. சக்கிலியன் கதை

ஒரு முறை குரு ஒருவர் தமது சீடனின் கிராமத்திற்குப் போய்க்கொண்டிருந்தார். அப்போது தம்முடன் அழைத்துப்போக வசதியாக ஒரு நல்ல வேலைக்காரன் அவருக்குத் தேவைப்பட்டான். ஆனால் அவர் விரும்பிய வகையில் ஒரு வேலைக்காரனும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் அவர் சென்றுகொண்டிருந்தார். அப்போது வழியில் ஒரு சக்கிலியனைக் கண்டார். அவனை நோக்கி குரு, ''அடே, நீ எனக்கு வேலைக்காரனாக வருகிறாயா? உனக்கு நல்ல சாப்பாடு கிடைக்கும். மேலும் உனக்குத் தேவையான எல்லா வசதிகளையும் நான் கவனித்துக்கொள்கிறேன். என்னுடன் வா, போகலாம்'' என்று சொல்லி அழைத்தார்.

அதற்குப் பதிலாகச் சக்கிலியன், ''ஐயா, நான் கீழ்ஜாதியைச் சேர்ந்தவன். நான் எப்படி உங்களுக்கு வேலைக்காரனாக வர முடியும்?'' என்று கேட்டான். குரு, ''அதனால் பாதகமில்லை. நீ இன்ன சாதியைச் சேர்ந்தவன் என்பதை யாருக்கும் சொல்லாதே. ஒருவரிடமும் பேசாமல் இரு. ஒருவரிடமும் தொடர்பு வைத்துக்கொண்டு நெருங்கிப் பழகாதே'' என்று சொன்னார். சக்கிலியன் மௌனமாக இருந்தால் அவனைப்பற்றி ஒருவரும் தெரிந்துக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும்; அதனால் சங்கடம் நேரவும் வழியில்லை என்பதால் குரு அவ்விதம் சொன்னார்.

இறுதியில் குருவின் யோசனைக்குச் சக்கிலியன் ஒப்புக்கொண்டான். பிறகு இருவருமாகச் சேர்ந்து சீடன் வசித்து வந்த குறிப்பிட்ட கிராமத்தை அடைந்தார்கள். சீடனுடைய வீட்டிற்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

அன்றைய தினம் மாலை, குரு சீடனுடைய வீட்டில் தியானம் செய்து கொண்டிருநதார். அப் போது அந்த வீட்டிற்கு ஒரு பிராம்மணர் வந்தார். அவர் குருவினுடைய வேலைக்காரனிடம், ''என் செருப்பை அங்கே விட்டு வந்திருக்கிறேன். அதைப் போய் எடுத்து வா'' என்று சொன்னார். சக்கிலியன் குரு சொல்லியிருந்தபடி பதில் பேசாமல் மௌன மாக இருந்தான். புதிதாக வந்த பிராம்மணர் மீண் டும் சக்கிலியனிடம் தமது செருப்புகளைக் கொண்டு வந்து வைக்கும்படிச் சொன்னார். வேலைக்காரன் அப் படியும் நகராமல் மௌனமாக அங்கேயே நின்று கொண்டிருந்தான். பிராம்மணர் திரும்பத் திரும்பச் சொன்னார். ஆனாலும் வேலைக்காரன் ஓர் அடியும் நகரவில்லை; அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

கடைசியில், தாம் பலமுறை சொல்லியும் வேலை காரன் கீழ்ப்படியாததைக் கண்ட பிராம்மணருக்குக் கோபம் வந்தது. கோபத்துடன் அவர், ''அடே! ஒரு பிராம்மணனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமலி ருக்குமளவுக்கு, உனக்கு எங்கிருந்து இந்தத் தைரி யம் வந்தது? நீ உண்மையில் சக்கிலியனா என்ன? உன் பெயர் என்ன சொல்?'' என்று கேட்டார்.

அவ்வளவுதான்! பிராம்மணர் அப்படிக் கேட்ட வுடனே சக்கிலியன் நடுநடுங்க ஆரம்பித்துவிட்டான்.

பயம் அவனைக் கவ்விக்கொள்ள, பரிதாபமான குரலில், ''எசமானே! என்னை நீங்கள் கண்டுபிடித்து விட்டீர்கள். இனிமேல் நான் இங்கு நிற்கவேகூடாது. இப்போதே நான் ஓடிப்போய் விடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே; உடனே அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

இதைப் போலவே மாயையை இன்னது என்று புரிந்து கொண்டால், அது உடனே விலகிப் போய் விடும். அவித்தையை அறிந்தவுடனே அது மறைந்து விடுகிறது. பிரம்மத்தின் விளக்கம் தோன்றும்போது மாயைக்கு இடமே இருக்காது.

கண்டுபிடிக்கப்பட்டதும் திருடன் ஓடிப்போய் விடுகிறான். அதைப்போல மாயையின் இயல்பு இன்னது என்று நீ தீவிரமாக ஆராய்ந்து கண்டு பிடித்து விட்டால், அது உன்னிடமிருந்து ஓடியே போய்விடும்.

54. நாரதரும் மாயையும்

மாயையை அறிய முடியாது.

நாரதர் ஒரு சமயம் சர்வேசுவரனைப் பார்த்து, ''சுவாமி! முடியாத காரியத்தை முடிக்கவல்ல தங்களுடைய மாயையை எனக்குச் சிறிது காட்டியருள வேண்டும்'' என்று கேட்டார்.

சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் சர்வேசுவரன் நாரதரை தம்முடன் அழைத்துக் கொண்டு, ஒரு பாலைவனத்தின் வழியாகப் பிரயாணம் செய்தார்.

இருவரும் சேர்ந்து சிறிது தூரம் சென்றுர்கள். அப்போது வழியில் சர்வேசுவரனுக்குத் தாகம் எடுத்தது. பிரயாணக் களேப்பு மிகுந்த நிலேயில் அவர் கீழே உட்கார்ந்து கொண்டு, ''நாரதரே! எனக்கு மிகவும் தாகமாகஇருக்கிறது. தயவுசெய்து எங்கிருந்தாவது எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள்'' என்று கேட்டார். நாரதர், அந்த நிமிடமே தண்ணீரைத் தேடிக்கொண்டு ஓடினுர்.

ஆனுல் அருகில் எந்த இடத்திலும் நாரதருக்கு தண்ணீர் கிடைக்கவில்லே. ஆகவே நீண்டதூரம் அவர் சென்றுர். அப்போது தூரத்தில் ஓர் ஆறு ஓடிக் கொண்டிருப்பது தென்பட்டது.

நாரதர் ஆற்றை நெருங்கியபோது, அங்கே கண்ணேயும் கருத்தையும் கவரும் கட்டழகு பொருந்திய இளம்பெண் ஒருத்தி உட்கார்ந்திருப்பதைக் கண்டார். அவளேப் பார்த்த அந்தக் கணமே நாரதருக்கு அவள் மீது காதல் உண்டாயிற்று. தனது அருகில் நாரதர் வந்ததும், அந்தப்பெண் இனிய குரலில் அவருடன் பேச ஆரம்பித்தாள். இருவரும் நேரம் போவதே தெரியாமல், நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். முடிவில் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டனர்.

பிறகு, நாரதர் அவளேத் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தார். நாளடைவில் அந்தப் பெண் மூலமாக நாரதருக்குப் பல குழந்தைகள் பிறந்தார்கள். இவ்விதம் நாரதர் தமது மனேவிமக்களுடன் மிகமிக

இன்பமாக வாழ்ந்து வந்தார். அப்படி அவர் வாழ்ந்து வந்தபோது நாட்டில் ஒரு சமயம் கொள்ளை நோய் பரவியது. அதன் விளைவாக நாட்டில் பல ஆயிரம் பேர் மரணதேவதைக்குப் பலியானார்கள். தேசத்தின் எல்லாப் பாகங்களிலும் மூலைமுடுக்குகள் எல்லாம் கொள்ளை நோய் பரவித் தன் கைவரிசையைக் காட்டி மக்களை விழுங்க ஆரம்பித்தது.

இந்த நிலையில் நாரதர் தாம் வாழ்ந்து வந்த ஊரைவிட்டு, மனைவி மக்களுடன் வேறு எங்காவது தூரதேசத்திற்குச் சென்றுவிட முடிவு செய்தார். அவருடைய மனைவியும் அந்த யோசனைக்குச் சம் மதித்தாள். அதன்படி கணவனும் மனைவியும் குழந் தைகளைச் கையில் பிடித்துக் கொண்டு வீட்டைவிட் டுக் கிளம்பினார்கள். வழியில் ஓர் ஆற்றுப்பாலம் குறுக்கிட்டது. பாலத்தின்மீது அவர்கள் அனைவரும் நடந்து கொண்டிருந்தார்கள். அப்போது ஆற்றில் கடுமையான காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு வந்து கொண்டிருந்தது. விரைவில் ஆற்று வெள்ளம் பாலத்தை உடைத்தது. அந்த வெள்ளத்தில் நாரதருடைய குழந்தைகள் ஒருவர்பின் ஒருவராக அனைவருமே அடித்துக்கொண்டு போகப்பட்டனர். கடைசியாக அவருடைய மனைவியையும் ஆறு அடித்துக்கொண்டு போய்விட்டது.

நாரதருக்கோ துன்பம் தாங்க முடியவில்லை. ஆற்று வெள்ளம் அவரைக் கரையில் ஒதுக்கியது. அவருடைய உள்ளமே இடிந்து போய்விட்டது.

ஆற்றங்கரையில் உட்கார்ந்து கொண்டு வெகுவாகக் கதறி அழுது பிரலாபிக்க ஆரம்பித்தார்.

அப்போது சர்வேசுவரன் அவரது முன்னல் தோன்றி, ''நாரதரே! தண்ணீர் எங்கே! நீர் ஏன் அழுதுகொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

பகவானைக் கண்டதும் நாரதர் தயங்கினர். அதோடு நடந்தவை எல்லாவற்றையும் அவர் புரிந்து கொண்டார். பகவானைப் பார்த்து அவர், 'சர்வேசு வரா! உங்களுக்கு ஒரு நமஸ்காரம்; உங்களுடைய மாயைக்கும் ஒரு நமஸ்காரம்'' என்று சொல்லி வணங்கினர்.

''சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங் களின் வடிவாகிய என் மாயை தெய்வீகச் சக்தி வாய்ந்தது; தாண்ட முடியாதது. யார் என்னையே சரணடைகிறர்களோ அவர்களே இந்த மாயையைத் தாண்டுகிறர்கள்.'' **—கீதை.7-14**

55. ஆட்டுப் புலி காட்டுப் புலியானது

ஒரு சமயம் ஒரு பெண்புலி ஓர் ஆட்டுமந்தை யைத் தாக்கியது. அப்போது அந்த புலி பூரணகர்ப்ப மாக இருந்தது. ஆட்டுக் கூட்டத்தின் மீது பாய்ந்த வேகமும் அதிர்ச்சியும் காரணமாகப் புலி, அங்கேயே ஒரு குட்டியை ஈன்று உயிர்விட்டது.

ஆனல் குட்டி தப்பிப் பிழைத்து ஆடுகளோடு சேர்ந்து வாழ ஆரம்பித்தது. ஆடுகள் புல்வெளிகளில்

மேய்ந்தன. புலிக்குட்டியும் அப்படியே செய்தது. ஆடுகள் கத்தினால் புலிக்குட்டியும் அப்படியே கத்துவது வழக்கம்.

இவ்விதம் காலம் உருண்டது. நாளடைவில் புலிக்குட்டி வளர்ந்து முழுவளர்ச்சியடைந்த பெரிய புலியாக மாறியது.

இந்த நிலையில் ஒரு நாள் வேறொரு புலி இதே ஆட்டுமந்தைமீது பாய்ந்தது. அப்போது அந்தக் காட்டுப்புலி, ஆடுகளோடு புல்லைத் தின்ற புலியைப் பார்த்து ஆச்சரியப்பட்டது. ஆட்டுச் சுபாவம் கொண்ட புலியைப் பார்த்தவுடனே காட்டுப்புலி அதைத் துரத்திக் கொண்டே ஓடியது. கடைசியாகக் காட்டுப்புலி ஆட்டுப்புலியின் கழுத்தைப் பலமாகப் பற்றிப் பிடித்தும்விட்டது. அப்போது புல்லைத் தின்றே வாழ்ந்து பழக்கப்பட்ட ஆட்டுப்புலி 'மே' என்று கத்த ஆரம்பித்தது.

காட்டுப்புலி தன் பிடியைத் தளர்த்தவில்லை. அது ஆட்டுப்புலியை ஒரு குளத்தின் கரைக்கு இழுத்துக்கொண்டு சென்றது. தண்ணீரில் பிரதி பலித்த தன் நிழலை ஆட்டுப்புலிக்குக் காட்டி, "இதோ பார்! என் உருவமும் உன் உருவமும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. நீயும் என்னைப் போலவே ஒரு புலி தான்! இதோ இப்போது இந்த மாமிசத் தைத் தின்னு" என்று சொல்லிக் கொண்டே ஒரு மாமிசத் துண்டை ஆட்டுப்புலியின் வாயில் வைத் துப் பலவந்தமாகத் திணித்தது. ஆரம்பத்தில் ஆட்டுப் புலி அதைத் தின்ன மறுத்தது. மறுபடியும்

அது 'மே' என்று கத்திக்கொண்டு, தான் ஓர் ஆடு தான் என்று சொல்லிச் சாதித்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு, ஆட்டுப்புலிக்கு மெல்ல மெல்ல இரத்தத்தின் சுவை தெரிய ஆரம் பித்தது. அதோடு விரைவில் அதனிடம் இயல் பாகவே மறைந்திருந்த புலியின் சுபாவம் தலை யெடுக்கவே, மாமிசத்தை விருப்பத்தோடு தின்னவும் ஆரம்பித்து விட்டது. அப்போது காட்டுப்புலி ஆட்டுப்புலியைப் பார்த்து, "இப்போது நீயும் என்னைப் போல ஒரு புலிதான் என்பது தெரிகிறதா? நீயும் என்னைப் போன்றவன் என்பதைத் தெரிந்து கொண்டாய் அல்லவா? இனி என்னோடு காட்டுக்கு வந்துவிடு" என்று சொல்லித் தன்னுடன் அழைத் துக் கொண்டு போய்விட்டது.

மனிதன் பெண்ணாசை, பொன்னாசை மற்று முள்ள உலக ஆசைகளிலும் இலௌகிக விவகாரங் களிலும் ஈடுபடுவது, ஆட்டுப்புலி நிலங்களில் மேய்ந்து புல்லைத் தின்று வசிப்பதற்கு ஈடாகும். ஆடுகளுடன் வாழ்ந்த புலிக்குட்டியும் ஆட்டைப் போலவே, கத்துவது, பொதுவாக இலௌகிக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள மனிதனின் உலக இயல்புகளைக் காட்டுகிறது. புதிதாக வந்த புலி யுடன் சென்று, தண்ணீரில் தெரிந்த தன் நிழல் மூலம் தானும் ஒரு புலிதான் என்ற உண்மையை உணர்ந்து. கொண்டது. ஞான குருவிடம் சரண் அடைந்து, ஆன்மிக விழிப்பைப் பெற்று, ஆத்ம ஞானம் அடைவதை உணர்த்துகிறது.

ஆதலால் குருவின் திருவருள் உனக்கு இருக்குமானுல்; நீ பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. அவரே உன்னிடம் ஞானவிழிப்பை ஏற்படுத்தி விடுவார். நீ யார் என்பதையும், உன் உண்மையான சொரூபம் எது என்பதையும், அவர் உன்னை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்ளும்படி செய்வார்.

ஒருவனுக்கு அதிர்ஷ்டவசமாக குரு எதிர்ப்பட்டு, அவர் மூலமாகப் பந்தங்களிலிருந்து விடுபடக் கூடிய மூலமந்திரம் கிடைத்தால், உடனே அவன் மக்கள் கூட்டத்தைத் துறந்துவிட்டு நித்தியசாந்தியைப் பெறுவதற்காகத் தன் உள்ளமாகிய குகைக்குள் சென்றுவிடுவான்.

IX. உண்மை ஞானம்

56. கணவனை இழந்த காரிகை

கடவுள் பக்தியிலும் கற்பிலும் சிறந்த ஒரு பெண் இருந்தாள். அவள் தன் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் மிகுந்த அன்புடன் பணிவிடைகளைச் செய்து கொண்டே, உள்ளத்தைப் பகவானிடம் நிலையாகவும் உறுதியாகவும் வைத்திருந்தாள். தன் கணவன் இறந்து தகனம் செய்யப்பட்டவுடனே அவள் தன் கண்ணுடி வளையல்களை உடைத்தெறிந்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாக இரண்டு பொன்வளையல்களை அணிந்துகொண்டாள். வழக்கத்திற்கு மாறுன இவளுடைய விபரீதச் செயலைக் கண்ட ஊர்மக்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

அவர்களுக்கு அந்தப் பெண் பதில் சொன்னாள்: ''இதுவரையிலும் என் கணவரின் உடல் அநித்திய மாக இருந்து வந்தது. கண்ணாடி வளையல்களைப் போல உடைந்து போகும் இயல்பைப் பெற்றிருந்தது. அத்தகைய அநித்திய சரீரம் அழிந்து போய்விட்டது. இப்போதோ அவர் எல்லா விதத்திலும் பரிபூரணராகவும்; மாறாத சுபாவம் உடையவராகவும் இருக்கிறார். அவர் நித்தியமானவர் ஆகி விட்டார். இனிமேல் அவருடைய உடல் அழியாது. ஆகவேதான், எளிதில் உடைந்து போகும் தன்மையுள்ள கண்ணாடி வளையல்களுக்குப் பதிலாக, உறுதியானவையும் சாசுவதமான சுபாவம் கொண்டவையுமான பொன் வளையல்களை இப்போது அணிந்து கொண்டுவிட்டேன்.''

ஆன்மிக வாழ்க்கையில் ஈடுபடும் உண்மையான சாதகர்கள், வாழ்க்கையை நோக்கும் முறையே வேறானதாக இருக்கும்.

57. சங்கரரும் சண்டாளனும்

ஒரு சமயம் மாடடிக்கும் இடத்திலிருந்து ஒரு புலையன் வந்துகொண்டிருந்தான். அவன் கழுத்தில் வைத்திருந்த காவடியின் இரண்டு பக்கங்களிலும், மாமிசம் அடங்கிய இரண்டு கூடைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

ஆதிசங்கரர் அப்போது கங்கையில் நீராடி விட்டு, புலையன் வந்துகொண்டிருந்த அதே வழியாக வந்து கொண்டிருந்தார். புலையன் தற்செய

லாகத் தவறி அந்த மகானின்மீது பட்டுவிட்டான். அவ்வளவுதான்! சங்கரருக்கு உடனே கோபம் வந்துவிட்டது. கோபத்துடன் அவர், ''அடே சண்டாளா! நீ என்மீது பட்டுவிட்டாயே!'' என்று அவனைப் பார்த்துப் பலமாகச் சப்தமிட்டார்.

புலையன் அதற்குப் பதிலாக, ''சுவாமி! நான் தங்கள்மீது படவுமில்லை, நீங்களும் என்மீது படவுமில்லை. தங்கள் ஆத்மா என்பது உடலா, மனமா, புத்தியா? இவற்றுள் நீங்கள் எது என்பதை ஆத்ம விசாரணை செய்து பாருங்கள். உங்களுடைய உண்மையான சொரூபம் எது என்பதை எனக்குச் சொல்லுங்கள். இந்த உலகம் எந்தச் சத்துவ ரஜஸ் தமோ குணங்களால்ஆக்கப்பட்டிருக்கிறதோ, அந்த மூன்று குணங்களில் எந்த ஒரு குணத்தோடும் உண்மையான ஆத்மாவிற்கு எந்தவிதத்திலும் சம்பந்தம் கிடையாது என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே!'' என்று சொன்னான்.

இதைக் கேட்ட சங்கரர் மௌனியானார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன இந்தக் கதையின் மூலம் சில உண்மைகளை நாம் தெரிந்துகொள்கிறோம்.

ஞானமொழி பாமர மக்களிடமிருந்து வெளிப்பட்டாலும், சிரத்தை பொருந்திய சாதகர்கள் அதை அப்படியே கிரகித்துக்கொண்டு விடுவார்கள்.

மனத்தூய்மையுடைய சாதகன் அபூர்வமாகத் தன் இலட்சியத்தை மறந்து போனாலும், வாழ்க்கை

யில் நிகழும் ஏதாவது ஒரு சாதாரண நிகழ்ச்சியின் மூலமும் விழிப்படைந்து, உடனே தன் இலட்சியத்திற்குத் திரும்பிப் போய்விடுவான். அப்படி ஏதாவது ஒரு வாய்ப்பை வழங்குவதன் மூலம் இறைவனே அவர்களை இரட்சிக்கிறுர்.

58. வேதம் படித்த பையன்கள்

ஒருவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களுக்குத் தக்க வயது வந்ததும் உபநயனம் நடந்தது. பிறகு, தமது மக்கள் இருவரையும் வேதாத்தியனம் செய்வதற்காகத் தந்தை ஒரு குருவிடம் அனுப்பி வைத்தார்.

பல காலத்திற்குப் பிறகு வேதங்களைப் படித்து முடித்த பின், இரண்டு பையன்களும் வீட்டிற்குத் திரும்பிஞர்கள். தந்தை அவர்கள் இருவரையும் பார்த்து, ''நீங்கள் வேதாந்தத்தைப் படித்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

பிள்ளைகள் இருவரும், ''படித்திருக்கிருேம்'' என்று சொன்ஞர்கள். ''நல்லது. அப்படியாஞல் பிரம்மம் எப்படிப்பட்டது என்று எனக்குச் சொல்லுங்கள்'' என்று கேட்டார் தந்தை. மூத்த மகன் வேதங்களிலிருந்தும் வேறு பல சாஸ்திரங்களிலிருந்தும் ஏராளமான மேற்கோள்களை ஒன்றன்பின் ஒன்ருக எடுத்துச் சொல்லி, ''தந்தையே! பிரம்மம் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாதது. இப்படி இப்படி எல்லாம் அது இருக்கிறது. அதையெல்லாம்

நான் அறிந்திருக்கிறேன்'' என்று விளக்கமாகச் சொல்லி, மேலும் சில ஆதாரங்களை எடுத்துக் கூறி முடித்தான்.

''குழந்தாய், நீ பிரம்மத்தை நன்ருகத் தெரிந்து கொண்டவனைப் போலத்தான் இருக்கிருய். இனி நீ உன் காரியங்களைக் கவனிக்கப் போகலாம்'' என்று தந்தை கூறினுர். பிறகு தந்தை இளைய மகனிடம் அதே கேள்வியைக் கேட்டார். ஆனுல் பையன் ஒரு வார்த்தையும் பேசாமல் பெளனமாக இருந்தான். எதையாவது சொல்லவும் அவன் முயற்சி செய்யவில்லை.

உடனே அப்போது அவனுடைய தந்தை, 'ஆம் குழந்தாய், நீ அறிவிப்பதுதான் சரியானது. அதீத சொரூபியைப்பற்றி விளக்கமாக ஒன்றுமே சொல்ல முடியாதுதான். சொல்ல ஆரம்பித்தால் அளவே இல்லாததற்கு ஓர் அளவு கற்பிக்க வேண்டிவரும். நித்தியத்திற்கு அநித்தியத்தையும், சம்பந்த மற்றதற்குச் சம்பந்தத்தையும் கற்பிக்க வேண்டிய நிலை வரும். நீ ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்ததே, ஆயிரமாயிரம் சாஸ்திரங்களிலிருந்து ஆதாரங்களை எடுத்துக் காட்டி விளக்கியதற்கு மேலாகும்'' என்று சொன்னுர்.

பிரம்மம் உண்மையில் எப்படிப்பட்டது என்பதை உள்ளபடியே ஒருவராலும் எடுத்துச் சொல்ல முடியாது; அது அனுபவத்திற்கு மட்டுமே உரியது என்பதை ஸ்ரீராமகிருஷ்ணர் மேற்கூறிய கதையின் மூலம் விளக்குகிருர். மேலும் அவர் கூறுகிருர்:

''பிரம்மம் எப்படிப்பட்டது? அது வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. சமுத்திரத்தைப் பார்த்திராத ஒருவனுக்கு அது எப்படிப்பட்டதென்று சொல்லும்படி வேருெருவனை நியமித்தால், அவன் ''அது ஒரு பெரிய நீர்ப்பரப்பு; எங்கே பார்த்தாலும் தண்ணீர் தான்'' என்று மட்டுமே சொல்லக்கூடும்.

வேதங்கள், தந்திர சாஸ்திரங்கள், புராணங்கள் ஆகிய உலகிலுள்ள எல்லாச் சாஸ்திரங்களுமே வாயிலிருந்து கக்கிய சோற்றைப்போல எச்சிலாகிவிட்டன என்று சொல்லலாம். ஏனெனில் அவை அடிக்கடி மனிதர்களுடைய வாயினுல் உச்சரிக்கப்படுகின்றன. அகன்ற ஸ்வரூபமான பிரம்மமோ அப்படி ஒரு போதும் எச்சிலானதில்லை. ஏனென்ருல் இதுவரையில் வார்த்தைகளால் அதை விவரித்துச் சொல்ல ஒருவராலும் முடியவில்லை.

ஞானம் அஞ்ஞானம், நன்மை தீமை, தர்மம் அதர்மம் இப்படிப்பட்ட துவந்தங்களுக்கு அப்பாலும் மேற்பட்டும் பிரம்மம் இருக்கிறது.

பிரம்மம் மன வாக்குக்கு அதீதமானது; தாரணை நியமங்களுக்கும் அதீதமானது. சுருக்கமாகச் சொன்னுல் எல்லாவிதமான விவகார நிலைக்கும் அப்பாற்பட்டதாக அது விளங்குகிறது.

59. பிராம்மணன் பெற்ற படிப்பினை

ஒரு சமயம் வித்வானாகிய ஒரு பிராம்மணன் ஓர் அரசனிடம் சென்றான். அரசனிடம் இவன், ''மகா ராஜாவே! நான் சாஸ்திரங்களை எல்லாம் நன்றாகப் படித்திருக்கிறேன். உங்களுக்குப் பாகவதத்தைப் போதிக்கலாமென்று வந்திருக்கிறேன்'' என்று சொன்னான்.

அந்த அரசன் புத்திசாலி. பிராம்மணனைவிடவும் விவேகியான அரசன், 'பாகவதத்தை உண்மை யாகவே நன்றாகப் படித்த ஒருவன் தன் ஆத்மாவை பற்றித்தான் மேலும் மேலும் நன்றாகத் தெரிந்து கொள்ள முயற்சி செய்வானே தவிர. இப்படி அரசவைக்கு வந்து புகழையும் செல்வத்தையும் தேடிக் கொண்டிருக்க மாட்டான்' என்று நினைத்தான்.

ஆகவே அந்த அரசன் பிராம்மணனிடம், ''அப் படியா? நல்லது, சுவாமி, தாங்களே இன்னும் பாக வதத்தை நன்றாகப் படிக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. முதலில் நீங்கள் நன்றாகப் பாகவ தத்தை படித்துத் தெரிந்துகொண்டு வந்தால் உங் களுக்கு நான் சீடனாவேன் என்று உறுதி தருகிறேன்'' என்று பதில் சொன்னான்.

'நான் இத்தனை வருடங்களாக பாகவதத்தைத் திரும்பத் திரும்ப எத்தனை எத்தனையோமுறை படித் திருக்கிறேன். அப்படியிருக்கும்போது இந்த அரசன் மதியீனமாக என்னைப் பார்த்துப் பாகவதத்தை

நன்ருகப் படிக்காதவன் என்று சொல்லிவிட்டானே! என்று நினைத்துக் கொண்டே பிராம்மணன் வீடு போய்ச் சேர்ந்தான்.

மீண்டும் ஒரு முறை அவன் மிகுந்த கவனத்தோடு பாகவதத்தைப் படித்தான். பிறகு திரும்பவும் மன்னனைச் சென்று சந்தித்தான். அரசன் மீண்டும் முன்பு சொன்ன அதே பதிலையே சொல்லிப் பிராம்மணனைத் திரும்பவும் அவனுடைய வீட்டிற்குத் திருப்பி அனுப்பிவிட்டான்.

பிராம்மணன் மிகவும் மனம் வருந்திஞன். ஆஞல் அதே சமயத்தில் அவனுக்கு, 'அந்த அரசன் இப்படிச் சொல்வதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டும்' என்று தோன்றியது.

ஆகவே வீடு திரும்பிய பிராம்மணன் தன் அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டான். தனிமையான இடத்தில் உட்கார்ந்து, முன்பு எப்போதுமே இல்லாத அளவில் மனதை ஒருமுகப் படுத்தி மிகமிகக் கவனமாக ஆழ்நது ஆழ்ந்து படிக்க ஆரம்பித்தான். அப்படிப் பாகவதம் படிப்பதில் அவன் தன்னை மறந்து அதிலேயே மூழ்கி மனம் தோய்ந்து போஞன்.

அவ்விதம் பாகவதத்தைப் படிக்கப் படிக்க, அதன் நுட்பமான உண்மைகளெல்லாம் அவனுக்கு இப்போது புரிய ஆரம்பித்தன. பாகவதத்தின் இரகசிய உட்பொருள்கள் அவனுக்குப் புரியப், புரிய, அவனது உள்ளமும் கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்

பித்தது. உள்ளம் தெளிவைப் பெற்றதன் விளைவாக, 'செல்வம், புகழ், பாராட்டு, அரசவையினர் தொடர்பு ஆகியவற்றை எல்லாம் தேடி ஓடுவது எத்தகைய முட்டாள்தனமான செயல்கள்? இவை உண்மையில் மிகமிக அற்பமானவை!' என்ற உண்மை அவனது உள்ளத்தில் ஆழ்ந்து பதியத் துவங்கியது. அது காரணமாக இவற்றைத் தேடிப் போகவேண்டும் என்ற எண்ணமும் அவனது உள்ளத்தை விட்டு விடை பெற்றுக்கொண்டது.

அந்த நாள் முதல் அரசவைக்குப் போகும் எண்ணத்தை முற்றிலும் கைவிட்டான். ஆண்டவனைத் தொழுதும் ஈசுவர சேவையில் ஈடுபட்டும் ஆன்மிக வாழ்க்கையில் தன்னைப் பரிபூரணனுக்கிக் கொள்வதற்காக மட்டுமே வாழவேண்டும் என்ற அபாரமான மனவுறுதியுடன் தியானத்தில் உட்கார்ந்துவிட்டான். ஆம்,இப்போதுஅவன் பாகவதம் படித்த உண்மையான 'பண்டிதன்' ஆகிவிட்டான்.

சில ஆண்டுகள் உருண்டோடின. ஒரு நாள் அரசனுக்கு அந்தப் பிராம்மணனுடைய நினைவு வந்தது.

'இப்போது பிராம்மணன் எப்படி இருக்கிருன்? என்ன செய்துகொண்டிருக்கிருன்?' என்பதைப் பார்ப்பதற்காக மன்னன் தானே பிராம்மணனுடைய வீட்டைத் தேடிச் சென்ருன்.

அங்கே பிராம்மணன் தெய்வத்தின் திருவருளையே பெற்றுவிட்டதால் முகத்தில் பிரம்ம தேஜஸ் பிரகாசிக்க இருந்ததை மன்னன் கண்டான்

தெய்வீகக்கலை வீசிய பிராம்மணன் முன்னால் அரசன் மண்டியிட்டுப் பணிந்து, ''சுவாமி! இப்போது தாங்கள் சாஸ்திரங்களின் உட்பொருளை மிக நன்றாக உணர்ந்துகொண்டிருக்கிறீர்கள். தாங்கள் கிருபை கூர்ந்து ஏழையாகிய அடியேனை ஏற்பதாக இருந்தால் நான் இப்போதே உடனே தங்களுடைய சீடனாகி விடுகிறேன்'' என்று சொல்லிப் பிரார்த்தித்தான்.

ஸ்ரீராமகிருஷ்ணர் மேலே குறிப்பிட்ட பிராம் மணப் பண்டிதரின் மனநிலையை விளக்கும் வகையில் அமைந்த பல உதாரணங்களையும் கருத்துக்களையும் பரமஹம்சதேவரின் உபதேசங்களில் விரிவாகப் பார்க்கலாம். அவற்றின் ஒன்று கீழே கொடுக்கப் படுகிறது.

வீட்டிற்கு வெளியே சிறு குழந்தைகள் மரப் பொம்மைகளை வைத்துக் கொண்டு, எந்தவிதமான பயமும் கவலையும் இல்லாமல் மனம்போனபடி விளை யாடுகின்றன. ஆனால் அங்கு அவர்களுடைய தாய் வந்தவுடனே, விளையாடிக் கொண்டிருந்த மரப் பொம்மைகளை எல்லாம் குழந்தைகள் தூக்கி எறிந்துவிட்டு, ''அம்மா! என் அம்மா!'' என்று கூவிக் கொண்டே அவளிடம் ஓடிவருகின்றன. ஓ மனிதனே! நீயும் இப்போது குழந்தைகளைப் போலவே, இந்த ஜடமாகிய உலகில் பணம், கௌரவம், புகழ் போன்ற விளையாட்டுப் பொருள்களை வைத்துக்கொண்டு விளை யாடுகிறாய். அதனால் கவலை, பயம் போன்றவற்றை உணராமல் இருந்து கொண்டிருக்கிறாய். ஆனால், எப்போதாவது ஒரே ஒரு முறை நீ தெய்வீக

அன்னையைக் கண்டுவிட்டால் அதன் பிறகு மேலே சொன்ன இலௌகிக இன்பம் எதிலும் நீ சுகம் காணமாட்டாய். அவற்றை எல்லாம் வீசி எறிந்து விட்டு நீ அவளிடமே ஓடுவாய்.

கடவுளைத் தரிசித்த பிறகு ஒருவன் முற்றிலும் புதிய மனிதனுக மாறிவிடுகிருன்.

60. அடித்தவனே பால் தருகிருன்!

ஓர் ஊரிலே ஒரு மடம் இருந்தது. அந்த மடத்திலிருந்த சன்னியாசிகள் தினந்தோறும் பிட்சைப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு வெளியே பிட்சைக்காகப் போவது வழக்கம்.

ஒருநாள் சன்னியாசி ஒருவர் வழக்கப்படி தமது பிட்சைக்காக வெளியே சென்றிருந்தார். அப்போது ஒரு காட்சி அவருடைய கண்களில் பட்டது. ஜமீன்தார் ஒருவன் ஏழைக் குடியானவன் ஒருவனைச் சிறிதும் இரக்கம் இல்லாமல் கடுமையாக அடித்துக் கொண்டிருந்தான். இதை கண்டதும் கருணை வாய்ந்த அந்தச் சந்நியாசி, குடியானவனை அடிப்பதை நிறுத்த வேண்டுமென்று ஜமீன்தாரைக் கேட்டுக்கொண்டார். ஆனல் ஜமீன்தாருக்கோ கோபம் பொங்கிக்கொண்டிருந்தது கோபத்தால் தன்னை மறந்த ஜமீன்தார், தன் கோபத்தையெல்லாம் குற்றமில்லாத அந்தத் துறவியின்மீது செலுத்தினுன். அவன் உடனே சன்னியாசி மீது பாய்ந்து அவரையும் அடிஅடியென்று அடித்து

விட்டான். அதனுல் அந்த சாது நினைவு தப்பித் தரையில் விழுந்துவிட்டார்.

சன்னியாசிக்கு நேர்ந்த இந்த நிலைமையை யாரோ ஒருவன் பார்த்தான். அவன் மடத்திற்கு ஓடோடிச் சென்று நடந்த செய்தியை அங்குள்ள சன்னியாசிகளிடம் தெரிவித்தான். மடத்தைச் சேர்ந்த மற்ற சந்நியாசிகள் உடனே அவர் விழுந்து கிடந்த இடத்திற்குப் புறப்பட்டு வந்தார்கள். தமது சகோதரராகிய சன்னியாசி அங்கே மெய் மறந்து விழுந்து கிடப்பதைக் கண்டனர். அவர்கள் அனைவருமாகச் சேர்ந்து நினைவு தப்பிப் போயிருந்த சன்னியாசியை மடத்திற்குத் தூக்கியெடுத்துப் போய், ஒரு படுக்கையின் மீது கிடத்திஞர்கள்.

என்ருலும் அந்த சாதுவுக்கு நீண்டநேரம்வரையிலும் நினைவு திரும்பவில்லை. ஆதலால் மற்றச் சன்னியாசிகள் கவலையும் துக்கமும் கொண்டனர். அவருக்குக் காற்று வரும்படியாக விசிறிஞர்கள். அவருடைய முகத்தில் தண்ணீரைத் தெளித்துத் துடைத்தனர். அவர்களில் ஒருவர், அவருக்குக் குடிக்கச் சிறிது பால் கொடுக்கலாம் என்ற யோசனையைச் சொன்ஞர். அதன்படியே பாலை வார்த்து நினைவு திரும்புவதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தனர். கொஞ்சம் கொஞ்சமாக அவருக்குச் சுயநினைவு வர ஆரம்பித்தது. உணர்ச்சி திரும்பியதும் அவர் கண்களைத் திறந்து சுற்றிலும் பார்த்தார். அப்போது சுற்றியிருந்த சன்னியாசிகளில் ஒருவர், அவருக்குத் தமது சகோதரர்களாகிய

சன்னியாசிகளை அறிந்து கொள்ளக்கூடிய நல்ல ஞாபகம் வந்து விட்டதா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக, ''மகராஜ், இப்போது தங்களுக்குப் பால் வார்த்துக்கொண்டிருப்பது யார் என்பது தெரிகிறதா?'' என்று கேட்டார். அதற்கு அந்த சாது, ''தம்பி, யார் என்னை அடித்தானோ அவனே தான் இப்போது பால் கொடுத்துக் கொண்டிருக்கிறான்'' என்று பதில் சொன்னார்.

ஈசுவரனுடைய தரிசனத்தைப் பெற்று நன்மை தீமை, பாவம் புண்ணியம் ஆகியவற்றைக் கடந்து நின்றாலொழிய, இப்படிப்பட்ட உயர்ந்த ஆத்ம சொரூபம் சித்திக்காது—என்று சொல்கிறார் ஸ்ரீராம கிருஷ்ணர்.

''பார்ப்பதெல்லாம் கேட்பதெல்லாம்பிரம்மமே யன்றி வேறல்ல. உண்மை அனுபவத்தை அடைந்த பிறகு ஒருவன் உலகை (இரண்டற்ற) அத்விதீயப் பிரம்மமாகவே காண்கிறான்.'' —ஆதிசங்கரர்

61. எதை முதலில் செய்ய வேண்டும்?

ஒரு கிராமத்திலே பத்மலோசனன் என்ற இளைஞன் இருந்தான். மக்கள் அவனை விளையாட்டாக 'பொடோ' என்று அழைப்பது வழக்கம்.

அந்த ஊரிலே மிகப் பாழடைந்த கோவில் ஒன்று இருந்தது. அதில் பூஜைக்கு விக்கிரகம் இல்லை. இடிந்து கிடந்த அதன் சுவர்களில் அரசமரங்களும்

வேறு பல மரங்களும் முளைத்தன. கோயில் முழுவதும் புல் பூண்டு நிறைந்து வளர்ந்திருந்தது. அதோடு ஏராளமான பறவைகளும் வௌவால்களும்கூட அங்கு வாழ்ந்து வந்தன. கோயில் தரை முழுவதையும் தூசியும், வௌவால்களின் புழுக்கையும் மூடி மறைத்திருந்தன. ஊரார் அந்தக் கோயிலுக்குச் செல்வதை அடியோடு நிறுத்திக் கொண்டு விட்டார்கள்.

ஒரு நாள் மாலை, திடீரென்று அந்தக் கோயிலிலிருந்து மணி ஓசையும் சங்கு முழங்கும் சப்தமும் கேட்டன. ஊர்மக்கள் சப்தத்தைக் கேட்டார்கள். முதலில் அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. பிறகு அவர்கள், யாரோ ஒரு பக்தர் புதிதாகக் கோயிலில் சுவாமி விக்கிரகத்தை வைத்துப் பூசை செய்கிறார் போலும் என்று நினைத்தார்கள்.

உடனே ஆண் பெண் குழந்தைகள் என்று ஊரில் இருக்கப்பட்டவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து வெகு ஆவலுடன் கோயிலை நோக்கி ஓடினார்கள். அவர்கள் அனைவரும் கோயில் வாசலில் கைகளைக் கூப்பிக் கொண்டு நின்றார்கள். உள்ளேயிருந்து சப்தம் வந்து கொண்டே இருந்தது. விரைவில் சுவாமி தரிசனம் செய்யப்போகிறோம் என்ற ஆவலில் ஊரே அங்குக் கூடி விட்டது.

அப்படிக் கூடியிருந்த மக்களின் ஒருவனுக்கு, மற்றவர்களைக் காட்டிலும் அதிக ஆவல் பொங்கியது. அவன் கோயில் கதவுகளை மெல்லத் திறந்து

உள்ளே எட்டிப்பார்த்தான். அங்கே ஒரு மூலையில் 'பொடோ' நின்று மணியை அடித்துச் சங்கு ஊதுவதைக் கண்டான். இத்தனை ஆரவாரத்திற்கும் பத்மலோசனன் தான் காரணம் என்பதை அவன் தெரிந்துகொண்டான். அவனுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. கோயில்தரை, முன்புபோலவே அசுத்தமாக இருந்தது. உள்ளே சுவாமி விக்கிரகமும் இல்லை.

இதை எல்லாம் பார்த்ததும் அவன் ''அடே 'பொடோ!' கோயில் விக்கிரகம் கிடையாது! உள்ளே கூட்டிப் பெருக்கிச் சுத்தப்படுத்தவும் நீ சிரமப்படவில்லை. இரவும் பகலும் பதினொரு வெளவால்களும் ஓயாமல் கூச்சல் போடுகின்றன. அடே! இப்படி எல்லாம் சங்கை ஊதி நீ ஆரவாரம் செய்தது வீணாகப் போயிற்றே!'' என்று சொல்லி கத்தினான்.

அதைப் போலவே, உன் உள்ளமாகிய கோயிலில் பகவானை நீ பிரதிஷ்டை செய்ய விரும்பினால், அதாவது ஈசுவரனைத் தெரிந்துகொள்ளவிரும்பினால் உனக்குக் கடவுளை அடைய உண்மையில் விருப்பம் இருந்தால்—வீணாகச் சங்கை மட்டும் முழங்கிக் கொண்டிருப்பதால் என்ன பிரயோஜனம்? இப்படி வெறும் கூச்சல் போடுவதனால் பயன் ஒன்றும் ஏற்படாது. முதலில் உன் உள்ளத்தை நீ தூய்மைப் படுத்திக் கொள்ளும் வழியைப் பார். உள்ளம் முதலில் தூய்மை அடைய வேண்டும். பிறகு ஈசுவரன் தாமாகவே அங்கு வந்து வசிப்பார். வெளவால்களின் புழுக்கை எங்கு பார்த்தாலும்


சூழ்ந்திருந்தால், கோயிலிலே சுவாமி விக்கிரகத்தை எழுந்தருளச் செய்யவா முடியும்?

மேலே சொன்ன பதினொரு வௌவால்களும் பதினொரு இந்திரியங்களைக் குறிப்பிடுகின்றன. அதாவது ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, மனம் ஒன்று.

முதலாவதாக உன் உள்ளத்திலேயே மூழ்கி நீ மணிகளைப் பெறுவாயாக. மற்றவை எல்லாவற்றையும் பிறகு வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாம். முதலில் உன் இதயத்தில் இறைவனை நீ எழுந்தருளச் செய். அதன் பிறகு சொற்பொழிவு, பிரசாரம் ஆகியவற்றில் வேண்டிய மட்டும் நீ ஈடுபடலாம்.


ISBN 81-7120-177-6











Sri Ramakrish r

Chonna k thaigal (Tamil) Rs. 1.

201011